
# ஸ்ரீ தமிழ்

உண்மை நின்றிட வேண்டும்


மலர்:01, இதழ்: 18 | மாதமிருமுறை | 01-16, ஜூலை 2026 | ₹30/-

SHREE TAMIZH, Vol.01, Issue 18 | Fortnightly | JULY 01-16, 2026

ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/-**
**ஆண்டு சந்தா: ரூ 600/-**

# தேசிய ஒருமைப்பாடு ஓங்கட்டும் ! தேசம் ஒளிரட்டும் !

இந்த நன்நாளுக்காக பாரதத் தாய், விடுதலைக்குப் பின் சுமார் 79 ஆண்டுகள் காத்திருந்தாள். கொல்கட்டா பாரதத்துடன் இன்று இணைந்திருப்பதற்குக் காரணமான கோபால் முகர்ஜி என்ற கோபால் பத்தா. மத்திய கொல்கத்தா பகுதியில் அமைந்துள்ள சுகவர்தி நிழற்சாலை என்ற பெயரை அகற்றிவிட்டு கோபால் பத்தாவின் பெயரை, கொல்கட்டா மாநகராட்சி இந்தச் சாலைக்குச் சூட்டி, வரலாற்றுச் சிறப்புமிக்கப் போராட்டத்தைக் கௌரவித்துள்ளது.

1946 ஆம் ஆண்டு, நேரடி நடவடிக்கையின் வாயிலாக, ஹிந்துக்களை இன அழிப்புச் செய்தான் அன்றைய வங்காளப் பிரதமர் ஹுசைன் சுகவர்தி. வெள்ளைக்கார ஆங்கிலேயனின் உதவியுடன் நடந்த இந்த இன அழிப்பைத் தடுத்து நிறுத்த, ஹிந்துக்களை ஒருங்கிணைத்து, எதிர் தாக்குதலில் ஈடுபட்டார் கோபால் பத்தா. முஸ்லீம் லீக்கும், வெள்ளையனும் பணிந்தனர்.

ஹிந்துக்களை கொல்கட்டாவை விட்டு வெளியேற்றும் சதி முறியடிக்கப்பட்டது. வங்கத்தில் பல பகுதிகள் பாகிஸ்தானுடன் செல்லாமல் பாதுகாக்கப்பட்டது. இந்த மாமநிதரின் பெயரை, சாலைக்குச் சூட்டி, நம் நாட்டின் வீர வரலாற்றையும், வெற்றி வரலாற்றையும், தன்மான உணர்வையும் வரும் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் பணியைச் செய்த கொல்கட்டா மாநகராட்சிக்குப் பாராட்டுகள்.

மேற்கு வங்கத்தில் திரு.சுவேந்து அதிகாரி அவர்கள் முதல்வராகப் பொறுப்பெடுத்தது முதல், பாரதத்தின் பாதுகாப்பிற்குத் தடையாக இருந்த மேற்கு வங்க அரசின் முந்தைய கொள்கைகளை மாற்றி, எல்லைப்புற வேலி அமைத்தல், நிர்வாகச் சீரமைப்பு போன்றவற்றை முன்னெடுத்து வருவது பாராட்டுக்குரியது. நக்சல் பயங்கரவாதம் முடிவுக்கு வந்து விட்டது.

காஷ்மீரில் பயங்கரவாதம் ஒழிவதுடன், பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீரில் பாகிஸ்தானுக்கு எதிரானப் போராட்டங்கள் வலுப்பெறுகின்றன. கனடா நாடு முதல் முறையாக காலிஸ்தான் பயங்கரவாதிகள் 1985 ஆம் ஆண்டு ஏர் இந்தியா விமானத்திற்கு குண்டு வைத்தார்கள் என்று கூறியுள்ளது. காலிஸ்தான் பயங்கரவாதிகளில் புகலிடமாக கனடா நாடு இருக்காது என்பதை இந்த ஒப்புதல் உறுதிப்படுத்துகிறது. இது பஞ்சாபில் தூண்டப்படும் பிரிவினைவாதத்திற்குப் பேரிடியாகும்.

முந்தைய தி.மு.க அரசு போல் இல்லாமல், மத்திய அரசுடன் நல்லிணக்கம் பேணுவோம் என்று த.வெ.க அமைச்சர் கூறியுள்ளார். இது வரவேற்கத்தக்க முடிவு. இந்த ஆண்டு, அனைத்து மாநில முதல்வர்களும், நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்துகொண்டது, அரசியலைக் கடந்து நாட்டின் வளர்ச்சியும், ஒருமைப்பாடும் மேலானவை என்று பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. தேசிய ஒருமைப்பாடு ஓங்கட்டும் ! தேசம் ஒளிரட்டும் !

# விஜயை சந்தித்த அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் தமிழகத்தை தனி நாடாகச் சித்தரித்த பதிவு- முதல்வர் ஜோசப் விஜய் கண்டிக்காதது ஏன் ?

பால கௌதமன்



சென்னையில் நடந்த அமெரிக்காவின் 250 வது சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு. செர்ஜியோ கோர் ஜூன் மாதம் 22 ஆம் தேதி சென்னை வந்தார். அன்று மதியம், தமிழகத் தலைமைச் செயலகத்திற்குச் சென்று முதல்வர் ஜோசப் விஜயை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பிற்குப்பின் செர்ஜியோ கோர் சமூக வலைத்தளத்தில் தன் சந்திப்பு குறித்து செய்தி ஒன்றைப் பதிவிட்டார். அந்தப் பதிவில்

இன்று, @CMOTamilnadu-இன் திரு. சி. ஜோசப் விஜயை சந்தித்து அவருக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். மேலும், வர்த்தகம் மற்றும் முதலீடு, தொழில்நுட்பம், வழங்கல் சங்கிலிகள், உற்பத்தித் துறை, மருந்துத் தொழில் மற்றும் ஆற்றல் உள்ளிட்ட பல துறைகளில் எங்கள் இரு நாடுகளுக்கிடையே மேலும் ஆழமான ஒத்துழைப்பிற்கான மிகப்பெரிய வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினோம் என்று தெரிவித்தார். இந்தப் பதிவில் உள்ள விஷமத்தனத்தைப் பாருங்கள் !

எங்கள் இரு நாடுகளுக்கிடையே மேலும் ஆழமான ஒத்துழைப்பிற்கான மிகப்பெரிய வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினோம்!

அப்படியென்றால் தமிழகம் தனி நாடா? தமிழகம் இந்தியாவிலுள்ள மாநிலம் தானே! இப்படி ஒரு கருத்தை செர்ஜியோ கோர் ஏன் வெளியிட்டார்? முன்னாள் அமெரிக்கத் தூதர் எரிக் கார்செட்டி தனது பதவில் உறுதிப்படுத்தல் விசாரணைகளின் (confirmational hearing) போது, இந்தியாவில் அமெரிக்கா "துணை-தேசிய இராஜதந்திரம்" (sub-national diplomacy) மேற்கொள்ளும் என்று கூறியிருந்தார். அப்போது, மாநிலங்களுடன் அமெரிக்கத் தூதரகம் தொடர்பு கொள்வது இயல்பான ஒன்றாக இருந்தாலும், அதனை "துணை-தேசிய இராஜதந்திரம்" என்று வரையறுப்பதின் நோக்கம் என்ன? இது இந்தியாவில் துணை-தேசியவாதத்தை (sub-nationalism) ஊக்குவிக்க உதவும்.

அமெரிக்காவில் உள்ள இந்திய தூதர் மற்றும் பிற அதிகாரிகள், அந்நாட்டின் பல்வேறு மாநிலங்களுடன் தொடர்பு கொள்ளும்போது, அதனை நாம் "துணை-தேசிய இராஜதந்திரம்" என்று அழைத்தால் அமெரிக்கா ஏற்றுக் கொள்ளுமா?

அதேபோல், அமெரிக்கத் தூதர் இந்தியாவின் மாநிலங்களுக்கு வருகை தரும் போது முதலமைச்சர்களைச் சந்திப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் அது மாநில அளவில் அமெரிக்காவின் பொருளாதார மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கிலேயே இருக்க வேண்டும்; "துணை-தேசிய இராஜதந்திரம்" எனப்படும், பிரிவினை அரசியல் அர்த்தங்களைக் கொண்ட அணுகுமுறையாக இருக்கக் கூடாது.

இந்தப் பிரிவினை சொல்லாடலை தமிழக முதல்வர் ஜோசப் விஜய் கண்டிக்கவில்லையே ஏன்? தி.மு.க ஆட்சியில் ஒன்றிய அரசு என்று மத்திய அரசை குறிப்பிட்ட நடைமுறையை மாற்றி, இந்திய அரசு என்று விஜய் எழுதியதன் பின்னணி, இந்தியா என்பது வேறு நாடு என்ற பொருளிலா என்ற கேள்வியும் எழுகிறது. இந்தியாவையும், இலங்கையையும் பிரித்துத் தனி நாடு காணவேண்டும் என்று சொன்ன இலங்கை எம்.பி இராமநாதன் அர்சுனனை அழைத்து, இந்தியாவால் தடை செய்யப்பட்ட அமைப்புக்களையும், அரசியலையும் இந்திய மண்ணில் பேச வைத்துக் கொண்டாடியது த.வெ.க அரசு. பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ தொடர்புடைய

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி ராஃப் ஹக்கிம்மை சந்தித்தார் த.வெ.க அமைச்சர் ஆதவ் அர்ஜுனா.

இந்நிலையில், அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி வெளியுறவுத்துறை செயலாளர் பால் கபூர், உலகின் மிகவும் பரபரப்பான கப்பல் போக்குவரத்து பாதைகளில் கடல்சார் இணைப்பை வலுப்படுத்தும் வகையில், இலங்கை கடற்படைக்கு Fleet Broadband செயற்கைக்கோள் தொடர்பு தொழில்நுட்பத்தை அமெரிக்கா வழங்கும் என்று ஜூன் 23 அன்று அறிவித்துள்ளார்.

மேம்பட்ட அமெரிக்க செயற்கைக்கோள் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தால் இயங்கும் Fleet Broadband அமைப்பு, கப்பல்-முதல்-கப்பல் மற்றும் கப்பல்-முதல்-கரை தொடர்புகளை வழங்கும். இதன் மூலம் கடற்கரை எல்லைகளுக்கு அப்பால் செயல்படும் போதும் குரல், தரவு மற்றும் தகவல் பரிமாற்றம் செய்யலாம். இந்த அமைப்பு, இந்தியப் பெருங்கடலின் தொலைதூர பகுதிகள் உட்பட பரந்த கடல்சார் பரப்புகளில், இலங்கை கடற்படை தனது தலைமையகம், விமானங்கள் மற்றும் பிற கப்பல்களுடன் நிகழ்நேரத் (real-time) தொடர்பை பராமரிக்க உதவும். இதன் வாயிலாக, தமிழகக் கடற்கரையோரப் பகுதிகளை அமெரிக்க கண்காணிப்பின் கீழ் கொண்டுவர இலங்கையை அமெரிக்கா பயன்படுத்தியுள்ளது.

இந்தாண்டு மார்ச் மாதத்தில், அமெரிக்க பிரஜையான வேன் டைக் என்பவர் கொல்கட்டாவில் கைது செய்யப்பட்டார். அவருடன் 6 உக்ரேனியர்களும் கைது செய்யப்பட்டனர். நம் நாட்டின் மிஜோராம் மாநிலத்தின் வழியாக, வேற்று நாட்டினர் அனுமதியின்றி நுழையத் தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குச் சென்றதுடன், மியான்மர் நாட்டிற்குச் சென்ற குற்றச்சாட்டு இவர் மீது உள்ளது. மேலும், இந்தியாவிற்கு எதிரான பிரிவினைவாத, பயங்கரவாத அமைப்புக்களுக்கு உதவியதற்காக இவர் கைது செய்யப்பட்டார். இந்தச் சதிகளை வேன் டைக் செய்யத் தேர்ந்தெடுத்த மாநிலம் மிசோரம். இந்த மாநிலத்தின் முதல்வர் லால்துஹோமா, இந்தியா, வங்கதேசம், மியான்மர் வசிக்கும் ஜோ இன மக்கள் ஒற்றுமை குறித்துப் பேசுகையில், "ஒரு நாட்டுக்கு புவியியல் எல்லைகள் இருக்கலாம்; ஆனால் ஒரு உண்மையான தேசம் அந்த எல்லைகளைக் கடந்து உயர்ந்து நிற்கிறது" என்று பேசினார். ஜோ இன மக்களைத் தனி தேசம் என்றும், இந்திய இறையாண்மையை மதிக்காமல் பேசிய இவரது 2024 ஆம் ஆண்டுப் பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியது. ஒரு மேற்கத்திய நாடு, வங்கதேசம், மியான்மர் உள்ளிட்ட நாடுகளைப் பிரித்து கிறிஸ்தவ நாட்டை உருவாக்கும் சதியில் ஈடுபடுகிறது என்று அப்போதைய வங்கதேச அதிபர் ஷேக் ஹஸீனா குறிப்பிட்டார். கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மிஜோராமை ஆளும் லால்துஹோமாவும் கிறிஸ்தவர், ஜோசப் விஜயும் கிறிஸ்தவர்.

மே மாத இறுதியில், இந்தியாவிற்கு விஜயம் செய்த அமெரிக்க வெளியுறவு செயலாளர் திரு.மார்கோ ரூபியோ, தனது அரசு அலுவல்களைத் தொடங்கும் முன், கொல்கட்டாவில் அமைந்துள்ள தெரசாவின் மிஷினரீஸ் ஆப் சாரிட்டி ( Missionaries of Charity) அமைப்பின் தலைமையகத்திற்குச் சென்றார். இந்த நிறுவனத்தின் மீது அன்னிய நன்கொடை ஏய்ப்புக் குற்றச்சாட்டு உள்ளது. இந்தப் பயணத்தின்போது, அம்மாநில முதல்வர் திரு.சுவேந்து அதிகாரியை ரூபியோ சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதத்தைச் சுற்றியுள்ள பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் ஆட்சிக் கலைப்புப் போராட்டங்களின் பின்னணியில் அமெரிக்கா இயங்கியது. வங்கதேசத்தில், புது அரசு பொறுப்பெடுத்தவுடன், தற்காலிக நிர்வாகத்தைத் தலைமையேற்க அமெரிக்காவிலிருந்து வந்த யூனஸ், அமெரிக்காவிற்கே திரும்பச் சென்றுவிட்டார். இந்தியாவைக் குறிவைக்க, நம் அண்டை நாடுகளை தன்வசம் கொண்டுவரும் அமெரிக்கச் சதியின் பின்னணியில், இந்த செர்ஜியோ கோரின் துணை தேசிய இராஜதந்திரத்தைப் பொருத்திப்பார்த்தால், அமெரிக்காவின் சதியை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

தமிழகத்தில் நாள்தோறும், சபாநாயகர் முதல் அமைச்சர்கள் வரை, கிறிஸ்தவக் கூட்டங்களில் பங்கெடுப்பதுடன், விஜயின் வெற்றி கிறிஸ்தவ வெற்றி என்று சொல்லிவருகிறார்கள். சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கிறிஸ்தவ போதகர், இந்தியாவில் சத்ருகள் நடுவில் ஆளுமை செய்வார். இதற்காக கர்த்தர் ஆசீர்வதித்திருக்கிறார் என்று பேசியுள்ளார். இதுபோன்ற நிகழ்வுகள், கிறிஸ்தவ விஜய்க்கு எதிராக அனைவரும் இருப்பது போலவும், கிறிஸ்தவர்களின் இரட்சகர் விஜய் என்று கிறிஸ்தவர்களுக்கு அடையாளப்படுத்தி, மதமாற்றத்தை ஊக்கப்படுத்தும் செயலும் நடந்து வருகிறது. ஒரு கிறிஸ்தவ முதல்வர் ஆளும் பெரிய மாநிலம் என்பதால், தமிழகம் அமெரிக்காவின் கவனத்தை ஈர்த்துள்ளது. மிஜோரம் கிறிஸ்தவ முதல்வரின் செயல்பாட்டை ஒத்தே ஜோசப் விஜையின் செயல்பாடும் அமைய வேண்டும் என்ற அமெரிக்காவின் எதிர்பார்ப்பை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதுபோன்ற சதிச்செயல்களை, மத்திய அரசு தடுப்பதுடன், அமெரிக்க தூதரை கண்டித்து, இந்தப் பதிவை வாபஸ் வாங்க உத்தரவிட வேண்டும். அமெரிக்காவின் இந்தக் கொள்கையை கைவிட இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# குறிவைத்து தாக்கிய தற்குறிகள்... சித்தம் கலங்கிய அப்பா...

காளைமாடன்



தற்குறிகள், தற்குறிகள் என்று கேலி பேசினார்கள். பேசிய ஒவ்வொரு அமைச்சரும் குறி தவறாமல் அடித்த அடியில் தறிகெட்டு ஓட்டமெடுத்தனர் திராவிட மூட்டை முன்னாள் அமைச்சர்கள்.

வாயைத் திறங்கள் முதல்வரே, ‘வாயைத் திறங்கள் முதல்வரே!’ என்றார்கள்...வாயைத் திறந்தார் முதல்வர். அது வாயடி அல்ல பேயடி என்பதால் வாயைத் திறக்க முடியாமல் வெடவெடத்துப் போனார்கள் திராவிட மூட்டை சட்டமன்ற பிரதிநிதிகள்.

‘அப்பாவை’த் தேடினார். சபாநாயகர் அனுமதியோடு முன்னாள் முதல்வர் பொது வெளியில் காட்டிய அதே ‘கை கழுத்து அசைவு’ செய்கையை சட்டமன்றத்தில் காட்டினார். ஆட்சியில் அமர்ந்திருப்பது ஏதோ தங்கள் அடிமைகள் அல்ல, அவர்கள் தான் இனி எஜமானர்கள் என்று புரிந்தது எமகிங்கர திராவிட மூட்டைகளுக்கு!

‘நாங்கள் அனுப்பி வைத்தோம் நாங்கள் அனுப்பி வைத்து என்கிறீர்களே, ஆனால் அவர்கள் சுயமாகவே முடிவு எடுத்தோம் என்று கூறிவிட்டார்களே’ என்று முதல்வர் கேட்ட போது தான் தங்கள் கூட்டணியை உடைத்தே விட்டார் இந்த நடிகர் என்று அவர்களுக்குப் புரிந்தது. கூட்டணி கட்சிகள் நம்மை ஏமாற்றினவா அல்லது நாம்தான் நம்மை நாமே ஏமாற்றி கொண்டோமா என்று எதுவும் புரியாமல் கிள்ளிக் கிள்ளிப் பார்த்து கில்லி ஆடிப்பார்த்தனர் திராவிட கூமுட்டைகள்!

சட்டமன்றத்தில் நடந்ததை அறிந்த அப்பா, சித்தம் கலங்கிப் போய், ‘ அப்பா இங்கும் இருக்கிறேன் அங்கும் இருக்கிறேன் எங்கும் இருக்கிறேன், நானே முதல்வர் நானே முதல்வர்’ என்று கதற ஆரம்பித்து விட்டாராம்!

குடியிருந்த கோயில் படத்தில் எம்ஜிஆர், ‘நான் யார், நான் யார் நான் யார்’ என்று பாடியது போல வீடெங்கும் பாடித் திரிய வைத்தியர்கள் வரவைக்கப்பட்டு ‘நான் முதல்வன்’ திட்ட அட்டையைக் காட்டி சமாதானம் செய்தனராம்! ‘அவருக்கென்ன தோற்றுவிட்டார் அகப்பட்டவன் நான் அல்லவா, ஐயிரண்டு மாதத்திலே ..’ என்று பெரிய வீட்டு ஆண் பாடாத குறைதானாம்!

சட்டமன்றத்தில் விஜய்யின் உரை முழுக்க முழுக்க சினிமா பாணிதான் என்றாலும் அதன் வீச்சு என்னவோ ரீலாக நின்றுவிடவில்லை. ரியலாக வந்து தாக்கியது என்றால் அது மிகையல்ல.

தவெக ஆட்சியை EVILS, EVILS என DEVILS கூறக்கூடாது. சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஒன்றும் மே 10ஆம் தேதி அன்று வந்துவிடவில்லை, பல வருஷமா இருக்குற பிரச்சனை தான், பல வருஷமா கண்டுகொள்ளாமல் விட்ட பிரச்சனை தான்.

“கடந்த ஆட்சி காலங்களில் கண்டுகொள்ளாமல் விட்டதால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை, போதைப்பொருள் கலாச்சாரம் எல்லாம் வளர்ந்து நிற்கிறது.. இன்று எதிர்க்கட்சிக்காரர்கள் அதை பற்றி கேட்கும் போது, எனக்கு அது அக்கறையாக தெரியவில்லை. அவதூறு அரசியலாக தான் தெரியுது, பழிபோடும் அரசியலாக தான் தெரியுது.”

“ஒரு தவறு செய்தால் அதை தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்” என்று எம்.ஜி.ஆர் அன்று பாடினார். அதை இன்று விஜய் செயலில் காட்டுகிறார் என்று ஒரு பத்திரிகை தலையங்கம் எழுதியது. அரசியலுக்கு வந்து இரண்டு ஆண்டுகளில் உங்களுக்கு என்ன தெரியும் என்று கேள்வியெழுப்பியவருக்கு இந்த தலையங்கமே பதில்,”என்றெல்லாம் விஜய் பேசிய போது வாயடைத்துப் போய் நின்ற திராவிட மூட்டைகள்,

PARTY FUND என்ற பெயரில் டாஸ்மாக்கில் இருந்து அடித்த கொள்ளைப் பணத்தை எல்லாம், என்று அவர் வாய் திறந்த போது மொத்தமாக எழுந்து கூச்சலிட்டது திமுக. அதன் பிறகு அவர்கள் அமரவே இல்லை. ‘Party Fund’ என்ற வார்த்தைக்கு, முதல் குடும்பத்திற்கான கப்பம் என்று அக்கட்சியினரே பொருள் சொல்வதால் எதிர்கட்சித் தலைவர் உட்பட ஒவ்வொருவரும் கொதித்துப் போய்விட்டனர்.

திமுகவின் அந்த கொதிப்பு ஊடகத்தினரை பற்றிக் கொள்ள, அன்று இரவே 'Party Fund' பற்றி அனேகமாக எல்லா ஊடகங்களும் விவாதம் செய்து விட்டன.

ஊழல் தான் நிர்வாகத்திறன் என்றால் அந்தத் திறன் தங்களுக்கு இல்லை என்றும், ஊழல் பணத்தை தொடவும் மாட்டோம், தொட்டால் விடவும் மாட்டோம் என்றும் விஜய் தனது உரையில் சினிமாத்தனமாக தெரிவித்தாலும் ஏதோ மெய்யாலுமே நல்லது செய்ய விரும்புகிறார் போலும் என்ற தோற்றத்தையும் அது உருவாக்கியது!

முதல்வரின் உரை திமுகவுக்கு உதறல் ஏற்படுத்தியது. விளைவு சட்டமன்றத்துக்கு வெளியில் சென்ற பின்னர், அப்பாவை தேடிய அரசியல் நையாண்டியை தனிநபர் தாக்குதலாக சித்தரித்து, செங்கல்பட்டு நீதிமன்றத்தில் கணவனை தேடும் மனைவி என்று திமுகவுக்கு உரித்தான பாணியில் முதல்வர் மீது தனி நபர் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

முதல்வர், தமிழகத்தின் வாழும் அப்பாவை தேடிய போது முன்னாள் முதல்வர் எடப்பாடியால் தனது மகிழ்ச்சியை மறைக்க முடியவில்லை. நன்கு ரசித்தார்!

இந்த அரசியல் நையாண்டியை தனிநபர் தாக்குதலாக சித்திரித்து, திமுக கொடுத்த தனிநபர் தாக்குதல் பதில், பலரையும் இரண்டு பக்கமும் தவறு தான் என்று எண்ணத் தூண்டியது. இது திமுகவின் வெற்றி.

இந்து விரோத, தேச விரோத, ஊழல் கறை படிந்த திமுகவை தவெக வச்சு சாத்தும் போது, கவர்னரை செருப்பால் அடிப்போம், பிரதமரை சோலிமுடிப்போம் என்றெல்லாம் பேசிய திமுகவை தவெக நையப்புடைக்கும் போது அதை ரசிக்க வேண்டிய பாஜக, விஜய் சட்டமன்றத்தில் நாகரீகமாக நடந்து கொள்ள வேண்டும் என்று வகுப்பெடுத்தது பாஜகவை திபாஜக என்று விமர்சிப்பவர்களுக்கு தீனி அளித்தது. நல்லவேளை, காஞ்சிபுரம் வந்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மாநில பாஜகவின் வழியை பின்பற்றாமல், சட்டமன்றம் என்றால் அப்படித்தான் பேசுவார்கள் அதற்கு சட்டமன்றத்தில் தான் பதில் சொல்ல வேண்டும் என்று கூறியது தமிழக பாஜகவை சற்றே காப்பாற்றியது!

நடந்து கொண்டிருக்கும் தமிழக சட்ட மன்றத் தொடர், தமிழக அரசியல் தவெகவுக்கும் திமுகவுக்கும் தான் என்பதை உறுதி செய்துள்ளது. இந்த ஆட்டத்தில் நானும் இருக்கிறேன் என்று ஒற்றை எம்எல்ஏ பாஜக தவெகவை எதிர்க்க நினைப்பது கொள்ளிக்கட்டையை வைத்து தலையை சொறிந்து கொள்வது தான். தவெகவை எதிர்ப்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கும் போது, அதைவிட்டு விட்டு நாகரிகப் பாடம் எடுப்பது சரியான அரசியல் ஆகாது என்பதே தேசியத்தை விரும்பும் அரசியல் நோக்கர்களின் பார்வையாக இருக்கிறது.



**வெள்ளை அறிக்கை: திட்டங்களை தாமதப்படுத்த காரணமாகக் கூடாது**

தமிழக அரசின் நிதிநிலை குறித்து, தவெக அரசு வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கை, கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநில நிதி நிர்வாகத்தில் ஏற்பட்ட சீர்கேடுகளை வெளிச்சம் போட்டு காட்டும் ஒரு ஆவணமாக உள்ளது. இந்த அறிக்கை தமிழகத்தின் முக்கிய நிதிக் குறியீடுகளை, பிற தொழில்மயமான மாநிலங்களுடன் ஒப்பிட்டு, தமிழகத்தின் தற்போதைய நிலையைத் தெளிவாகக் கூறியிருக்கிறது என்றால் அது மிகையல்ல.

தமிழகத்தின் மொத்தக் கடன் நிலுவை ₹10 லட்சம் கோடியை எட்டியுள்ளது; சராசரியாக தமிழக மக்கள் ஒவ்வொருவர் பெயரிலும் ₹1,28,934 கடன் சுமை உள்ளது.

தமிழகத்தின் மொத்த வருவாயில், 22.8%, வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்துவதற்கே செலவிடப்படுகிறது.

தமிழகத்தின் சொந்த வரி வருவாய் (SoTR) மற்றும் GSDP விகிதம், 2021-22ல் 5.93% இருந்தது; 2025-26ல் அது 5.45% ஆக குறைந்துள்ளது.

மின்சாரம், போக்குவரத்து மற்றும் நுகர்பொருள் விநியோகம் தொடர்பான முக்கிய பொதுத்துறை நிறுவனங்களின் மொத்தக் கடன் ₹3.18 லட்சம் கோடியாக உள்ளது.

நிலங்களின் மதிப்பை குறைத்து பதிவு செய்வது போன்ற முறைகேடுகள், பத்திரப் பதிவுத்துறை வருவாய் இழப்பு, அமைப்பு சார்ந்த ஊழல்களால் ஏற்பட்ட பெரும் வருவாய் இழப்புகள் பற்றி ஆவணங்கள் குறிப்பிட்டுள்ளன.

தமிழகத்தில் வேலை செய்யும் வயதுடைய மக்கள் தொகை, வரும் 2031 ஆம் ஆண்டில் இருந்து குறையத் தொடங்கும் என்பது கவலையளிக்கும் செய்தி.

திமுகவின் நிதி மேலாண்மை சீர்கேட்டை மக்களுக்கு அம்பலப்படுத்திய வரை இந்த வெள்ளையறிக்கையின் நோக்கம் சரிதான். ஆனால் அதனையே காரணம் காட்டி, தேர்தல் அறிக்கையில் தாங்கள் கூறிய மக்கள் நலத் திட்டங்களை தவெக அரசு செயல்படுத்தாமல் விட்டுவிடக்கூடாது என்று பொதுமக்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

# இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் பிரிவினைவாத, பயங்கரவாத ஆதரவுத் தீர்மானங்கள்

இராமகிருஷ்ணன்



இந்தியன் யூனியன் முஸ்லீம் லீகின் மாநில பொதுக்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் இரண்டு தீர்மானங்கள் ஆபத்தானவை. இந்தத் தீர்மானங்கள் பட்டியலில் 13 ஆம் தீர்மானத்தை இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே.நவாஸ்கனி முன்மொழிந்தார். உள்ளாட்சி மறுவரையறை மக்கள் தொகை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்பதே அந்தத் தீர்மானம்.

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறை (Ward Delimitation) என்பது மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளின் எல்லைகளைச் சீரமைக்கும் மற்றும் புதிய வார்டுகளை உருவாக்கும் நடைமுறையாகும். ஆனால் கடந்த ஆட்சியின்போது, மக்கள் தொகை அடிப்படையில் இல்லாமல், வீடுகளின் அடிப்படையாகக் கொண்டு வார்டு மறுவரையறை மேற்கொள்ளப்பட்டது. இதனால், வார்டுகளின் வாக்காளர் எண்ணிக்கை மிகுந்த வித்தியாசத்துடனும் ஒரே வார்டில் இருக்கும் வீடுகள் கூட, மற்றொரு வார்டில் சேர்க்கப்பட்டது. இதன் காரணமாக சிறுபான்மையின மக்களின் பிரதிநிதித்துவம் உள்ளாட்சி அமைப்புகளில் குறைந்து, விகிதாச்சார பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. இதனால், சிறுபான்மையின மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில், முக்கியத்துவம் குறைந்து வளர்ச்சிப் பணிகள் பெரிதும் பாதிப்பு அடைந்தன.

**இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க ஏதுவாக தொகுதி மறுவரையறை என்றால், மதத்தின் அடிப்படையில் தொகுதி சீர் அமைப்பு செய்வது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும், மதச்சார்பின்மைக்கும், எதிரானதாகாதா?**

எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறையின்போது, வீடுகளின் அடிப்படையில் இல்லாமல் மக்கள் தொகையின் அடிப்படையில் வார்டுகளைப் பிரிக்க வேண்டும். பெண்கள் வார்டுகளை சுழற்றி முறையில் மாற்றி அமைக்க வேண்டும். அப்படி வார்டுகளை அமைக்கும்போது, சிறுபான்மையின மக்களின் பிரதிநிதித்துவம் உள்ளாட்சி அமைப்புகளில் முறையாக கிடைக்கும். அதன்மூலம், சிறுபான்மையின மக்கள் அதிகம் வாழும் வார்டுகளில் அவர்கள் சார்ந்த நலன் தொடர்பான பணிகள் சிறப்பான நடைபெற வாய்ப்புகள் உருவாகும். எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறையை மக்கள் தொகை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்ய மோடி அரசு முயல்கிறது. குடும்பக்கட்டுப்பாட்டை அமல்படுத்தியதால் இந்தத் தண்டனையா? என்று தி.மு.கவுடன் சேர்ந்து கோரஸ் பாடியது முஸ்லீம் லீக் தானே? அப்படியென்றால் மக்கள் தொகைப் பெருக்கத்தைத் திட்டமிட்டு முஸ்லீம்கள் செய்கிறார்கள் என்று முஸ்லீம் லீக் ஒத்துக்கொள்கிறதா? அதிகம் பெத்துப் போடுகிறான் வடக்கன் என்று முழங்கிய தி.மு.க, இஸ்லாமியன் பெத்துப்போடுகிறான் என்று அறிக்கைவிடுமா ?

இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க ஏதுவாக தொகுதி மறுவரையறை என்றால், மதத்தின் அடிப்படையில் தொகுதி சீர் அமைப்பு செய்வது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும், மதச்சார்பின்மைக்கும், எதிரானதாகாதா? தமிழகத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புக்களைக் கைப்பற்றி, பல பாகிஸ்தான்களை உருவாக்கும் முயற்சியே இது. இந்தியா- பாகிஸ்தான் என்ற பிரிவினைக்கு அடிப்படையாக அமைந்தது, வங்கப் பிரிவினையும், பம்பாய் மாகாணத்திலிருந்து, சிந்த் தனியான மாகாணமாகப் பிரிந்ததே! இந்தப் பிரிவினைக்குக் காரணமானதும் முஸ்லீம் லீக் தான்! 1946 ஆம் ஆண்டு நடந்த மாகாணத் தேர்தலில், பாகிஸ்தான் தனி நாடு கோரிக்கையை முன்வைத்து சென்னை மாகாணத்தில், இஸ்லாமிய தனித் தொகுதிகள் அனைத்திலும் அகில இந்திய

முஸ்லிம் லீக் வெற்றி பெற்றது. தமிழ் நாட்டின் பாளையங்கோட்டை முதல் ஒடிஸா பெர்ஹாம்பூர் வரை உள்ள முஸ்லீம்களை வழிநடத்தியவர் தான் இந்திய யூனியன் முஸ்லீம் லீகை தொடங்கிய முகமது இஸ்மாயில் என்ற காய்தே மில்லத். இன்றும், தொகுதிகளை அதிகப்படுத்தி பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் மனநிலை மாறாமல் உள்ளது என்பது தெளிவாகிறது.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பொதுக்குழுவின் 13வது தீர்மானம், முஸ்லிம் ஆயுள் சிறைவாசிகளுக்கு விடுதலை வேண்டல். இதை எம். அப்துல் ரஹ்மான் முன் மொழிந்தார்.

தமிழ்நாட்டில் உள்ள சிறைவாசிகள் முன் விடுதலைக்கு தமிழ்நாடு அரசின் அரசாணை எண் 1762/20.04.1987ன் படி தகுதி பெற்றும் விடுதலை மறுக்கப்பட்டு 25ஆண்டுகளுக்கும் மேலாக முஸ்லிம் சிறைவாசிகள் சிறையில் இருந்து வந்தனர். பெரும் முயற்சிகளை தொடர்ந்து தமிழ்நாடு அரசின் கருணையால் பலரும் விடுக்கப்பட்டு 15 பேருக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக பரோல் விடுவிப்பு வழங்கப்பட்டு வந்தது. அந்த பரோல் விடுப்பு காலம் இப்போது நீட்டிக்கப்படாமல், கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர்களின் மனைவி, பிள்ளைகள் குடும்பத்தினருடன் வாழ்ந்து சட்டத்தை முழுமையாக மதித்து, நேரிய வாழ்வை கடைபிடித்து பரோல் காலம் நிறைவடைந்த நிலையில், 17.11.2025 அன்று அவர்கள் மீண்டும் சிறைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தண்டனை காலத்திற்கும் மேலாக நீண்ட காலம் அவர்கள் சிறையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு 22 முஸ்லிம் சிறைவாசிகளுக்கும் கருணை காட்டி அவர்களை விடுதலை செய்ய வேண்டுவதோடு, இந்த விடுதலை உத்தரவு தாமதமாகும் பட்சத்தில் அதுவரை அவர்களுக்கு பரோல் விடுப்பு வழங்கக் கோரியுள்ளது.

யார் இந்தக் குற்றவாளிகள்? பல உயிர்களைக் குடித்த கோவை குண்டு வெடிப்பு, வெடிகுண்டு வழக்குகள், ஹிந்து அமைப்பினர், காவல் துறையினரைக் கொன்றவர்கள் இவர்கள். இவர்களை விடுதலை செய்யக் கோரும் அமைப்பு பயங்கரவாத அமைப்பாகத்தானே இருக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை அரசுக்கு இவர்கள் வைப்பதற்கு முன், 1998 கோவை குண்டு வெடிப்பு வழக்கில் தண்டனை, 1999 ஆம் ஆண்டு சென்னை கமிஷனர் அலுவலகம், திருவல்லிக்கேணி விக்டோரியா ஹாஸ்டல், சிந்தாதிரிப்பேட்டை, திருச்சி மற்றும் கோவையில் காவல் நிலையங்கள் மற்றும் சிறைச் சாலை, கேரள மாநிலம் பையங்காடி, காசர்கோடு ஆகிய இடங்களில் வெடிகுண்டு வைத்த வழக்குகளில் தண்டனை, பிப்ரவரி 2, 1999 அன்று திருச்சியில் பா.ஜ.க தலைவர் டாக்டர் ஸ்ரீதர் படுகொலையில் ஆயுள் தண்டனை பெற்ற சித்திக் அலி என்ற சுல்தானுக்கு 3 மாத பரோல் கொடுத்துள்ளது ஜோசப் விஜய் அரசு. இந்த உத்தரவை ஜூன் 16 அன்று அரசாணை எண் 589 வாயிலாக தமிழக அரசு பிறப்பித்தது.

**பல காலமாக சிறையில் வாடுகிறார்கள் என்று இந்த பயங்கரவாதிகள் மீது பரிதாபப்பட்டு பேசுபவர்கள், இந்த பயங்கரவாதிகள் எவ்வளவு நாள் சி றையில் இருந்தார்கள், எவ்வளவு நாள் பரோலில் இருந்தார்கள் என்று தெரிவிக்க முன்வருவார்களா?**

முஸ்லீம் லீகின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் நடப்பதற்கு பல நாட்கள் முன்பே, நீண்ட நாள் சிறைவாசிகளை விடுவிக்க அரசு பரிசீலித்து வருவதாக அமைச்சர் ஷாஜகான் தெரிவித்தார். ஆளும் த.வெ.க அரசின் கூட்டணிக் கட்சியான முஸ்லீம் லீகின் அமைச்சர் ஷாஜகான், சிறுபான்மை நலத்துறை அமைச்சராக உள்ளார். சிறை முன்விடுதலை குறித்த முடிவை எடுக்க வேண்டியதோ சட்டத்துறை. சட்டத்துறை அமைச்சர் இதுபற்றி பேசாமல், ஷாஜகான் கைதிகள் முன் விடுதலை பற்றி பேசுவதன் நோக்கம், முஸ்லீம் பயங்கரவாதிகளை ஜோசப் விஜய் அரசு விடுவிக்கிறது என்று இஸ்லாமியர்களின் ஆதரவைப் பெரும் முயற்சியே! இந்தப் பொதுக்குழுக் கூட்டத்திற்கு முன், இந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் கைதிகள் முன் விடுதலை என்றார், கட்சியோ இஸ்லாமியர் முன் விடுதலை என்று தீர்மானம் நிறைவேற்றுகிறது. என்ன ஒரு செட் அப் !

பல காலமாக சிறையில் வாடுகிறார்கள் என்று இந்த பயங்கரவாதிகள் மீது பரிதாபப்பட்டு பேசுபவர்கள், இந்த பயங்கரவாதிகள் எவ்வளவு நாள் சிறையில் இருந்தார்கள்?, எவ்வளவு நாள் பரோலில் இருந்தார்கள் என்று தெரிவிக்க முன்வருவார்களா? கோவை குண்டு வெடிப்பு உட்பட ஏராளமான குண்டு வெடிப்புகள், படுகொலைகள், வீரத்துறவி. இராம.கோபாலன் அவர்களை வெட்டியது போன்ற குற்றங்களைச் செய்து சிறை சென்ற அல்-உம்மா நிறுவனர் கோவை பாட்சா 100 முறைக்கு மேலாக பரோலில் வெளியே வந்தான். பயங்கரவாதிகள் பலர், வழக்கு விசாரணையைத் தாமதித்து, விசாரணைக் கைதியாக பல காலம் சிறையிலிருக்கிறார்கள். விசாரணைக் கைதிகளை ஏன் இவ்வளவு காலம் சிறையில் வைத்துள்ளீர்கள்? விடுதலை செய்யுங்கள் என்று கோரிக்கை வைத்து, வழக்கை நீர்த்துப் போக வைக்கும் சதியும் இந்தக் கோரிக்கையில் உள்ளது. அமைச்சரவையில் ஒரு முஸ்லீம் கட்சி இடம் பெற்றால் அது எத்தகைய ஆபத்து என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்வார்களா?

# திருப்பரங்குன்றம் தீபம் ஏற்றத் தடை ஸ்டாலினைப் பின்பற்றும் ஜோசப்

சுந்தரம்



திருப்பரங்குன்றம் தீப வழக்கில் இரு நீதிபதிகள் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என ஐகோர்ட்டில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிடக்கோரி ராம ரவிக்குமார் உள்ளிட்ட பலர் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகளை ஒருசேர விசாரித்த நீதிபதி திரு. ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்கள், மலை உச்சியில் உள்ள தீபத்தூணிலும் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிட்டார். இந்த உத்தரவு நிறைவேற்றப்படவில்லை. இதையடுத்து மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகர் காவல் ஆணையர், செயல் அலுவலர் ஆகியோர் மீது நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு எதிராகவும், தனி நீதிபதி உத்தரவுக்கு எதிராகவும் மேல் முறையீடு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரித்த இரு நீதிபதிகள், தனி நீதிபதி தீர்ப்பை உறுதி செய்து, கார்த்திகை தீப நாளில் தீபத் தூணிலும் கோயில் நிர்வாகம் தீபம் ஏற்ற வேண்டும் என உத்தரவிட்டனர். நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த வழக்குகள் நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தன. அப்போது, அரசுத் தரப்பில், “உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது'' எனத் தெரிவிக்கப்பட்டது.

அதனை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், “ஏன் இந்த வழக்கை நிலுவையிலேயே வைத்திருக்க விரும்புகிறீர்கள்? நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் என்ன சிக்கல்?” என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர்.

அப்போது அரசுத் தரப்பில், “அது நோக்கம் அல்ல. 100 ஆண்டுகளாக நடைமுறையில் இருப்பதைத் தொடர்வதா புதிய முறையை தொடர்வதா என்பது குறித்து முடிவெடுக்கப்பட வேண்டும்,'' எனத் தெரிவிக்கப்பட்டது. அரசு தரப்பிலும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு இருப்பதால் இந்த வழக்கை ஜூலை 27-ம் தேதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தொடர்ந்து நீதிபதிகள், “மத நல்லிணக்கம் முக்கியமானது. அங்கு வாழும் மக்களின் அமைதி முக்கியமானது. மக்கள் கள நிலவரத்தை முழுமையாக அறிவார்கள். ஆகவே, இரு தரப்பிலும் அமைதியான முறையில் என்ன செய்யலாம் என்பது தொடர்பாக முடிவு எடுக்க முயற்சிக்கலாம்,'' என்று அறிவுறுத்தி விசாரணையை ஒத்திவைத்தனர்.

முந்தைய தி.மு.க அரசும், உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்கிறோம் என்று சொல்லி, அதைச் செய்யாமல் நீதிமன்ற நடவடிக்கைகளைக் காலதாமதப்படுத்தியது. இன்று ஜோசப் விஜய் தலைமையிலான த.வெ.க ஆட்சியும், உச்சநீதிமன்றம் செல்கிறோம் என்று வழக்கை நடத்த மறுப்பது, ஹிந்துக்களின் அடிப்படை உரிமையை தடுக்கும் செயலாகும். 2025 ஆம் ஆண்டு நீதியரசர் திரு.ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்கள், நீதியரசர் கனகராஜ் அவர்கள் உத்தரவை அமல் படுத்தவேண்டும் என்றே உத்தரவிட்டார். 1996 முதல் 2026 வரை, அதாவது ஏறத்தாழ 30 ஆண்டுகள், நீதிமன்ற உத்தரவிற்குப்பின்பும், திருப்பரங்குன்றம் மலையில் ஹிந்துக்கள் தீபமேற்றி வழிபட தமிழகத்தை ஆண்ட அரசுகள் தடுத்துள்ளன என்பதே உண்மை. எங்குச் சென்றாலும், எந்த ஆட்சி வந்தாலும் ஹிந்துக்களின் வழிபாட்டு உரிமை தடுக்கப்படும். இந்நிலை த.வெ.க ஆட்சியிலும் மாறவில்லை.

ஹிந்துக்களை வெளிப்படையாக தி.முக எதிர்ப்பதால், வேறு வழியின்றி ஹிந்துக்கள் வாக்குக்களைப் பெற்ற அ.தி.மு.க வெற்றி பெற்று வந்தது. இந்தப் பாணியைப் பின்பற்றவே த.வெ.க முனைகிறது. ஹிந்துக்கள் நலனைக் காப்பவர்களையே ஆதரிப்போம் என்ற நிலைபாட்டை ஹிந்துக்கள் எடுத்தால் மட்டுமே, தீபம் ஏற்றப்படும். நீதிமன்றத் தீர்ப்புகள் மதிக்கப்படும்.

# கூகுள் மேப் சர்வரே ஜாம் ஆகிடுச்சு

ராயன்



ரொம்ப லேட்டாகிடுச்சு என அரக்கபரக்க வந்து நியூஸ் டெஸ்கில் வந்து அமர்ந்தார் ராயன்.

ஏன் ஜி லேட்டு ? என்றார் அருகில் அமர்ந்திருந்த கல்யாண்.

எனக்கு தெரிந்த நண்பர் ஒருவரின் வீட்டு விசேஷத்துக்கு போனேன். அவர் வீட்டு அட்ரஸ் வாங்காம கூகுள் மேப் அனுப்பி விடு நான் வந்திடுறேன் என கெத்தாக சொல்லிட்டு கிளம்பினேன். அதான் பிரச்சினை ஆகிடுச்சு.

இதுல என்ன ஜி பிரச்சினை என கல்யாண் கேட்க,

நீ வேறப்பா, கூகுள் மேப்பே வேலை செய்யல, ஏதோ காட்டுது, சுத்துது. விசாரிச்சா அதன் சர்வரே ஜாம் ஆகி ஒரே ரூட்டை தான் காட்டு தாம்.

ஓலா, ஊபர், சொமெட்டோ,ராப்பிடோ இவங்களேலாம் ஒரே ரூட்டை காட்டுனா அவங்களோட கஸ்டமருக்கு தொல்லையாச்சே, எப்படி சமாளிப்பாங்க என கரண் ஜி சமூக சிக்கலை நினைத்து வருத்தத்தோடு கேட்டவுடன்..

அது அதிமுக மற்றும் பிற கட்சிகளின் தலைவர்கள், தொண்டர்கள் பனையூர் ரூட்ல தவெக ஆபீஸ் எங்க இருக்குன்னு கூகுளில் தேடித் தேடி அது ஒரு கட்டத்துல எல்லாருக்கும் அதே ரூட் காட்டுது என சொல்லிக்கிறாங்க.

ஆபீசுக்கு லேட்டா வந்ததுக்கு எப்படியெல்லாம் கம்பி கட்ற கதைய சொல்றாரு, அதை வாய பொளந்து கேட்டுகிட்டு இருக்கீங்க என தனது எண்ட்ரியை பதிவு செய்தார் ராம்.

ஹையா இந்தா குமரி குஜால் பேர்வழி பொளக்க ஆரம்பிச்சிட்டாரு என ராமை சீண்ட ஆரம்பித்தார் கரண்.

அதற்கு டபுள் மீனிங்கில் பதில் சொல்ல ராம் எத்தனிக்க, கடுமையானவன் என்ற அசரீரி கேட்டதும் வேற டாப்பிற்கு மாறினார். விருதுநகர் தவெக கூட்டத்தில் பெண் எம்.எல்.ஏவுக்கும், அமைச்சர் கீர்த்தனாவுக்கும் பேனரில் பெயர் முன்னே பின்னே போடுவதில் உருவான சண்டைய பார்த்தீங்களா? என ஆர்வமுடன் கேட்டார்.

ஒன்னு என்றாலே பிரச்சினை, இப்ப ரெண்டு... பிரச்சினை இல்லாமலா இருக்கும் என கரண்ஜி எடுத்துக் கொடுக்க..

இங்கே ஒன்னுக்கே வழியில்ல..என தனது சொந்த ஆதங்கத்தை கொட்டினாராம்.

ஒன்னு, ரெண்டு பெண் எம்.எல்.ஏக்களுக்குள் வம்பு என்றதும், தனது உள்ளக் கொதிப்பை அடக்க முடியாமல், இன்னொரு பெண் ஆளுமை குறித்த ச ர்ச்சை சட்டசபையிலேயே சபாநாயகர் பஞ்சாயத்து செஞ்சத பார்த்தீங்களா என வினா எழுப்பினார் குமார்.

ஆபீஸில் இருந்தவர்களுக்கு ஆர்வம் அதிகமாகி குமாரையே! அனைவரும் பார்த்தனர். சென்னை மேயர் பிரியாவுக்கும் திரு.வி.க நகர் தொகுதி தவெக (TVK) சட்டமன்ற உறுப்பினர் பல்லவிக்கும் இடையே நடைபெற்ற பள்ளி திறப்பு விழா நிகழ்ச்சியில் 'ப்ரோட்டோகால்' தொடர்பான சர்ச்சையை சட்டசபையில சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தீர்ப்பு கொடுத்து பஞ்சாயத்தை முடிச்சு வெச்சத சொன்னேன் என கேள்வி கேட்ட குமாரே பதிலும் சொல்லி முடித்தார்.

மேயரைப் பற்றி பேசினால், தலையில் இருக்கும் ஆண்டெனா தானா திரும்பும் ராயன், தன் பங்குக்கு ஒரு விஷயம் தெரியுமா? என எப்பவும் போல கேப் விட்டு பேசினார். தவெகாவுல இருக்கும் எம்.எல். ஏக்கள், அமைச்சர்கள் அவங்களே ரீல்ஸ் போடுவாங்க, ஆனால் மேயர் ப்ரியாவுக்கு அவரின் இன்ஸ்டா ரசிகர்கள் தான் பாட்டுகளை மிக்ஸ் செய்து போடுவாங்க என உலக மகா கண்டுபிடிப்பாக சொல்ல..

நானும் வந்ததிலிருந்து பார்க்குறேன் மேயர் பற்றி செய்தின்னா, அப்படி பாய்ந்து வறீங்களே ஏன்னா? என அழகான, வடிவான பெண்களை AIல் தேடும் மிஸ்டர் சந்திரமௌலி கேட்டதும், உனக்கும் அது



தெரிஞ்சு போச்சா என கோரசாக சத்தம்.

Shorts எடிட் செய்து கொண்டிருந்த போத்தன், ஆ.ராசா, ஸ்டாலின் திருவாரூர் திருமணத்தில் சவால் விட்டதை நியாபகப்படுத்தினார்.

எனக்கும் அந்த வீடியோவை பார்க்க பரிதாபமாக இருந்தது.

இதில் எதுக்கு பரிதாபம், கெத்தா சவால்ல விட்டாங்க என மீண்டும் போத்தன் சொன்னார்.

பரிதாபம் மணமக்களுக்கு தான். கூட்டணி வேண்டாம், தனியாக நிற்போம், தனியாக நின்று நாம் யார் என காட்டுவோம் என ஆ.ராசா சொன்னபோது, மணமகன் அடப்பாவிகளா! இவ்வளவு நாளா தனியா தானே நின்னேன், இப்ப தான் கூட்டணி கிடைச்சிருக்கு அதுலயும் மங்கலம் பாட வந்துட்டாங்க என பார்த்ததை தான் பரிதாபம் எனச் சொன்னேன் என ராயன் சொன்னதும் AK. அண்ணே! இன்னும் இப்படி பேசலயே என நினைச்சேன் என ஏதோ விவகாரமாக புரிந்து கொண்டு கமெண்ட் அடிச்சார்.

அரசியல் கட்சித் தலைவர்களையும், அவர்கள் தலைமையில் கல்யாணத்தையும் நடத்தி வைக்க ஏன் அழைக்கிறாங்கன்னு தெரியல என CEO அம்மையார் அவர் பங்குக்கு சொன்னார்.

மணமகன் - மணமகள் பற்றி இரு குடும்பங்களும் எவ்வளவோ வாக்குறுதியா சொல்லி இருப்பாங்க. அதெல்லாம் அரசியல்வாதி போல தானே! என பூடகமாக பேசினார் பெரியவா. அப்போது எதேர்ச்சையாக அங்கு வந்த ப்ரஃபஷனல் போட்டோகிராஃபர் மாச்சு., யார் சொன்னாலும் நம்புங்க ஆனால் சேலத்துக்காரா சொன்னா ஒன்னுக்கு ரெண்டு முறை விசாரிச்சுக்கங்க என ஆதங்கத்தை கொட்டினார்.

சேலத்துக்காரா என சொல்வது இ பி எஸ் கோஷ்டியை தானே என கரண்ஜி சொன்னது தான் தாமதம், டெல்டாகாரன் சிண்டு முடியுற வேலைய பார்க்குறான், நான் வாக்கிங் கிளம்புறேன் என படபடத்தார்.

அதிமுகவில் ஆரம்பத்தில் எதிர்த்து கொடி பிடிச்சவங்களுக்கு மீண்டும் கட்சியில பதவி போட்டு கொடுத்திருக்காரு இ பி எஸ். இதுல எத்தனை பேருக்கு திருப்தி, எத்தனை பேருக்கு அதிருப்தி என போக போகத் தெரியும் என நியூஸ் அப்டேட் சொன்னார் குமார்.

அம்பாசமுத்திரம் தேர்தலில் அதிமுக - திமுக ஆதரவுடன் நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமான் நிற்பதற்கு வாய்ப்பு இருக்குன்னு சொல்றாங்களே! என கல்யாண் சொல்ல..

நாம் தமிழர் தேர்தலில் போட்டியிட ரெடி ஆகிட்டாங்க சரி, நாம் தலைவர்கள் இயக்கம் ரெடி ஆகிடுச்சா என ராயன் கேட்க.

முதலில் ட்ரைனிங், அதற்கு அப்புறம் தான் கள அரசியல் என கரண்ஜியிடமிருந்து பதில் பளிச்சென வந்தது. பாஜகவில் இருந்த போது இது போன்ற ட்ரைனிங் கொடுத்திருந்தா நல்லா இருந்திருக்குமே என பதிலுக்கு ராயன் சொன்னது தான் தாமதம். பாஜகவில் இருந்த போது அவர் வெளிநாட்டில் ட்ரைனிங் எடுத்தாரு. அவரை ஃபெயில்டு லீடர் சொன்ன கட்சி அவரை எப்படி பயன்படுத்திக்கும் என கரண் சொன்னதுடன், ஜென்ஸிக்கள் இல்லாமல் தமிழக பாஜக ததிங்கினதோம் போடுதா இல்லையா பாருங்க என சாபமும் விட்டார்.

கொஞ்ச நாளா பாஜகவின் தேர்தல் அரசியல் பழைய டேட்டாக்களின் AI ஜெனரேட்டட் போஸ்டர் வைரலா ஷேர் ஆகிட்டு இருக்கே என குமார் கொளுத்திப்போட, சமூகவலைதளங்களில் இறங்கி தூர்வாரும் வேலையில் ஈடுபட்டுவரும் கல்யாண், எல்லாம் நம்ம BRG பேசுனதுக்கு அப்புறம் தான் போயிட்டு இருக்கு என்றார்.

நீங்க சொல்வதும் சரிதான். அதேபோல இன்னொரு விஷயம் நம்ம டிவியினால நடந்துருக்குன்னு சொல்றாங்க என ராயன் சொன்னதும், ஆச்சரியமும், அதிர்ச்சியும் கலந்து எல்லோரு பார்க்க, தவெக ஆட்சி அதிகாரத்தில் உள்ள ஒரு அமைச்சரை மத்திய உளதுறை அமைச்சகம், NIA அமைப்பு கூர்ந்து கவனிக்கிறாங்களாம் என முடித்தார்.

வீவ்ஸ் அதிகப்படுத்தனும் என்று நமக்கு அதிக கவனம் வேணும் என்றாலும், அவ்வப்போது இதுபோல நடப்பது நம் வீவ்ஸ் சரிதான் என நினைக்க வைக்குது ரைமிங்காக சொன்னார் CEO.

இந்த ஆபீஸ் அரட்டை பேச்சு எப்போது முடியும் என மற்றவர்கள் யோசித்த போது பாலன் பதுவிசா கொண்டு வைத்த சில பல மிளகாய் பஜ்ஜி,பருப்பு வடை, மெதுவடைகளில் சிலவற்றை வாயில் அடைக்கும் போது தான் நிறுத்தப்படும் என்பது தெரியுமே..

சூடான டீயுடன் அன்றையை அரட்டைக்கு முற்றுப்புள்ளி.

# கோவில் நிதியில் வணிகவளாகம் - அமைச்சர் அறிவிப்பு வரவேற்கத்தக்கதா?

வீரவேலுநாச்சியார்

திமுக ஆட்சியில், தமிழகத்தில் உள்ள பல்வேறு முக்கியக் கோவில்களின் உபரி நிதியைக் கொண்டு வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் கலாச்சார மையங்களை இந்து சமய அறநிலையத்துறை கட்டி வந்தது. இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்குகள் தொடரப்பட்டன.

வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, "அறநிலையத்துறை சட்டவிதிகளின்படி கோவில் உபரி நிதியை வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்துவது சட்டவிரோதமானது" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தது. மேலும், கோவில் நிதியில் வணிக வளாகங்கள் கட்டக் கூடாது எனத் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துக் கோவில்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பவும், அதுவரை தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்றத்தின் இந்த அதிரடி உத்தரவைத் தொடர்ந்து, சட்டப்பேரவை விவாதத்தின் போதும், செய்தியாளர்கள் சந்திப்பிலும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் அவர்கள், உயர்நீதிமன்ற உத்தரவுக்கு மதிப்பளித்து கோவில் நிதியில் வணிக வளாகங்கள் மற்றும் இதர கட்டுமானங்களை மேற்கொள்வதற்கான டெண்டர் நடவடிக்கைகள் அனைத்தும் மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், அவர் சட்டப்பேரவையில் பேசும் போது, "பல திருக்கோவில்களில் பக்தர்களுக்குத் தேவையான கழிவறைகள், தங்குமிடங்கள் போன்ற அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலையில், பல கோடி ரூபாய் கோவில் உபரி நிதியை எடுத்து வணிக வளாகங்களோ அல்லது தேவையற்ற பன்னடுக்கு வாகன நிறுத்தங்களோ கட்டுவது அவசியமற்றது. பக்தர்கள் எதிர்பார்ப்பது கோவில்களில் முறையான அடிப்படை வசதிகளைத் தான்; வணிக நோக்கிலான கட்டிடங்களை அல்ல." என்றும் தெரிவித்தார்.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவும், அதைத் தொடர்ந்து எடுக்கப்பட்டுள்ள அரசின் இந்த டெண்டர் நிறுத்த நடவடிக்கையும் வரவேற்கத்தக்கவை தான் என்றாலும், ஆளுநர் உரையில் "இந்துசமய அறநிலையத்துறையின் அசையும் மற்றும் அசையா சொத்துகளின் வருவாய் அதன் புனிதமான நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்" என்று தான் இடம் பெற்றிருந்ததே தவிர கோவில் பணமோ, சொத்தோ எந்த நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டிருந்ததோ அதற்காக மட்டுமே உபயோகப்படுத்தபடும் என்று கூறாதது இவர்கள் மேல் நமக்கு முழு நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

அதே போன்று, இந்த தடை என்பது வணிக வளாகங்களுடன் நிற்குமா? அல்லது கல்வி நிறுவனங்களுக்கும் பொருந்துமா?" என்று உதயநிதி கேள்வி எழுப்பிய போது, அதற்கு பதில் அளித்த இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், "கோவில் நிதியை கோவிலும் பக்தர்களும் பயன்படுத்தும் வகையில் மாற்றுத் திட்டங்களை செயல்படுத்துவோம் எனக் கூறியிருந்தோம். மக்கள் பயன்பெறும் கல்வி நிலையங்கள், மருத்துவ வசதிகளை செய்து தர மாட்டோம் எனக் கூறவில்லை." எனப் பேசினார்.

கோவில் நிதி என்பது எதற்காக உருவாக்கப்பட்டதோ அதற்காக தான் செலவிடப்பட வேண்டும் என்பது தான் அறநிலையத்துறை சட்டம். மாற்றுத் திட்டங்களை செயல்படுத்துவோம் என்று அமைச்சர் கூறி இருப்பது பல கேள்விகளை எழுப்புகிறது.

திருச்செந்தூரில் தரிசனக் கட்டணம் மற்றும் சேவைக்கட்டணங்கள் பெருமளவு உயர்த்தப்பட்டுவிட்டதாக சமூக ஊடகங்களிலும், செய்திகளிலும் பரவ பக்தர்கள் எதிர்ப்பு தெரிவித்தவுடன், அமைச்சர் ரமேஷ், "திருச்செந்தூர் முருகன் கோயிலில் கட்டண உயர்வு எதுவும் செய்யப்படவில்லை. ஆன்மீகச் சேவைகள் அனைத்தும் பழைய கட்டணத்திலேயேதான் நீடிக்கின்றன. பக்தர்கள் யாரும் வதந்திகளை நம்ப வேண்டாம். நிர்வாகத்தின் பரிந்துரையின் பேரில், பொதுமக்களிடம் கருத்து கேட்பதற்கான அறிவிப்பு மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. கருத்துக்கேட்பின் முடிவில் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று கூறினால், அரசு கண்டிப்பாகக் கட்டணங்களை உயர்த்தாது என்று கூறியுள்ளார். இதுவும் கூட பழைய ஆட்சியின் அறநிலையத்துறை நடவடிக்கை போன்றே தோன்றுகிறது.

நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பணிகளை நிறுத்தினோம் என்று சொல்லும் அமைச்சர் அறநிலையத்துறை சட்டத்தை சரியாக பின்பற்றுவேன் என்று சொல்லாமல் இருப்பது ஹிந்துக்களை நம்ப வைத்து ஏமாற்றும் நாடகமோ என்ற சந்தேகத்தையே எழுப்புகிறது.

# அரசியல் உலா

- கரிகாலன்

**எச்சரிக்கை:**
*அரசியல் உலா பழகும் முன்பு தேர்தல் உலா வந்துவிட்டது. தேர்தல் உலா தெரியும் முன்பே ஆட்சி உலா ஆரம்பித்து விட்டார்கள். அதிகார உலா பழகி ஆடம்பர உலா போகாமல் இருந்தால் அவர்களுக்கு மட்டுமல்ல, மாநிலத்திற்கும் நல்லது.*

தினமும் பேசிப் பேசி அலுத்துப் போனதால் அரட்டை அரங்கமாகவே இருந்தாலும் கூட வாரத்திற்கு இரண்டு நாட்கள் மட்டுமே அரசியல் பேசுவது என்று முடிவு செய்தோம். இந்த வாரம் அப்படி ஒரு நாள் தவெக ஆட்சியைப் பற்றித் தான் ஆரம்பித்தேன்.

அறநிலையத்துறையிலயும், மின்சாரத் துறையிலயும் முந்தைய திமுக அரசு செஞ்ச தப்புகளை இந்த அரசு திருத்திக்கிட்டு வருது. உதாரணத்துக்கு ரெண்டு சொன்னேன், பாராட்டலாம்ல?

ஓஹோ தாராளமா பாராட்டலாமே.இது வரைக்கும் இந்த மாதிரி முதலமைச்சர, இந்த மாதிரி மந்திரிங்கள, அவ்ளோ ஏன் இந்த மாதிரி எம்எல்ஏக்கள யாருமே பாத்துருக்க மாட்டோம், இனியும் பாக்க மாட்டோம். பொத்தம் பொதுவாக எல்லாருமே கிண்டல் அடித்தார்கள்.

ஆமா ஆமா, இந்து சமய அறநிலையத் துறைக்கு இதுக்கு முன்னாடி எத்தனையோ மந்திரிங்க இருந்திருக்கிறாங்க. ஆனா இப்ப ஒரு மந்திரி இருக்காரு பாருங்க.

கொஞ்ச நாள் முன்னே முதல்வர் பொறந்த நாளுக்கு மேரி பொம்மையும் ஈவெரா புஸ்தகமும் பரிசு கொடுத்தாரே அவர் தானே?

யாரு? கி. வீரமணிய சமீபத்துல சந்திச்சாரே. அவரா?

ஆமா, அவரே தான். சந்திச்சது கூட தப்பில்லை. ஆனா கருப்பு சட்டை போட்ட அறநிலையத்துறை அமைச்சர நினைச்சா..!

திருப்பரங்குன்றம் விஷயத்துல தீர்ப்பு வந்த அப்புறமும் மேல்முறையீட்டுக்கு போறாங்களே! அடுத்த அமைச்சர் மீது கவனத்தைத் திரும்பினார் அண்ணாச்சி.

திருப்பரங்குன்றம் எம்எல்ஏ தானே?

ஆமா, வள்ளுவருக்கு வண்ணம் பூசினாரே அவரே தான்!

சட்ட சபை தான் நடக்குதா, சுவிசேஷ கூட்டம் நடக்குதான்னே தெரியலை. ஹிந்துக்கள் கதிய நினைச்சா தான் பாவமா இருக்கு..! இடைமறித்து பச்சாதாபப்பட்டார் இன்னொருவர்.

நாங்கள் இவ்வளவு பேசிக் கொண்டிருக்கும் போதும் அருகில் இருந்த ஒருவர் ஆர்வக் குறைவாக சோர்வாக அமர்ந்திருந்தார். என்ன ஆயிற்று எனக் கேட்டேன். குழந்தைக்கு உடம்பு சரியில்லை என்றார். அதனால் என்ன மாத்திரை கொடுத்தால் சரியாகிவிடுமே என்றோம்.

கைவசம் மாத்திரை இருக்கிறது, ஆனால் பொடி செய்ய கிரெடிட் கார்டும், அதை அள்ளுவதற்கு 500 ரூபாய் தாளும் தான் இல்லை என்று சொன்னார். வந்திருப்பது பணக்கார வியாதி என்றும் அந்தக் குழந்தையே அவர் தான் என்றும் அப்போது தான் புரிந்தது.

நல்ல பேர் எடுக்க முதல்வருக்கு இது நல்ல வாய்ப்பு. திமுக ஆட்சியில போதைப் புழக்கம் மலிஞ்சு இருந்ததுன்னு சொல்லி பழிய அவங்க மேல போடலாமே! ஆலோசனை சொன்னார் அதிமுக பிரமுகர். ஆம் அரட்டைக் கச்சேரியில் (கல்லாவில் பணம் கட்டுவதிலும் தான்) அவருக்கும் பங்கு உண்டு.

முதல்வர் நெனைச்சா நடவடிக்கை எடுக்கலாம். ஆனா அது அவ்ளோ சுலபமில்ல. இந்த விஷயத்தை அப்படியே மூடி மறைப்பாங்க, இல்ல வேற பக்கம் திசை திருப்புவாங்க.

என்னதான் நீங்க நிறைய பேரு குறை சொன்னாலும் சிபிஎஸ்இ பள்ளிக் கூடம் நடத்துறவங்க பைசா செலவில்லாம மாநில அரசு அனுமதி கிடைச்சதுல சந்தோஷமாத் தான் இருக்காங்க. நல்லதின் பக்கம் பேச்சைத் திருப்பினார் மூத்தவர் ஒருவர்.

பெருசா கட்டடம் கட்டுற ஒப்பந்தக்காரங்க கூட இப்போ கட்சி நிதி கட்டத் தேவை இல்லையாமே! பெருமூச்செறிந்தார் பெரியவர் ஒருவர். அந்தத் துறைக்கு இது விடிவுகாலம் என்று பேசிக் கொண்டார்கள்.

அமர்ந்தே பேசிய அரட்டைக் கச்சேரி அதன் பின் அங்காடித் தெரு நடைபாதையயில் தொடர்ந்தது.

# குட்டிக் கதைகள்

என்ன தம்பி, எடப்பாடியார இவ்ளோ மோசமா விமர்சனம் பண்ணிருக்காரு துக்ளக் சத்யா? அதிமுககாரரின் ஆதங்கம் வெளிப்பட்டது.

முன்பொருநாள் மூத்த பத்திரிகையாளர் சுதாங்கன் சொன்னது அந்த நேரம் பார்த்துஎன் நினைவுக்கு வந்தது. அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் ராஜினாமா செய்ததை அடுத்து அதிமுக சற்று கலகலத்துப் போயிருக்கிறது. ஆனால் அடுத்த வாரம் விரிவாகப் பதில் சொல்கிறேன் என்று நழுவி விட்டேன்.



திமுக தனித்துப் போட்டியாமே! நீங்க இன்னும் கூட்டணியில சேரலையா? - அவர் கிண்டல் செய்தது திமுகவை மட்டும் தானா, என்னையும் சேர்த்தா எனப் புரியவில்லை. வெறுமனே சிரித்தேன்.

அரசியலில் சாணக்கியத்தனம் என ஒன்றும், கருணாநிதித்தனம் என மற்றொன்றும்உண்டு. திமுகவை எதிர்கொள்ள இதில் இரண்டாவது வகை போதுமென முடிவு செய்திருக்கிறார் தவெக தலைவர் விஜய்.

திமுகவின் கூட்டணி கட்சிகளை அந்தக் கூடாரத்திலிருந்து உருவுவதன் மூலம் போதுமான அளவு பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்று நம்பிய விஜய்க்கு பெரிய ஏமாற்றமே மிஞ்சியது.

மதிமுக என்ற மாபெரும் கட்சியை தன் பக்கம் வளைத்துவிட்டார்விஜய், ஆனால்அதன்எம்எல்ஏக்கள் திமுகவிலேயே தங்கி விட்டார்கள். கோபால்சாமி கோபப்பட்டுப் பேசிப் பார்த்திராதவர்களுக்கு இப்பொழுது ஒரு வாய்ப்பு.



திமுகவின் அப்பா இன்றைய ஆட்சியே அவர்கள் போட்ட பிச்சை என்று இன்னமும் பினாத்திக் கொண்டிருக்கிறார். அந்த இரு எம்எல்ஏக்கள் தங்கள் பக்கம் இருக்கும் தைரியத்தில் சீக்கிரமே தேர்தல் வரும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்.

அதுல பாருங்க சம்பந்தி, சாணக்கியருக்கும் அடி சறுக்கும்னு எங்க ஊர்ல ஒரு பழமொழி சொல்வாங்க. அது இப்ப நிஜமாகிப் போச்சு பாத்தீங்களா! கடந்து சென்ற ராமசாமியின் குரல் காதில் விழுந்தது.

தேசிய ஜனநாயக் கூட்டணியில் இருந்து விலகுவதாக தமிழ் மாநில காங்கிரஸ் அறிவித்ததைத் தான் அவர் சொல்கிறார் என்று யூகித்தேன். ஆனால் அவர்களை கூட்டணியில் சேர்த்து, இத்தனை முக்கியத்துவம் கொடுத்த உள்ளூர் சாணக்கியர்(கள்?) யாரென்று தான் தெரியவில்லை.

இனிமேலாவது கூட்டணி விவகாரங்களில், ராஜ்யசபா ஒதுக்கீட்டில் சாணக்கியர் தானே நேரடியாகக் கவனம் கொடுத்தால் நல்லது. சாமானியர்களைக் கேட்டு முடிவு செய்வதும், உள்ளூர் சாணக்கியர்களுக்கு ஓய்வு தருவதும் நலம் பயக்கும்.

இந்த அறிவுரை எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும் இப்ப ஏதாவது குட்டிக் கதை சொல்லுங்க - தான் வந்திருப்பதை வார்த்தைகளால் உணர்த்தினார் வடக்குப்பட்டியார்.

ஒன்னு என்ன, ரெண்டு சொல்லலாம் என்றேன். அரட்டையில் சுவாரசியம் கூடியது. அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

ஒரு பள்ளிக்கூடத்துல பேச்சுப்போட்டி நடத்தினாங்களாம். எல்லாரும் அவங்கவங்க தலைப்புல பேசும் போது ஒரே ஒரு மாணவன் மட்டும் மாத்திப் பேசினானாம். “நம்பிக்கை”தானே உனக்குக் கொடுத்த தலைப்பு நீ என்ன பேசுற, உன் பேர் என்னன்னு வாத்தியார் கேட்டாராம். என் பேரு கோபால்சாமின்னு சொன்னானாம் அந்தப் பையன்.

தலைப்பை நினைத்துச் சிரித்தார்கள் எல்லோரும்.

ஒன்னு தான சொல்லிருக்கீங்க! இன்னொரு குட்டிக் கதை? துடிப்போடு கேட்டார் துரைசாமி. இருங்க, சொல்றேன்! கொஞ்சம் வெந்நீர் குடித்துவிட்டு அடுத்த கதையை ஆரம்பித்தேன்.

அதே பள்ளிக்கூடத்துல அடுத்ததா ஒரு மாணவன் வந்தானாம். எல்லா மாணவர்களைப் போல இல்லாம வித்யாசமா டி-ஷர்ட் போட்டு இருந்தானாம் அவன். நீ என்ன தலைப்புல பேசப் போற அப்படின்னு சந்தேகத்தோட கேட்டாராம் வாத்தியார். “நாகரிகம்” அப்படின்னு சொன்னானாம் அவன்.

தலைவிதியை நினைத்துச் சிரித்தார் அந்த வாத்தியார்!

அடுத்ததாக தாங்கள் என்ன குட்டிக்கதை சொல்லலாம் என்று ஆளுக்கு ஆள் யோசித்துக் கொண்டிருந்தார்கள். அன்றைய அங்காடித்தெரு உலா அத்தோடு முடிந்தது. அரட்டை அரங்கம் அப்படித்தான் கலைந்தது.


# ரிபப்ளிக் டிவி உச்சிமாநாட்டில் பிரதமர் மோடி பேச்சு - ஒரு சாமானியனின் பார்வை

அருண்பிரபு

ரிபப்ளிக் தொலைக்காட்சி சமீபத்தில் ஒரு மாநாடு நடத்தியது. அதில் அரசியல், வணிகம், அரசுச்சூழல் உள்ளிட்டவற்றில் இன்னார் என்று அறியப்படும் பலரும் கலந்து கொண்டனர். அதில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பேசினார். அதுபற்றிப் பார்ப்போம். அறிமுகப்படலத்தில் ரிபப்ளிக் டிவி அதிபர் அர்னாப் கோஸ்வாமி கூறுகையில் சொல்லி அடித்த கில்லி என்று பொருள்படப் பிரதமரைப் புகழ்ந்தார். பின்னர் பேசும் போது 2014 தேர்தலின் போது மோடி அவர்களைப் பேட்டி எடுக்க தானும் சொல்லிவிட்டுக் காத்திருந்ததாகவும் காலம் தாழ்ந்த நிலையில் பாஜக தரப்பில் விசாரித்த போது அந்தத் தேர்தல் சூழலின் முத்தாய்ப்புப் பேட்டியாகத் தனது அமையும் என்று சொல்லப்பட்டதாகவும் சொன்னார். அதோடு வேறொருவரைப் பேட்டியெடுத்து நான் மிகப்பிரபலமானேன் என்று எள்ளல் தொனிக்கக் கூறினார்.

பின்னர் பேசிய பிரதமர் மோடி ரிபப்ளிக் டிவி பல்வேறு மொழிகளில் வருவது குறித்துப் பாராட்டினர். 24 மணி நேர செய்திச் சேனல்களில் breaking news என்பது எவ்வளவு முக்கியமாகிவிட்டது என்று தொடங்கி உலகமே இன்றைய நாளில் breaking news கதியில் இருக்கிறது என்றார். அப்படிப்பட்ட ஆரவாரம், பரபரப்புக்கு இடையே இப்படி ஒரு மாநாட்டை நடத்துவது சிறப்பானது என்று வாழ்த்தினார். இந்த மாநாட்டின் கருப்பொருள் "மஹாசக்தி பாரதம் - தேசத்துக்கு முதன்மை" (Great Power India: Nation First).

நம்முடைய திருமறைகளில் **यतो धर्मस्ततो जयः** அதாவது "எங்கே அறம் இருக்கிறதோ அங்கே வெற்றி இருக்கும்" என்று சொல்லப்பட்டுள்ளது. அறம் என்பது நமக்கான கடமை. நமக்கான நீதி. நமக்கான சொல். நமக்கான பரிவு. இதன் சாரம் தேசத்துக்கு முதன்மை என்ற நிலைப்பாட்டில் இருக்கிறது. பாரதம் தன் சக்தியை இதன் மூலமே பார்க்கிறது. இந்த அளவுகோலிலேயே அளக்கிறது. நம் பாரத தேசத்துக்கு மற்றொரு தனிப்பட்ட குணம் இருக்கிறது. அதை இன்றைய உலகம் அங்கீகரித்துள்ளது. நாம் அவசரப்பட்டு எதற்கும் எதிர்வினையாற்றுவதில்லை. நம்




தேசம் வளர்ந்த போதும் வீழ்ந்த போதும் நாம் பொறுமையோடு இருந்தோம். நம் தேசத்தின் நினைவுகளுக்கும் வயதுக்கும் கணக்கே இல்லை. இவற்றை நம் ஆழ்மனதில் சுமந்துகொண்டு வாழ்கிறோம் நாம். அதனால் தான், இதை நான் முழுப் பொறுப்புணர்வோடு சொல்கிறேன், பாரதம் இன்று என்ன செய்கிறதோ அதுவே அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கான எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. இதுவே நாம் உலகுக்கு அளிக்கும்

**நம் நாட்டில் இப்படி வறுமைக்கோட்டுக்கு மேலே மீண்டு வந்த மக்களால் மிகப்பெரிய நடுத்தர வர்க்கம் உருவாகியிருக்கிறது. இவர்களுக்காக வீட்டுவசதிகள் உருவாக்கப்பட்டன. முன்பெல்லாம் வீட்டுக்கடன் இரட்டை இலக்க வட்டியில் வந்தது. இப்போது 7-8% வட்டியில் கடன் தருகின்றன வங்கிகள்.**

உறுதி. நாம் வேகமாக வளரும் பொருளாதாரம் மட்டுமல்ல, நம்பகமான பொருளாதாரமும் கூட. நாம் வளரும் சக்தி என்பதோடு நம்மை அதிசக்தி (அதாவது வல்லரசு என்ற பொருளில்) உலகத்தார் அழைக்கிறார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன் நாம் ஒரு நம்பகமான பொருளாதாரம். சமீபத்திய G7 மாநாட்டில் பல தேசங்களின் தலைவர்கள் நமது தேசத்துக்கு முதன்மை என்ற கொள்கையை உயரிய நெறி என்று சொன்னார்கள்.

இங்கே நம்முடன் ஸ்ரீதர் வேம்பு அவர்கள் இருக்கிறார். இவர் போன்ற தொழில்முனைவோர் தேசத்துக்கு முதன்மை என்ற கோட்பாட்டில் தேசத்தின் தேவைகளை உணர்ந்து நிறுவனங்களைக் கட்டமைக்கும் போது தேசம் வளம் செழிக்கிறது. இங்கே ஸ்ரீதர் வேம்பு அவர்களின் பணி பற்றி எவ்வளவு பேசுகிறோம் என்று தெரியவில்லை. ஆனால் ஃப்ரான்ஸில் விவா டெக் என்ற தொழில்நுட்ப மாநாட்டுக்குப் போயிருந்தேன். 1.5 முதல் 2 லட்சம் இளைஞர்கள் இருந்தார்கள். நானும் ஃப்ரான்ஸ் அதிபரும் ஒவ்வொரு நிறுவனத்தின் அங்காடிகளாகப் பார்த்துக்கொண்டு வரும் போது அங்கே Zoho அங்காடிக்கு வந்தோம். நான் பிரமித்துப் போனேன். பெருமைப்பட்டேன். ஐரோப்பிய இளைஞர்பட்டாளம் அங்கே குழுமியிருந்தது. அவர்கள் இங்கே புதிதாக என்ன கண்டுபிடிப்பை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்று பார்க்கக் கூடியிருந்தார்கள். இங்கே பெரிய அளவில் பேசப்படவில்லை என்றாலும் ஃப்ரான்ஸில் நான் பார்த்தது தனிச்சிறப்புடையது. உங்களுக்கு வாழ்த்துக்கள்.

தேசத்துக்கு முதன்மை என்ற கோட்பாட்டில் நம் அரசு எடுக்கும் கொள்கை முடிவுகள் நமது பழங்குடி மக்களுக்கு எத்தனை நன்மை செய்துள்ளது? நான் இங்கே தத்துவம் பேச வரவில்லை. அந்தப் பழங்குடி மக்களின் பகுதிகளில் நக்சல் பயங்கரவாதம் ஆக்கிரமித்துக்கொண்டு அட்டூழியம் செய்தது. இந்த நூற்றாண்டிலும் பயங்கரவாதிகள் அந்த மக்களுக்கு நலத்திட்டங்கள், அடிப்படை வசதிகள் எதுவுமே கிடைக்காமல் தடுத்து வந்தனர். 2004-14 காலகட்டத்தில் பத்தாண்டுகளில் 17000 வன்முறை சம்பவங்கள் நடந்தன, அவற்றில் 7000க்கும் அதிகமான மனித உயிர்கள் பலியாகின. நீங்கள் அரைமணி நேர தொலைக்காட்சி விவாதத்தில் மாவோயிஸ்ட் பயங்கரவாதம் அழிந்துபோனது என்று கேட்டிருப்பீர்கள். ஆனால் நிஜத்தில் அப்படி நடப்பதில்லை. இன்று சிலர் அரசியல் சாசனம் என்று முகப்பு அட்டையில் எழுதப்பட்ட புத்தகத்தை ஆட்டிக்கொண்டு வலம் வருகின்றனர். அவர்கள் ஆட்சியில் இருந்தபோது நக்சல் ஆக்கிரமித்த பகுதிகளில் இந்திய அரசியல் சாசனம் என்று சொன்னாலே உயிர் போகும் என்ற நிலை. ஆனால்




இவர்கள் கை, கால்கள் நடுங்க அரசியல் சாசனப் புத்தகத்தைக் கையில் பிடிக்க இயலாத நிலையில் நடுங்கிக்கொண்டு கிடந்தார்கள். இந்தக் கொடூரத்தைத் தெரியாதது போலவே இருந்தது காங்கிரஸ் கட்சி.

2014ல் தொடங்கி நாம் தேசத்துக்கு முதன்மை என்ற கோட்பாட்டில் செயல்படத் தொடங்கினோம். பேச மட்டுமில்லாமல் செயலிலும் காட்டினோம். வேரோடு நக்சல்-மாவோயிஸ பயங்கரவாதத்தைப் பிடுங்கி எறிய உறுதி பூண்டோம். இன்று உலகமே அதன் முடிவைப் பார்க்கிறது. நாம் நக்சல் இடங்கள் என்று அறியப்பட்டவைகளில் 9,500 செல்போன் டவர்களைக் கட்டினோம். 1800 வங்கிக் கிளைகளைத் திறந்தோம். 6000 தபால் அலுவலகங்கள் திறந்தோம். சாதாரண மக்களின் எதிர்ப்பார்ப்பைப் பூர்த்தி செய்ய கடவுள் தந்த பலத்தோடு போனோம். இன்று சாதித்துவிட்டோம். அந்தப் பகுதியில் பஸ்தார் ஒலிம்பிக்ஸ் என்று விளையாட்டுப் போட்டிகள் நடத்தி ஏறத்தாழ 4லட்சம் இளைஞர்களை ஈர்த்துள்ளோம். முன்பெல்லாம் எதைக் கேட்டாலும் அது நடக்காது, முடியாது, இயலாது என்றே பேசி வந்தார்கள். “செய்வோம், முடியும்” என்று முடிவு கட்டி இறங்கி நாம் சாதித்தோம். இன்னமும் பல தடைகளைத் தாண்ட வேண்டியது இருக்கிறது. நாம் தாண்டுவோம். சாதிப்போம்.

பாரதத்தின் 100 மாவட்டங்களில் 500 வட்டாரங்கள் பற்றிப் பேச விரும்புகிறேன். இவை வளர்ச்சியின் ஒவ்வொரு படியிலும் பின் தங்க விடப்பட்டவை. முந்தைய அரசுகள் இவற்றைப் பின் தங்கிய பகுதிகள் என்று அறிவித்தன. முதலில் அவற்றை பின் தங்கிய பகுதிகள் என்றில்லாமல் “லட்சியப் பகுதிகள்” என்று அழைக்கத் தொடங்கினோம். இன்று அந்த லட்சியப் பகுதிகள் அந்தந்த மாவட்டங்கள், வட்டாரங்களில் மட்டுமல்லாமல் மாநில


**ஒரு சில கும்பல்கள் இருக்கிறார்கள். முதல் நாள் மாலை ஏன் மின்சாரம் போகிறது என்று போராடுவார்கள். ட்ராஃபிக் ஜாம் ஆகிறது என்று கோபப்படுவார்கள். மறுநாள் காலை சாலை விரிவாக்கம் கூடாது என்று கொடிபிடிப்பார்கள்.**

வளர்ச்சிக்கும் முன்னெடுப்புகளைத் தருகின்றன. முன்பு இந்தப் பகுதிகளில் மக்கள் ஏழ்மையில் வாடிக்கொண்டிருந்தனர். இப்போது 2.5 கோடிப்பேர் வறுமைக்கோட்டுக்கு மேலே வந்துள்ளனர். மற்றையோரையும் மீட்டெடுப்போம்.

நம் நாட்டில் இப்படி வறுமைக்கோட்டுக்கு மேலே மீண்டு வந்த மக்களால் மிகப்பெரிய நடுத்தர வர்க்கம் உருவாகியிருக்கிறது. இவர்களுக்காக வீட்டுவசதிகள் உருவாக்கப்பட்டன. முன்பெல்லாம் வீட்டுக்கடன் இரட்டை இலக்க வட்டியில் வந்தது. இப்போது 7-8% வட்டியில் கடன் தருகின்றன வங்கிகள். கட்டுமான நிறுவனங்கள் வீடு கட்டுவதைத் தாமதப்படுத்தி செலவை அதிகரித்து வந்தன. அதைக் கட்டுப்படுத்தி நிறுத்தப்பட்ட/தாமதமான கட்டுமானங்களை முன்னெடுக்க 25000 கோடி ஒதுக்கி ₹ 60000 வீடுகளைக் கட்டித் தந்துள்ளோம்.

மற்றொரு விஷயம் இணைப்பும் போக்குவரத்தும். முன்பெல்லாம் 28 லட்சம் மக்கள் தினசரி நாடு முழுவதும் மெட்ரோவில் பயணித்தனர். இப்போது 1.28 கோடி மக்கள் தினசரி பயணிக்கின்றனர். அதிவேக வந்தேபாரத் ரயில்கள் விட்டிருக்கிறோம். அது தவிர நமோ பாரத், அம்ரித் பாரத் என்று புதுப் புது ரயில்கள் பலமான கட்டுமானத்தில் பயணத்தை எளிதாக்குகின்றன. புதிய சாலைகள் போடப்பட்டும் பழைய சாலைகள் புதுப்பிக்கப்பட்டும் பயண நேரம் குறைக்கப்பட்டதோடு, வாகனப் பராமரிப்புச் செலவும் குறைகிறது. அதுபோக நடுத்தர வர்க்கத்தினர் வான்வழிப் பயணம் செய்யவும் நாம் ஆவன செய்துள்ளோம். கடந்த 12 ஆண்டுகளில் நடுத்தரவர்க்கத்தினரின் வருமானத்தை உயர்த்தியுள்ளோம். 2013-14ல் 2 லட்ச ₹ வருட வருமானத்துக்கு வரி விதிக்கப்பட்டது. இப்போது 12 லட்ச ₹ வருட வருமானம் வரை வரி இல்லை.

நடுத்தரவர்க்கத்தினரின் முக்கியப் பெருஞ்செலவு வைத்தியம். குறிப்பாக சர்க்கரை நோய். நாம் அதற்கான மருந்துகளை 1000 ₹யிலிருந்து 200 ₹ என்ற அளவுக்கு ஏறத்தாழ 80% விலை குறைத்துள்ளோம். இதெல்லாம் இருந்தாலும் மனித இயல்பு என்பது வசதி வந்த பிறகு பழைய துன்பங்களை மறந்துவிடுவதே ஆகும். முன்பு 2 லட்ச ₹ வருட வருமானத்துக்கு வரி விதிக்கப்பட்டது. இப்போது 12 லட்ச ₹ வருட வருமானம் வரை வரி இல்லை என்று சொன்னால் மட்டுமே கைதட்டல் வருகிறது. யாருக்கும் பழைய விவரம் நினைவில் இல்லை. அதே நேரம் பேருந்தோ ரயிலோ தாமதமானால் புகார்களைக் குவிக்கும் வர்க்கத்தினரும் இவர்களே தான். முன்பெல்லாம் ரயில் வந்தால் போதும் என்ற நிலை. இப்போது எங்கள் ஊருக்கு ஏன் வந்தே பாரத் வரவில்லை என்று கேள்வி கேட்கிறார்கள். மெட்ரோ எப்போது வரும் என்கிறார்கள். 24 மணி நேரமும் மின்சாரம் ஏன்




வருவதில்லை என்று கேட்கிறார்கள். முன்னேற்றம் மகிழ்ச்சியானது தான். இதைப் பலர் அதிருப்தி என்று பார்க்கிறார்கள். நான் இதை எதிர்ப்பார்ப்பு என்று பார்க்கிறேன்.

ஒரு சில கும்பல்கள் இருக்கிறார்கள். முதல் நாள் மாலை ஏன் மின்சாரம் போகிறது என்று போராடுவார்கள். ட்ராஃபிக் ஜாம் ஆகிறது என்று கோபப்படுவார்கள். மறுநாள் காலை சாலை விரிவாக்கம் கூடாது என்று கொடிபிடிப்பார்கள். மின்சாரம் தயாரிக்க அனல் மின் நிலையம் அமைத்தால் சுற்றுச்சூழல் புகை படிகிறது என்பார்கள். நீர் மின் நிலையம் அமைத்தால் அணைக்கட்டுகளால் இயற்கை பாதிப்பு என்பார்கள். பெட்ரோல் / டீசலால் சுற்றுச்சூழல் பாதிப்பு என்றும் போராடுவார்கள். மின்சார வாகனங்கள் ஓட்ட மின்சாரம் தயாரிக்கவும் கூடாது என்று போராடுவார்கள். என்னதானய்யா வேண்டும். எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டும். சரி என்ன தான் செய்தால் எதிர்க்க மாட்டீர்கள்? எல்லாம் வேண்டும் ஆனால் எதுவும் செய்யக்கூடாது என்று பேசுவார்கள். ஊழலை ஒழிக்க வேண்டும் என்பார்கள். ரெய்டு வந்தால், நடவடிக்கை எடுத்தால் பழிவாங்கல் என்று கூச்சலிடுவார்கள். அனாவுக்கு எதிராக ஆவன்னா என்பார்கள். ஆவன்னாவுக்குப் போனால் ஆவன்னாவும் தவறு என்பார்கள். காங்கிரஸ் இதுபோன்ற சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் தேசத்துக்கு முதன்மை என்று பேசும் என்று எதிர்ப்பார்ப்பது தவறான கனவாகப் போய்விட்டது.

இந்த ரிபப்ளிக் டிவி மேடையில் இருந்து சொல்கிறேன், "நமது கனவுகள் பெரியவை. நமது முயற்சிகளும் அதற்கேற்ப பெரிய அளவிலே இருக்கும். 140 கோடி பாரதீயர்களின் ஒருமித்த பெருமுயற்சி நம்மை வளர்ந்த நாடாக ஆக்கும். நம் கண்களால் இந்த வளர்ந்த பாரதத்தைக் காண்போம். அவ்வளவு சீக்கிரம் இந்தக் கனவு பலிக்கும். சில தலைமுறைகள் ஆகும் என்று யாரும் கருதினால் மாற்றிக்கொள்ளுங்கள். இந்த நம்பிக்கையோடு உங்களிடம் வாழ்த்துக்கூறி அமர்கிறேன். வந்தே மாதரம்.

# எடின்பர்க் ராயல் காலேஜில் சுஷ்ருதர் சிலை- இந்திய ஞான மரபை போற்றும் உலகம்

-சேதுமாதவன்

ஸ்காட்லாந்தில் உள்ள எடின்பர்க் ராயல் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸ், சுமார் 2,600 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்திய மருத்துவர் சுஷ்ருதரின் சிலையை காலேஜ் வளாகத்தில் திறந்துள்ளது. பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையின் ஆரம்ப வளர்ச்சியுடன் பரவலாக தொடர்புபடுத்தப்படும் பண்டைய இந்திய ஞான மரபில் உதித்த சுஷ்ருத சம்ஹிதா மற்றும் பாரம்பரிய அறிவு அமைப்புகள் இன்று எவ்வாறு ஆய்வு செய்யப்பட்டு புரிந்துகொள்ளப்படுகின்றன என்பது குறித்த விவாதத்தை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது.

சுஷ்ருத சம்ஹிதாவில் 1,120 நோய்கள், 700-க்கும் மேற்பட்ட மருத்துவ மூலிகைகள், 300-க்கும் மேற்பட்ட மருத்துவ நடைமுறைகள் மற்றும் சுமார் 120 அறுவை சிகிச்சை கருவிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எடின்பர்க் ராயல் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸ், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையின் தந்தை என்று பரவலாக போற்றப்படும் சுஷ்ருதரின் சிலையை திறந்து வைத்ததன் மூலம், அவரது பணி மீண்டும் உலக கவனத்தை ஈர்த்துள்ளது. உலகின் மிகப் பழமையான அறுவை சிகிச்சைக் கல்லூரியாகக் கருதப்படும் இந்த நிறுவனம், அறுவை சிகிச்சைத் துறைக்கான அவரது பங்களிப்புகளைப் பாராட்டும் வகையில் 90 கிலோ எடையுள்ள வெண்கலச் சிலையை நிறுவியுள்ளது. இந்தச் சிலை நம் தமிழகத்திலுள்ள சுவாமிமலையில் வடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், மெல்போர்னில் உள்ள ராயல் ஆஸ்திரேலேசியன் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸும் இதேபோன்ற முறையில் சுஷ்ருதரை கௌரவித்திருந்தது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அவர் பதிவு செய்த மருத்துவ அறிவை நினைவூட்டும் அவரது சிலை அங்கு உயரமாக நிற்கிறது.

கண்டங்கள் வேறுபட்டிருந்தாலும், சுஷ்ருதரின் பங்களிப்பை அங்கீகரிக்காமல் அறுவை சிகிச்சை வரலாற்றை முழுமையாக சொல்ல முடியாது என்று இந்த இரண்டு நிறுவனங்களும் ஒரே முடிவுக்கு வந்துள்ளன.

“தி சோர்ஸ் புக் ஆஃப் பிளாஸ்டிக் சர்ஜரி” என்ற நூலில், ஃபிராங்க் மெக்டோவல் சுஷ்ருதரைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்:

“சுஷ்ருதரின் அலங்காரமான மொழி, மந்திரங்கள் மற்றும் தொடர்பற்ற விவரங்களைத் தாண்டி, ஒரு சிறந்த அறுவை சிகிச்சை நிபுணரின் தெளிவான உருவம் வெளிப்படுகிறது. தோல்விகளால் தளராதவராகவும், வெற்றிகளால் மயங்காதவராகவும் இருந்த அவர், உண்மையை இடைவிடாமல் தேடி, அதைத் தன் பின்தொடர்ந்தவர்களுக்கு வழங்கினார். நோய்களையும் உடல் குறைபாடுகளையும் காரணப்பூர்வமான மற்றும் தர்க்கரீதியான முறைகளால் அணுகினார். பாதை இல்லாத இடத்தில் புதிய பாதையை உருவாக்கினார்.”

சுஷ்ருத சம்ஹிதா மருத்துவ நடைமுறைகளைப் பற்றிய விரிவான விளக்கங்களை வழங்குகிறது. பூர்வ தந்திரம் மற்றும் உத்தர தந்திரம் என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த நூல், அறுவை சிகிச்சை, பொதுமருத்துவம், குழந்தை மருத்துவம், நச்சியல், மனநல மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை நோய்கள் மற்றும் முதியோர் பராமரிப்பு போன்ற பல துறைகளை உள்ளடக்கியது.

இந்த நூல் 300-க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை முறைகளையும், சிகிச்சையில் பயன்படுத்தப்பட்ட 120-க்கும் மேற்பட்ட கருவிகளையும் விவரிக்கிறது. மேலும் தாவரங்கள், விலங்குகள் மற்றும் கனிமங்களிலிருந்து பெறப்பட்ட நூற்றுக்கணக்கான மருந்துகளையும் பட்டியலிடுகிறது.

அதன் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளில் ஒன்று, அறுவை சிகிச்சையை எட்டு வகைகளாக வகைப்படுத்தியிருப்பதாகும். இதில் அகற்றுதல், வெட்டுதல், துளையிடுதல், வெளிப்படுத்துதல், வடிகட்டுதல் மற்றும் தையல் போடுதல் போன்ற நடைமுறைகள் அடங்கும்.

இந்த நூலில் அறுவை சிகிச்சைப் பயிற்சிக்கான விரிவான வழிமுறைகளும் இடம்பெற்றுள்ளன. இதன் மூலம், பண்டைய இந்தியாவில் மருத்துவக் கல்வி முறையான கற்றல் மற்றும் நடைமுறை அனுபவத்தை உள்ளடக்கியிருந்தது என்பதை அறிய முடிகிறது.

சுஷ்ருதர் விவரித்த பல கருத்துகள் இன்றும் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன. தீக்காயங்கள், வெப்ப அதிர்ச்சி, கடும் குளிரால் ஏற்படும் காயங்கள் மற்றும் மின்னல் தாக்கத்தால்



ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்றை அவர் ஒரே பரந்த கட்டமைப்பின் கீழ் "வெப்ப காயங்கள்" என வகைப்படுத்தியிருந்தார்.

மருத்துவ வரலாற்று ஆய்வாளர்கள், இத்தகைய அணுகுமுறைகள் நவீன அறுவை சிகிச்சையில் மிகவும் பின்னர் தான் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டன என்று குறிப்பிடுகின்றனர்.

இந்த நூல், நீரிழிவு நோய், உடல் பருமன் மற்றும் இதய-இரத்த நாள நோய்களை ஒத்த நிலைகளையும் விவரிக்கிறது. இவற்றில் சில நோய்கள் வாழ்க்கை முறையுடன் தொடர்புடையவை என சுஷ்ருதர் கருதியதோடு, உடற்பயிற்சியையும் சிகிச்சையின் ஒரு பகுதியாக பரிந்துரைத்தார்.

தேசிய மருத்துவ நூலக (NLM) இதழில் சுரஜித் பட்டாச்சார்யா இவ்வாறு எழுதுகிறார்:

"ஹிப்போகிரட்டீஸுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பும், செல்சியஸ் மற்றும் கேலன் போன்ற ஐரோப்பிய மருத்துவ முன்னோடிகளுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பும், ஒரு உண்மையான மனிதர் இத்தகைய அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டார் என்பதை பலர் உணரவும் மதிப்பிடவும் கடினமாக உள்ளது."

சுஷ்ருதர் மீதான புதுப்பிக்கப்பட்ட ஆர்வம், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (IITs) இந்திய ஞான மரபுகளை (IKS) குறித்த ஆராய்ச்சிகளையும், நவீன ஆராய்ச்சிக்கு இந்திய ஞான மரபுகளை அடிப்படையாகக் கொள்ளவும் வழியமைத்திக் கொடுத்துள்ளது.

சமீபத்தில், ஐஐடி ரூர்கி ஆய்வாளர்கள் சிக்குன்குனியா அறிகுறிகளை கட்டுப்படுத்த பசுவை அடிப்படையாகக் கொண்ட கலவைகளைப் பயன்படுத்துவது குறித்த ஆய்வு முடிவுகளை வெளியிட்டனர். இந்த ஆய்வு உடனடியாக விவாதத்தை ஏற்படுத்தியது. ஆதரவாளர்கள் மேலும் ஆராய்ச்சி தேவை என வலியுறுத்தியபோது, விமர்சகர்கள்/ எதிர்ப்பாளர்கள் அதன் அடிப்படை முன்னெண்ணத்தையே வழக்கம்போல் கேள்விக்குட்படுத்தினர்.

ஹிமாச்சல் பிரதேசம் ஐஐடி மண்டி போன்ற நிறுவனங்கள் இந்த துறையை ஆராய முயன்று வருகின்றன. அங்குள்ள ஆய்வாளர்கள் உயிரித் திணிவு (bio-mass) அடிப்படையிலான ஆற்றல் அமைப்புகள் முதல் பாரம்பரிய இசையின் மனநல விளைவுகள் வரை பல்வேறு திட்டங்களில் பணியாற்றுகின்றனர். இந்திய இசைக்கருவிகள் மனதில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்த ஆய்வுகளின் முடிவுகள் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன.

ஹிமாச்சல் பிரதேசம் ஐஐடி மண்டி, இயக்குநர் பேராசிரியர் லக்ஷ்மீதர் பெஹரா, இந்திய அறிவு அமைப்புகள் (IKS) ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான புதிய வாயில்களைத் திறக்கக்கூடும் என்கிறார்.

"அறிவு உருவாக்கத்தில் இந்தியாவை ஒரு புதிய நிலைக்கு கொண்டு செல்லும் திறன் IKS-க்கு உள்ளது. ஆனால், தாயக அறிவை எளிதில் நிராகரித்து, மேற்கத்திய பார்வையின் மூலம் மட்டுமே அதற்கு அங்கீகாரம் தேடுவது ஒரு தடையாக உள்ளது," என்று அவர் கூறுகிறார்.

பல ஆய்வாளர்கள் இந்த அறிவு அமைப்புகளை திறந்த மனதுடன் புரிந்துகொள்ள முயற்சித்து வருகின்றனர். நவீன அறிவியலையும் பாரம்பரிய அறிவையும் இணைத்து, இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய புதிய அணுகுமுறைகளை அவர்கள் உருவாக்கி வருகின்றனர்.

சுஷ்ருத சம்ஹிதாவை தொகுத்த மருத்துவர், ஆசிரியரிடமிருந்து மாணவருக்கு அறிவு பரிமாறப்படும் குருகுலக் கல்வியைப் பின்பற்றி, எதிர்கால தலைமுறைகளுக்கு ஒரு ஞானப் பொக்கிஷத்தைக் கொடுத்துள்ளார். காலத்தால் அழியாத ஞானத்தை சிதைவில்லாமல் பல தலைமுறைகளுக்குக் கொண்டுச் சேர்க்கும் குருகுல வழிக்கல்வியைப் பற்றிய ஆராய்ச்சிகளும், மீட்டுருவாக்கும் முயற்சிகளும் புத்துணர்வு பெற்று வருகிறது.

எடின்பர்க் மற்றும் மெல்போர்னில் நிறுவப்பட்டுள்ள சிலைகள் வரலாறு, அறிவியல் அல்லது பாரம்பரியம் குறித்த ஆய்வுகளையும், புரிதல்களையும் வலுப்படுத்தும் அதே நேரத்தில், பாரதீய பெருமிதத்தை பறைசாற்றும் ஆய்வு முடிவுகள், நிறுவனங்கள் மீதான எதிர்ப்பாளர்களின் தாக்குதலை அதிகரிக்கவே செய்யும். எப்படி இருப்பினும், சுஷ்ருதரின் பங்களிப்புகள் இந்திய எல்லைகளைத் தாண்டி உலகளவில் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன என்பதற்கான வலுவான அடையாளமாகவே இந்த சிலை அமைக்கும் வைபவங்கள் விளங்குகின்றன.






# வாய்க்காகட்டை வம்பு

-நா.பாஸ்கரன்

**01** **காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநில தலைவரானார் மாணிக்கம் தாகூர்**



பவர்ல இருந்த திமுக, அதிமுக சொற்படி மாநிலத் தலைவர்களை நியமிச்ச காங்கிரஸ், இப்ப தவெகவுக்கு பிடிச்ச ஆளை மாநில தலைவராக ஆக்கியிருக்காங்க. பலே!

**02** **“மறைந்த இயக்குநர் பாக்யராஜ் உடல் அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்தபோது கிட்டத்தட்ட 3 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் இருட்டில் வைக்க வேண்டிய சூழல். திமுக முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன்**



பவர் கட்டால் ஆட்சி இழந்தவங்க அனுபவத்துல சொல்றத கேளுங்க விஜய் ப்ரோ. வேணும்னா ஆற்காடு வீராசாமி கிட்டு கேட்டு தெரிஞ்சிக்குங்க

**03** **எப்போது வேண்டுமானாலும் தேர்தல் வரலாம் என்ற திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்.**



துர்காம்மா கொடுக்குற டார்ச்சர்ல தினமும் இப்படி உலறும் நிலையில இருப்பது வேதனை. ஜெயிச்சு ஆட்சியில் இருந்தப்ப அமைச்சர்களால் தூக்கம் போச்சு. இப்ப தோற்ற பிறகும் தொடருது.

**04** **தாம்பரம் எம்.எல்.ஏ - தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சரான கில்லி சரத்குமார், பொது இடத்தில் போதைப்பொருள் உட்கொண்டதாகக் கூறி வீடியோ ஆதாரங்களை முன்வைத்து திமுகவினர் போராட்டம்.**



அவங்க மேலயும் தான் யார் அந்த சார்னு? கூப்பாடு போட்டாங்க. ஆதாரம் சிக்கியதா? இதுக்கு தான் திராவிட மாடல் ட்ரைனிங் வேணுங்கிறது.

**05** **தனியார் பள்ளி அங்கீகாரம், தரம் உயர்வுக்கு ரூ.100 கோடி பெற்று மோசடி - திமுகவை சேர்ந்த பி.டி.அரசகுமார் கைது.**



கல்வியிற் சிறந்த தமிழ்நாடுன்னு திராவிட மாடல் ஆட்சியில் ஒரு விளம்பர நிகழ்ச்சி நடத்துனதுக்கு இவர்தான் ப்ரைம் ஸ்பான்ஸரா? என சாமானியர்கள் கேட்கிறாங்க.

**06** **தவெக ஆட்சி அமைய ஆதரவளித்த தோழமை கட்சிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்க விசிகவுக்கு அழைப்பு.**



திமுக கூட்டணியில் இருந்தப்ப ப்ளாஸ்டிக் சேரில் உட்கார்ந்ததற்கு கலாய்ச்சாங்க. இப்ப ஸ்டைலா, கெத்தா சோஃபாவுல உட்கார்ந்தா அதுக்கும் கிண்டல் பண்றாங்க. நான் என்ன தான் பண்றது? திருமா மைண்ட் வாய்ஸ்

**07** **“மேற்கு வங்கத்தில் வெற்றி பெற்றுள்ளோம்; அஸ்ஸாமில் வெற்றி பெற்றுள்ளோம்; அடுத்த இலக்கு தமிழ்நாடுதான் - நயினார் நாகேந்திரன்**



அங்கெல்லாம் வலிமையான தலைவர்கள், சமரசமில்லா ஹிந்துத்துவ கொள்கையோட உழைக்கிறாங்க, அதனால ஜெயிக்கிறாங்க. இங்கே அதுக்கு வாய்ப்பில்ல ராஜா என எக்கோ அடிக்கு சார்.

**08** **உலக வரைபடத்தில் ஈரான் என்ற ஒரு நாடே இருக்காது - அமெரிக்க அதிபர் ட்ரம்ப்**



நீங்க இப்படியே போரை நடத்துனீங்கன்னா ஈரான் மட்டுமல்ல அமெரிக்காவே இருக்காதுயா.

# மதமாற்றம் செய்ய ஆயுதமாகும் பாலியல் வன்கொடுமை

ப்ரியா வெங்கட்



மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் இந்திய விமானப்படை அதிகாரி ஒருவரின் 24 வயது மனைவி, அவரது பள்ளிப்பருவ நண்பரால் ஏமாற்றப்பட்டு பாலியல் வன்கொடுமை, மிரட்டிப் பணம் பறித்தல், மற்றும் கட்டாய மதமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்ட கொடூர சம்பவம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பெண் அளித்த புகாரின் பேரில், நாக்பூர் காவல்துறையினர் இருவரைக் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 24 வயது பெண்மணி நாக்பூரில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்துள்ளார். கடந்த 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், அவரது பள்ளித் தோழனான அயாஸ் தாஜ் மதாரே என்பவர் நிலம் வாங்க வேண்டும் என்ற போர்வையில் அந்தப் பெண்ணைத் தொடர்பு கொண்டுள்ளார். பழைய நண்பர் என்பதால் அந்தப் பெண்ணும் அவரை நம்பியுள்ளார்.

வர்த்தகப் பேச்சுவார்த்தைக்காக வார்தா சாலையில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு அந்தப் பெண்ணை அயாஸ் வரவழைத்துள்ளான். அங்கு அவருக்கு வழங்கப்பட்ட ஜூஸில் மயக்க மருந்து கலக்கப்பட்டிருந்தது. மயக்கமடைந்த பெண்ணை அயாஸ் பாலியல் வன்கொடுமை செய்ததோடு, அதனைத் தனது மொபைல் போனில் ரகசியமாக ஆபாச வீடியோ மற்றும் புகைப்படங்களாகவும் பதிவு செய்துள்ளான்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் இந்திய விமானப்படையில் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். “நீ வெளியில் சொன்னால், இந்த ஆபாச வீடியோக்களை உனது கணவருக்கும், சமூக வலைதளங்களுக்கும் அனுப்பி அவமதிப்பேன்; உன் கணவரின் ராணுவ வாழ்க்கையையே அழித்துவிடுவேன்” என அயாஸ் மிரட்டியுள்ளான். இந்த மிரட்டலுக்குப் பயந்து அந்தப் பெண் தொடர்ந்து அயாஸால் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாள். மேலும், அவரிடமிருந்து 3 லட்சத்திற்கும் அதிகமான பணத்தையும் அயாஸ் பறித்துள்ளான்.

கடந்த மே 31 அன்று, அயாஸ் மற்றும் அவரது கூட்டாளியான அமீன் ஷேக் ஆகியோர் அந்தப் பெண்ணைக் கமேஷ்வர் என்ற பகுதிக்குக் கடத்திச் சென்றுள்ளனர். அங்கு மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் மௌலானா என்ற மதகுருவின் முன்னிலையில், அந்தப் பெண்ணை இஸ்லாம் மதத்திற்கு மாறக் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

“என்னை விட்டுவிடுங்கள்” என்று அந்தப் பெண் அழுதுகொண்டே கெஞ்சுவதும், அயாஸ் அவரது கைகளை வலுக்கட்டாயமாகப் பிடித்துக் கொண்டு மௌலானா ஓதும் மத வழிபாட்டு வரிகளை வற்புறுத்திக் கூற வைப்பதும் பதிவாகியுள்ளது.

அதன் பின்னர், அந்தப் பெண்ணை அயாஸுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டதாகக் கூறி, வலுக்கட்டாயமாக இறைச்சி சாப்பிட வைத்துள்ளனர். மீண்டும் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

கட்டாய மதமாற்றம் மட்டுமின்றி, அந்தப் பெண்ணை வசியப்படுத்துவதாகவும், பில்லி சூனியம் வைப்பதாகவும் மிரட்டியுள்ளனர். இந்தத் தொடர் சித்திரவதைகளைத் தாங்க முடியாத அந்தப் பெண், இறுதியாக ஜூன் 13 அன்று நாக்பூர் காவல்துறையை அணுகிப் புகார் அளித்தார்.

பாதிக்கப்பட்ட பெண் அளித்த ஆதாரங்கள் மற்றும் வைரல் வீடியோவின் அடிப்படையில், நாக்பூர் காவல்துறையினர் அயாஸ் தாஜ் மதாரே மற்றும் அவனது கூட்டாளி அமீன் ஷேக் ஆகிய இருவரையும் அதிரடியாகக் கைது செய்தனர். தப்பியோடிய மௌலானாவைத் தேட மத்தியப் பிரதேசத்திற்குத் தனிப்படை அனுப்பப்பட்டுள்ளது.

அவர்கள் மீது பாலியல் வன்கொடுமை, மிரட்டிப் பணம் பறித்தல், குற்றவியல் மிரட்டல் ஆகிய பிரிவுகளுடன், மகாராஷ்டிராவின் மனிதப் பலி மற்றும் பில்லி சூனியத் தடுப்புச் சட்டத்தின் கீழும் கடுமையான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ஒரு வீடியோவை வைத்து பிளாக் மெயில் செய்பவன் அழைப்பின் பெயரில் மதமாற்ற சடங்கைச் செய்து வைக்க மதகுரு வந்தார் என்றால், அவர் போதிக்கும் மதம் எத்தகையது? இந்த முல்லாவிற்கு எதிராக ஏன் பட்வா விதிக்கவில்லை? அப்படியென்றால், இஸ்லாமிய சமுதாயம் இத்தகைய இழிசெயல்களை ஆதரிக்கிறதா?

# சிந்து நதிநீர் விவகாரத்தில் இந்திய வேர்களை முன்னிறுத்தும் பாகிஸ்தான்; ஆஸ்திரேலியா, பிரிட்டனின் ஆதரவைத் திரட்ட உக்தி !

ரகுபதி

இந்த வாரம் பாகிஸ்தானுக்கான இங்கிலாந்து தூதர், அந்நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் நிதித் திட்டத்தை அறிவித்தார். சிந்து நதிநீர் தொடர்பாக இந்தியாவுடன் மோதல் ஏற்பட்டுள்ள சூழலில், இஸ்லாமுக்கு முந்தைய வரலாறு, குறிப்பாக சிந்து சமவெளி நாகரிகத்தை (Indus Valley Civilisation) திடீரென பாகிஸ்தான் முன்னிறுத்தி, சர்வதேச ஆதரவை நாடுகிறது.

ஜியா-உல்-ஹக் ஆட்சிக்குப் பிறகு, பாகிஸ்தான் தனது வரலாறு கி.பி. 711-ல் முகமது பின் காசிம் சிந்தை கைப்பற்றியதிலிருந்தே தொடங்குகிறது என்ற கருத்தையே வலியுறுத்தி வந்தது. 2025 ஏப்ரலில் பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, இந்தியா சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை (Indus Waters Treaty - IWT) இடைநிறுத்தியதிலிருந்து, சிந்து சமவெளி நாகரிகத்துடன் தங்களுக்கு உள்ள தொடர்பை வலியுறுத்தும் திட்டமிட்ட பிரசாரத்தை பாகிஸ்தான் மேற்கொண்டு வருகிறது.

ஜூன் 19 அன்று, பாகிஸ்தானுக்கான ஆஸ்திரேலிய தூதர் திமோத்தி கேன், தக்ஷசிலாவிற்கு சென்றார். அப்போது, “பிராந்தியம் முழுவதும் மற்றும் அதற்கு அப்பாலும் உள்ள மக்களையும், சிந்தனைகளையும், கலாச்சாரங்களையும் இணைத்த கல்வி மையமாக தக்ஷசிலா விளங்கியது; அது பாகிஸ்தானின் செழுமையான பாரம்பரியத்தை நினைவூட்டுகிறது” என்று குறிப்பிட்டார்.

ஜூன் 24 அன்று, பாகிஸ்தானுக்கான பிரிட்டிஷ் தூதர் ஜேன் மாரியட், அதிகாரப்பூர்வ ஙீ தளத்தில் வெளியிட்ட காணொளியில்,

“பாகிஸ்தானின் கலாச்சார பாரம்பரியம் அசாதாரணமானது; அதை பாதுகாப்பது அவசியம். கலாச்சார பாதுகாப்பு நிதிக்கான விண்ணப்பங்கள் தற்போது வரவேற்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். பாகிஸ்தானிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலும், பிரிட்டன் அரசின் கலாச்சாரம், ஊடகம் மற்றும் விளையாட்டுத் துறையும் இணைந்து நடத்தும் இந்த நிதி, ஆபத்தில் உள்ள பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் அமைப்புகளுக்கு ஆதரவளிக்கிறது.சுஎன்றார்.

இதற்கிடையில், ஜூன் 25 அன்று BBC News Hindi, பாகிஸ்தானில் சமஸ்கிருத மொழி வளர்ச்சியைப் பற்றிய சிறப்புக் காணொளியை வெளியிட்டது.

அதில், “பிரிவினைக்குப் பிறகு, பாகிஸ்தானின் உயர்கல்வியில் சமஸ்கிருதத்திற்கு மீண்டும் இடம் கிடைத்து வருகிறது. லாகூர் மேலாண்மை அறிவியல் பல்கலைக்கழகத்தில் (LUMS) ஏற்கனவே இரண்டு சமஸ்கிருதப் பாடங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தக் கல்வியாண்டிலிருந்து சமஸ்கிருதம், பாடத்திட்டத்தின் நிரந்தர பகுதியாகிறது. டாக்டர் ஷாஹித் ரஷீத் இந்த முயற்சியை முன்னெடுத்து வருகிறார்” என்று குறிப்பிடப்பட்டது.

அந்தக் காணொளியில், லாகூரின் அனார்கலி பஜாரில் பல தசாப்தங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட சமஸ்கிருத நூல்களைக் காட்டிய டாக்டர் ரஷீத், “ஒருகாலத்தில் லாகூர் சமஸ்கிருத நூல்கள் அச்சிடப்பட்ட முக்கிய மையமாக இருந்தது; அங்கிருந்து அவை இந்தியா முழுவதும் சென்றன. ‘சமஸ்கிருதம் நமது மொழியல்ல; அது வெளிநாட்டு மொழி’ என்ற குறுகிய மனப்பான்மை கைவிடப்பட வேண்டும்” என்று கூறுகினார்.

தன்னை “சிந்து சமவெளி நாகரிகத்தின் பாதுகாவலர்” என்று அறிமுகப்படுத்திக்கொள்ளும் X பயனர் ஒருவர், இந்த சமஸ்கிருத விவாதத்தை முன்னிறுத்தி, “சமஸ்கிருதம் இந்தியாவில் அல்ல, பாகிஸ்தானில்தான் உருவானது. சமஸ்கிருத இலக்கண அறிஞர் பாணினி, பாகிஸ்தானின் ஸ்வாபி அருகிலுள்ள கிராமத்தில் பிறந்தவர். அவர் பாகிஸ்தானிலுள்ள தக்ஷசிலா பல்கலைக்கழகத்தில் கற்பித்தார்.

‘இந்தியா’ என்ற சொல் உருவாகும் 600 ஆண்டுகளுக்கு முன்பே சமஸ்கிருதம் மறைந்துவிட்டது. ‘இந்தியா’ என்ற பெயரும் பாகிஸ்தானில் ஓடும் ஒரு நதியிலிருந்தே தோன்றியது” என்றும் பதிவிட்டார்.

பாகிஸ்தான் இராணுவத் தலைவர் ஃபீல்ட் மார்ஷல் அசிம் முனீரும் தனது பேச்சில், மதத்தின் அடிப்படையிலான இரு தேசக் கோட்பாட்டைக் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் பாகிஸ்தான், திடீரென தனது இஸ்லாமுக்கு முந்தைய வரலாற்றை முன்னிறுத்தத் தொடங்கியிருப்பது, சிந்து நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் சர்வதேச ஆதரவைப் பெறும் உக்தியே!

# தயார் நிலையில் இந்தியா - சிப்ரி அறிக்கை

**- வித்யாசங்கர்**

இந்தியா 12 அணு ஏவுகணைகளை தயார் நிலையில் நிறுத்தியுள்ளது. ஒரு பட்டனைத் தட்டினால் இந்த அணுகுண்டுகளைத் தாங்கி உள்ள ஏவுகணைகள் குறிப்பிட்ட இலக்கினை அடையும். இவ்வாறு இந்த ஆண்டுக்கான சிப்ரி அறிக்கை கூறுகிறது. ஸ்வீடனின் ஸ்டாக்ஹோமில் செயல்படும் SIPRI (Stockholm International Peace Research Institute) வெளியிட்ட அறிக்கையில், இந்தியா வரலாற்றில் முதல்முறையாக 12 அணு ஆயுத போர்முனைகளை செயல்பாட்டு நிலையில் வைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது

**SIPRI என்ன செய்கிறது?**

SIPRI ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் 1966-ல் தொடங்கப்பட்ட ஒரு நிறுவனம். ஆயுதப் பாதுகாப்புத் தகவல்களைக் கண்காணிக்கும் உலகின் மிகப்பெரிய அமைப்பு இது. இந்த அமைப்பு உலகின் அனைத்து நாடுகளின் ஆயுதங்கள், அணு ஆயுதங்கள், ராணுவச் செலவுகள், போர் மற்றும் அமைதி நிலை ஆகியவற்றை ஆய்வு செய்து ஆண்டுதோறும் ஒரு அறிக்கையை வெளியிடுகிறது. ஐக்கிய நாடுகள் சபை (UN), உலக ஊடகங்கள் மற்றும் பல்வேறு அரசாங்கங்கள் SIPRI-யின் புள்ளி விவரங்களையே மேற்கோள் காட்டுகின்றன. ஒரு நாட்டில் எத்தனை அணு குண்டுகள் உள்ளன, யார் ஆயுதங்களை வாங்குகிறார்கள் அல்லது விற்கிறார்கள் போன்ற தகவல்களை இவை தெரிவிக்கின்றன. இவை அதிகாரப்பூர்வ அரசாங்க புள்ளிவிவரங்கள் அல்ல என்றாலும், மிகவும் நம்பகமான மற்றும் சுதந்திரமான தரவுகளாக உலகம் இவற்றைப் பார்க்கிறது.

SIPRI-க்கு ரகசியத் தகவல்கள் எதுவும் கிடைப்பதில்லை. செயற்கைக்கோள் படங்கள், அரசாங்க அறிக்கைகள் மற்றும் ராணுவ நிபுணர்களின் பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் மதிப்பீடுகளை உருவாக்குகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், "யாரிடம் என்ன ஆயுதம் உள்ளது" என்பதற்கான உலகளாவிய 'மதிப்பெண் பட்டியலை' வெளியிடும் தலைமை ஆசிரியராக SIPRI செயல்படுகிறது.

**இந்திய அணுஆயுதக் கொள்கையில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றம்**

2025-ல் இந்தியா நிலைநிறுத்திய அணு ஆயுதங்களின் (warheads) எண்ணிக்கை 'பூஜ்ஜியம்' (zero) ஆக இருந்தது; ஆனால் 2026-ல் அது 12-ஆக உயர்ந்தது.

இந்தியா இதுவரை அமைதிக்காலத்தில் தனது அணு ஆயுதங்களையும் (Warheads), அவற்றை ஏவித் தாக்கும் ஏவுகணைகளையும் (Delivery systems) தனித்தனியாகவே சேமித்து வைத்திருந்தது. ஆனால், தற்போது முதன்முறையாக 12 அணு ஆயுதங்களை எப்போதும் தாக்கத் தயாரான நிலையில் (Deployed Mode) ஏவுகணைகளுடன் இணைத்து நிறுத்தியுள்ளதாக சிப்ரி அறிக்கை கூறுகிறது. இதன் மூலம் இந்தியாவின் மொத்த அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 180-லிருந்து 190 ஆக உயர்ந்துள்ளது. இதில் 12 ஆயுதங்கள் தயார் நிலையிலும், மீதமுள்ள 178 ஆயுதங்கள் சேமிப்பிலும் உள்ளன.

**இந்தியாவின் மௌனம்**

இந்தியா இதை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. மறுக்கவும் இல்லை. அதுவே இந்த கதையின் மிக முக்கியமான பகுதி. உலக அரங்கில் ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதை இந்தியா நேரடியாகச் சொல்லவில்லை. அதே நேரத்தில் அந்தச் செய்தியை உலக நம்பிக்கை பெற்ற ஒரு நிறுவனம் வெளியிடுகிறது. இது பாகிஸ்தானுக்கான செய்தி அல்ல ஏனெனில் இந்தியாவின் திறனை அவர்கள் ஏற்கனவே அனுபவித்துள்ளனர். அப்படியானால் இந்த செய்தி உண்மையில் வாஷிங்டனுக்கும், பெய்ஜிங்கிற்கும் ஆனது என்று ராணுவ ஆய்வாளர்கள் கருதிகின்றனர். இந்தியா என்ன வெளிப்படுத்தியது என்பதை விட இந்தியா என்ன வெளிப்படுத்தாமல் வைத்திருக்கிறது என்பதுதான் முக்கியமாகப் பார்க்கப்படுகிறது. ஒரு நாட்டின் வலிமை அதன் ஆயுதங்களில் மட்டும் இல்லை. அதன் எதிரிகளுக்கு தெரியாத திறன்களிலும் உள்ளது.

பல தசாப்தங்களாக பொறுமையை கடைப்பிடித்த இந்தியா, தனது பாதுகாப்பு மற்றும் தேசிய நலன்களில் எந்த சமரசமும் செய்யாது என்பதையே இந்த மௌனம் உலகிற்கு உணர்த்துகிறது.

**அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களில் WARHEAD?**

தன் மீது நடத்தப்படும் சாத்தியமான அணு ஆயுதத் தாக்குதல்களை சமாளிக்க இந்தியா மூன்று முறைகளைப் பயன்படுத்த முடியும். வான்வழி (Air

Delivery), நிலம் சார்ந்து (Land Based) மற்றும் மூன்றாவது நீர்மூழ்கிக் கப்பல் சார்ந்து (Submarine Based). இந்த மூன்றாவது முறை மிகவும் பாதுகாப்பானது ஆனால் இருப்பதிலேயே இதுதான் கடுமையான அணு ஆயுத தடுப்பு ஆகும், ஏனெனில் கடலில் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிவது மிகவும் கடினம். "அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற பெரிய அணுசக்தி நாடுகளும் இதேபோல் நீர்மூழ்கிக் கப்பல்களில் தங்கள் வார்ஹெட்களை நிலைநிறுத்தி ரோந்து பணியில் ஈடுபடுகின்றன. இதே முறையைத்தான் இப்போது இந்தியாவும் பின்பற்றியுள்ளது. இது ஒரு பெரிய மாற்றம். இந்தியாவும் அவர்களைப் போலவே இந்த ரோந்து முறையை ஏற்றுக்கொள்வது போல் தெரிகிறது. எனவே இந்தியா நிலைநிறுத்தியுள்ள 12 வார்ஹெட்களும் முழுமையாக இந்த நீர்மூழ்கிக் கப்பல்களில் நிரப்பப்பட்டிருக்கும்." என்று ராணுவ வல்லுநர்கள் கருதுவதாக SIPRI அறிக்கை குறித்த BBC செய்திக்குறிப்பு கூறுகிறது.

**அணுஆயுத ஏவுகணைகள் மற்றும் ஏவூர்திகளின் விவரங்கள் (SIPRI அறிக்கைப்படி)**

இந்தியா தனது அணு ஆயுதங்களை நிலம், நீர், ஆகாயம் ஆகிய மூன்று வழிகளிலும் செலுத்தும் வல்லமையை (Nuclear Triad) பெற்றுள்ளது. அதன் முழு விவரங்கள்:

**1. வான்வழித் தாக்குதல் (Aircraft Launchers)**

ஜாகுவார் IS (Jaguar IS): 16 ஏவூர்திகள் (16 அணு ஆயுதங்களுடன்)

மிராஜ் 2000ஏ (Mirage 2000ஏண்): 32 ஏவூர்திகள் (32 அணு ஆயுதங்களுடன்)

**2. நிலவழித் தாக்குதல் (Land-based Missiles)**

பிருத்வி II (Prithvi II): 24 ஏவுகணைகள் (24 அணு ஆயுதங்களுடன்)

அக்னி-I (Agni-I): 16 ஏவுகணைகள் (16 அணு ஆயுதங்களுடன்)

அக்னி-II (Agni-II): 16 ஏவுகணைகள் (16 அணு ஆயுதங்களுடன்)

அக்னி-III (Agni-III): 16 ஏவுகணைகள் (16 அணு ஆயுதங்களுடன்)

அக்னி-IV (Agni-IV): 8 ஏவுகணைகள் (8 அணு ஆயுதங்களுடன்)

அக்னி-V (Agni-V): 8 ஏவுகணைகள் மட்டுமே. ஆனால், இவை MIRV (ஒரே ஏவுகணையில் பல குண்டுகளைப் பொருத்தி வெவ்வேறு இலக்குகளைத் தாக்கும்) தொழில்நுட்பம் கொண்டவை என்பதால், இவற்றில் 24 அணு ஆயுதங்கள் பொருத்தப்படலாம்.

**3. கடல்வழித் தாக்குதல் (Submarine Launchers)**

கடலுக்கடியில் இருந்து தாக்கும் நீர்மூழ்கிக் கப்பல்களில் 16 ஏவூர்திகள் உள்ளன. இவை பெரும்பாலும் ஒ-15 (ஆ-05) ஏவுகணைகள் மூலம் 12 அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்டவை. தற்போதைய 12 அணு ஆயுதங்களின் தயார்நிலை நிலைநிறுத்தம் இத்தகைய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் (SSBN) செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

**4. உருவாக்கத்தில் உள்ள புதிய ஏவுகணைகள்**

இந்தியா தற்போது மேலும் இரண்டு அதிநவீன நிலவழி ஏவுகணைகளை உருவாக்கி வருகிறது:

அக்னி-பி (Agni-P): நடுத்தர தூர பாலிஸ்டிக் ஏவுகணை (Medium-range ballistic missile)

அக்னி-VI (Agni-VI): கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை (Intercontinental ballistic missile)

**அமைதிக்காலத்தில் அதிரடி நடவடிக்கை**

அமைதிக்காலத்தில் இந்தியா இந்த நிலைநிறுத்தலைச் செய்துள்ளது அதிரடி நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது. 'ஆபரேஷன் சிந்தூர்' தொடர்கிறது என்று இந்திய அரசு தொடர்ந்து கூறி வருகிறது, சிப்ரியின் அறிக்கையின்படி, இந்தியா தனது அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை ஒரே ஆண்டில் வேகமாக அதிகரித்துள்ளது என்பது கவனம் பெறுகிறது. மேலும், இந்தியா தனது அணு ஆயுதங்களுக்கான எரிபொருளை (Fissile Material) வேகமாக தயாரித்து வருகிறது. இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இதனைத் தயாரிப்பதற்கு இந்தியா, யுரேனியம் செறிவூட்டலுக்குப் பதிலாக புளூட்டோனியத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறது. புளூட்டோனியத்தில் இருந்து அணு ஆயுதங்களுக்கான எரிபொருளைத் தயாரிப்பது உலகில் யாரும் செய்யாத நடைமுறையாகும் . இந்தியாவிடம் யுரேனியம் செறிவூட்டல் மற்றும் புளூட்டோனியம் ஆகிய இரண்டிலிருந்தும் எரிபொருள் தயாரிக்கும் திறன் உள்ளது.

**'ஆபரேஷன் சிந்தூர்' க்குப் பின்**

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்குப் பிறகு இந்தியாவின் கொள்கையில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. கேனிஸ்டரைஸ்டு (Canisterised) ஏவுகணைகள் எனப்படும் உடனடி நடவடிக்கை. ஏவுகணைகள் கொள்கலன்களில் (canisters) அடைக்கப்பட்டு, போர்முனையுடன் இணைக்கப்பட்டுத் தயார் நிலையில் வைக்கப்படுகின்றன. அதாவது, உத்தரவு கிடைத்த சில நொடிகளிலேயே அவற்றை ஏவ முடியும். எதிரிக்குச் சிந்திக்கக்கூட இனி நேரம் இருக்கக் கூடாது என்ற கொள்கையின் முடிவாக இது பார்க்கப்படுகிறது.

**கொள்கை மாறுமா?**

"அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்த மாட்டோம்" ஆனால்...

நமது கொள்கை 'முதலில் பயன்படுத்தாமை' (No First Use) என்பதுதான்." பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் சொன்னதில் உள்ள ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த சொல்லாகிறது.

**செய்தி:**

**மேய்ப்பனின் சத்தம் இளைஞர்கள் கூடுகை எனும் கிறிஸ்தவ விழாவில் சபாநாயகர் பங்கேற்பா?**

**சிந்தனை**

மதமாற்றத்தை ஊக்குவிக்கும் அரசு. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் போக்கு அதிகரிக்கும். மதமாற்ற சக்திகளை ஊக்குவிக்கும். சட்டசபையை சுவிஷேச சபையாக்கியவரின் பணி சட்டசபைக்கு வெளியிலும் தொடர்கிறது.

**செய்தி:**

**ஈரோடு தவிட்டுப்பாளையத்தில் கோயில் நிலத்தை ஆக்கிரமித்து வீடு கட்டிய கிறிஸ்தவர்; நீதிமன்ற உத்தரவுடன் இடித்து, கோயில் நிலம் மீட்பு**

**சிந்தனை**

ஹிந்து கோவில் நிலத்தை ஆக்ரமிக்கும் போக்கு அதிகரித்து வருவதுடன் பிற வழிபாட்டுத் தலங்களும் திட்டமிட்டே கட்டப்பட்டு வருகின்றன. இது அறநிலையத்துறையின் கையாலாகத்தனத்தைக் காட்டுகிறது. கோவில் நிலத்தை அந்நியருக்கு தாரைவார்க்கும் ஏஜெண்டாக அறநிலையத்துறை இருக்கிறது. போராடிய ஹிந்துக்களுக்கு வாழ்த்துகள்

**செய்தி:**

**இந்து மதத்திலிருந்து முஸ்லிமாக மதம் மாறியவருக்கு சாதிச் சான்றிதழ் வழங்க முடியாது - நீதிபதி GR சுவாமிநாதன் அதிரடி தீர்ப்பு**

**சிந்தனை**

மதம் மாறியவரை எந்த ஜாதியில் சேர்ப்பார்கள் என்ற கேள்வி நியாயமானது? பல நீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டி வழங்கப்பட்ட இந்த தீர்ப்பிற்கு எதிராக குரல் கொடுப்பது மதவாத அரசியலின் உச்சம். ஜாதி இல்லை என்று சொல்லும் முஸ்லீம்கள் இட ஒதுக்கீட்டை கோருவது அயோக்கியத்தனம்.

# செய்... சிந்த...

**செய்தி:**

**காட்பாடி அருகே, ராமர் வெங்...**
**கோவிலை கட்ட விடாமல் தடுக்...**
**பட்டியல் பைரா சமூக மக்கள்...**

**சிந்தனை**

சட்டவிரோதமாக ஹிந்துக்கள் ப...
ஹிந்துக்கள் பகுதியில் கோ...
வெறுப்பின் உச்சம். அரசும்,...
களும் கிறிஸ்தவர்களுக்கு சாத...
வழிபாட்டு உரிமையை இழந்து...

**செய்தி:**

**விஜய் பிறந்த நாளுக்...**
**புத்தகத்தை நினைவுட்...**
**அறநிலையத்துறை அ...**
**சர்ச்சை**

**சிந்தனை**

ஜோசப் விஜய்...
கொள்கையை ஏற்று...
விஜய் ஏற்காத ஈவே...
சிலையையும் இ...
பிராமண அமைச்...
ஹிந்துக்களுக்கு நி...
எல்லாம் நாடகமே...

# ...திகள்
# ...னைகள்

**செய்தி:**

**பைபிளின் பழைய அத்தியாயத்தில் இருக்கும் ஜோசப் போல இப்போது நமக்கு புதிய ஜோசப் கிடைத்துள்ளார் - அமைச்சர் மரிய வில்சன்**

**சிந்தனை**

உபமானங்களும் தமிழகத்தில் கிறிஸ்தவமாகி விட்டது. தமிழ் பாரம்பரியம் அழிக்கப்படுகிறது. சட்டசபையும் செய்தியாளர் சந்திப்பும் அரசு நிகழ்ச்சி களும் சர்ச் நிகழ்ச்சிகளாகி விட்டன. போகிற போக்கில் தமிழ்நாடு இலச்சினையை சிலுவையாக மாற்றினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை

**...கடேச பெருமாள், மாரியம்மன் ...க்கும் கிறிஸ்துவர்கள்; ஹிந்து ... புகார்**

...பகுதியில் சர்ச் கட்டும் கிறிஸ்தவர்கள். ...ாவில் கட்டத் தடுப்பது ஹிந்து ... காவல்துறையும், அரசியல் கட்சி ...கமாக செயல்படுவதால் ஹிந்துக்கள் ...து வருகிறார்கள்.

**செய்தி:**

**செல்ஃபோனால் இரு நாடுகள் மட்டுமல்ல, ஒரு மாநிலமும் போய்விட்டது - நீதிபதி GR சுவாமிநாதன்**

**சிந்தனை**

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி எந்த நாட்டையும் உருக்குலைக்க முடியும் என்ற ஆபத்தான நிலையை நினைவுபடுத்துகிறது இந்த கருத்து, நீதிபதி அவர்களின் இந்த பேச்சு நாம் எப்படி எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும் என்று நம்மை எண்ணத் தூண்டுகிறது. இதில் அரசியலும் அடங்கியுள்ளது என்பது மறுப்பதற்கில்லை. இந்தப் போக்கு ஜனநாயகத்திற்கு ஆபத்தானது என்பது இதன் அடிநாதம்

**...கு மாதா சிலை, ஈவேரா ... பரிசாக வழங்கிய ...அமைச்சர் ரமேஷ் செயலால்**

... ஈவேராவின் கடவுள் மறுப்பு ...துக்கொள்ள மாட்டேன் என்கிறார். ...வேரா புத்தகத்தையும், கிறிஸ்தவ ...இந்து அறநிலையத்துறையின் ...சர் வழங்குகிறார். இவர் எப்படி ...நியாயமாக நடந்து கொள்வார். ...

**செய்தி:**

**இந்தியாவில் ஹிந்துக்கள் மைனாரிட்டிக்கள் - மௌலானா கலீல் -உர்-ரஹ்மான் சஜ்ஜத் நோமானி பேச்சால் சர்ச்சை**

**சிந்தனை**

ஹிந்துக்களை ஜாதிரீதியாக பிளவுபடுத்தி ஹிந்துக்களை ஹிந்துக்கள் இல்லை என்று அடையாளப்படுத்தும் அயோக்கியத்தனம். இதே கருத்தைத் தான் ஈவேரா முன்வைத்து ஹிந்து மதத்தை அழிப்போம் என்றார். இந்த மாறாத மனநிலை இன்றும் தொடர்கிறது. இதை முறியடிக்க ஹிந்துக்கள் ஒற்றுமையுடன் எதிர்வினையாற்ற வேண்டும்

# படம் சொல்லும் பாடம்

- சி.பாண்டிக்குமார்






# கோயில் கருவறையில் முதலமைச்சர் ஜோசப் விஜய் படம்

இராமனுஜம்



தவெக கட்சியின் சார்பில் கொண்டாடப்பட்ட பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில், பல கோயில்களின் கருவறைக்குள் ஜோசப் விஜய் படத்தை வைத்து வழிபட்டுள்ளனர். இது அங்கு வருகை தந்த பக்தர்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

குறிப்பாக பழனி தண்டாயுதபாணி கோயிலில் தவெக கட்சியின் மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா தலைமையில் நடைபெற்ற தங்கத்தேர் நிகழ்வில் தங்கத்தேரில் விஜய் படத்தை வைத்துள்ளனர். இதற்கு முருக பக்தர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து இருக்கின்றனர்.

அதேபோல் நாமக்கல் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பலபட்டரை மாரியம்மன் கோயிலில் நடைபெற்ற முதல்வரின் பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில், அந்தக் கோயிலில் பூஜை செய்கின்ற பூசாரியை மிரட்டி அம்மன் கருவறைக்குள் அம்மனுக்கு இணையாக விஜய் படத்தை வைத்து வழிபட்டு இருக்கின்றனர். இது அங்கு வழிபட வருகை தந்த பக்தர்களுக்கும் அதை சமூக வலைதளங்கள் மூலமாக கண்டவர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியும் முகம் சுளிக்கும் வகையில் இருந்திருக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தவெக மாவட்ட செயலாளர் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற பிறந்தநாள் கொண்டாட்டத்தில் விநாயகர் கோயிலிலும், அம்மன் கோயிலிலும் கருவறையில் ஜோசப் விஜய் அவர்கள் படத்தை வைத்து வழிபட்டது, மேலும் மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

தமிழகத்தில் இந்து சமுதாய மக்கள் வழிபடுகின்ற தெய்வத்திற்கு இணையாக தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் படத்தை வைத்து வழிபட்ட தமிழக வெற்றி கழகம் கட்சியினரின் செயல் தமிழக பக்தர்களிடையே அதிர்ச்சியும் மிகுந்த மன வருத்தத்தையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அவர்கள் உடனடியாக தங்களது கட்சியினருக்கு தமிழகத்தில் பெரும்பான்மை இந்து சமுதாய மக்கள் வழிபடுகின்ற தெய்வத்திற்கு இணை கற்பித்து கருவறைக்குள் படத்தை வைத்து பூஜை செய்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்த வேண்டும் என இந்து முன்னணியின் மாநிலத் தலைவர் திரு. காடேஸ்வரா சுப்ரமணியம் அவர்கள் தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது ஒருபுறம் இருக்க, தமிழக நிதியமைச்சர் மரியவில்சன் மீது சர்ச் ஆஃப் சவுத் இந்தியா (CSI) திருச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது. விவிலியத்தில் (பைபிளில்) வரும் யோசேப்பு (Joseph) கதாபாத்திரத்துடன், தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களை ஒப்பிட்டுப் பேசியதற்காக இந்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் சாயர்புரம் ஆயர் மன்றத்தின் சி.எஸ்.ஐ டயோசிசன் கவுன்சில் உறுப்பினர், நிதியமைச்சரின் இந்த பேச்சைக் கண்டித்து தூத்துக்குடி நகரம் முழுவதும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை, மேரியைப் போல் வடிவமைத்து அ.தி.மு.கவினர் பேனர் மற்றும் போஸ்டர்கள் ஒட்டிய போதும் கிறிஸ்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். முகமது நபியின் உருவத்தை வரைந்தாலே ஏற்க முடியாது என்று பல கலவரங்கள் உலகம் முழுவதும் நடந்தது. பலர் கொல்லப்பட்டனர். ஆனால் ஹிந்துக் கோயில் கருவறையில், விஜய் படத்தை வைக்க வற்புறுத்த முடிகிறதென்றால், ஹிந்து ஆலயங்கள் அரசின் பிடியிலல்லவா இருக்கிறது! ஆட்சி மாற்றத்திற்கேற்ப, ஹிந்துக்கள் கடவுளையும் மாற்றும் அவலத்தை ஹிந்து அறநிலயத்துறை ஏற்படுத்தியுள்ளது. ஹிந்துக்கள் வழிபாட்டு உரிமையை மட்டுமல்ல, கடவுளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் இழந்துள்ளனர் என்பதே பரிதாபமான உண்மை.

# சுந்தர் பிச்சைக்கு எதிராகப் போராட்டம் ஏன்? - பின்னணி என்ன?

தமிழ்நேசன்

அமெரிக்காவில் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் ஜூன் 2026 கல்வியாண்டுத் தொடக்க விழாவில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் என்ற முறையில் கூகிள் நிறுவனத்தலைவர் சுந்தர் பிச்சையை அழைத்து மாணவர்கள் மத்தியில் உரையாற்றச் சொன்னது பல்கலைக்கழக நிர்வாகம். ஏறத்தாழ 200 மாணவர்கள் சுந்தர் பிச்சையை எதிர்த்துக் கிளர்ந்து எழுந்து கூச்சலிட்டதுடன் வெளிநடப்பும் செய்துவிட்டனர். ஏன்? கூகிளின் Project Nimbusஐ எதிர்த்து இந்தப் போராட்டம் என்கின்றனர் மாணவர்கள். என்ன காரணத்துக்காக எதிர்ப்பு? இந்த Project Nimbus 1.2பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் அமேசானுடன் இணைந்து செயற்கை நுண்ணறிவு மற்றும் cloud computing சேவையை இஸ்ரேலிய அரசுக்கு வழங்குகிறது. அதை எதிர்த்து பாலஸ்தீனத்துக்கு நீதி வேண்டும் மாணவர்கள் என்ற அமைப்பின் சார்பில் பாலஸ்தீன விடுதலை என்று கோஷமிட்டு இந்த மாணவர்கள் சுந்தர் பிச்சையின் உரையைப் புறக்கணித்தனர். இவர்கள் கூச்சலிட்ட போதும் சுந்தர் பிச்சை தன் உரையைப் பேசி முடித்தார்.

இந்த வெளிநடப்பும் போராட்டமும் கூகிளுக்கு எதிரான பெருமளவிலான போராட்டத்தின் பகுதி என்றும் கூகிள் தலைமை Project Nimbusஐக் கைவிடவேண்டும் என்ற கோரிக்கைக்கான அலை அலையான போராட்டங்களின் ஒரு அலை இது என்றும் தெரிவிக்கின்றனர் போராளிகள். ஏற்கனவே கூகிள் அலுவலகத்தில் Project Nimbusஐ எதிர்த்து 28 பணியாளர்கள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தி வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இந்த Project Nimbus மூலம் இஸ்ரேல் ராணுவத்துக்கு AI சார்ந்த கணிப்புகள், கணக்கீடுகள் கிடைக்கப் பெற்று அதன் மூலம் காசாவில் இஸ்ரேல் மேலும் தாக்குதலைத் தீவிரப்படுத்தும் என்று போராளிகள் கூறினர். ஆனால் கூகிள் நிறுவனம் அரசு அங்கீகரித்த cloud computing சேவைகள் மட்டுமே இஸ்ரேலுக்கு வழங்கப்படுவதாகக் கூறுகிறது.

இது தவிர ICE spies with Google AI என்றும் எழுதிவைத்துக் கொண்டு கோஷமிடுகின்றனர். அமெரிக்க அரசு கள்ளக்குடியேறிகளை வெளியேற்ற ICE என்ற அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பின் அதிகாரிகள் கள்ளக்குடியேறிகளைக் கண்டுபிடித்துக் கைதுசெய்து வெளியேற்றுகின்றனர். இந்தக் கண்டுபிடிப்புகளை Google AI உதவியோடு ICE அதிகாரிகள் செய்கின்றனர் என்று இந்தப் போராளிகள் கூகிளை எதிர்க்கின்றனர்.

இது தவிர பல மாணவர்கள் AI வரவை எதிர்த்து நிறுவனங்கள் AI வளர்ச்சியில் முதலீடு செய்வதை எதிர்த்தும் போராடுகின்றனர். முன்னாள் கூகிள் நிறுவனத் தலைவர் எரிக் ஸ்மித் இதற்கு முன் அரிசோனா பல்கலைக்கழகத்தில் எதிர்காலத்தில் AI என்பது 40 ஆண்டுகளுக்கு முன் கணினி வந்தது போன்ற நிலை என்று சொன்னதை எதிர்த்துக் கூச்சலிட்டனர். ஆனால் AI ஒரு கருவி. அதனைக் கையாளக் கற்றுக்கொள்வதே அவசியம் என்று பேசி விட்டுப் போனார் ஸ்மித்.

இது AIக்கு எதிராக என்று பொதுமைப்படுத்தும் வேலையில் பலர் ஈடுபட்டாலும் அப்படிப்பட்ட தொழில்நுட்பத்துக்கு எதிரான போராட்டத்தில் பாலஸ்தீன விடுதலைக் கோஷம் எதற்கு வருகிறதாம்? கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவர் பாலஸ்தீனக் கொடியோடு பட்டமளிப்புக்கு வந்ததால் பட்டம் மறுக்கப்பட்ட நிகழ்வும் கடந்த மே மாதம் நடந்தது. இது போன்ற தீவிர இடதுசாரி சிந்தனை மற்றும் பயங்கரவாத ஆதரவு அரசியல் மாணவர்கள் மத்தியில் வளர்வது ஆபத்தானது. இந்த மாணவர்கள் அக்டோபர் 7ஆம் தேதி இஸ்ரேலில் பாலஸ்தீனர்கள் நடத்திய கொடூரத் தாக்குதலைக் கண்டிக்காமல் பதிலடியை மட்டும் விமர்சிப்பது மிகச்சரியான இடதுசாரி அரசியல் நிலைப்பாடு.

தொழில்நுட்பத்தை எதிர்த்தால் அது முட்டாள்தனம். அப்படி ஒரு எதிர்ப்பை முன்னிறுத்தி பாலஸ்தீன ஆதரவு பேசுவது கயமை. நம்மூரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரும் இப்படித்தான் செய்கிறார்கள். நீட்டுக்கு எதிரான போராட்டம் என்று தொடங்கி பாஜக 240 சீட் ஜெயித்து ஆட்சிக்கு வந்துவிட்டதே ஐயகோ என்று போராட்ட மேடையில் ஒப்பாரி பாடுகின்றனர். இவர்கள் அனைவரும் ஒரு ஒற்றைத் தலைமையின் உத்தரவின் பேரில் இயக்கப்படுவது புரிகிறது. ஆனால் இந்தப் போராட்ட வகை பிசுபிசுத்துவிட்டது. புதிதாக யோசியுங்கள் கரப்பான்களே!


# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

வர்த்தக அளவு (வால்யூம்) அதிகரிக்கும் போது ஹேண்டிலின் ரெசிஸ்டென்ஸ் உடைக்கப்படும். இந்த கப் என்பது கிண்ணம் வடிவில் உருவாகி இருக்கும். ஹேண்டில் என்பது சிறிது இறங்கி பிறகு வர்த்தக அதிகரிப்பால் பிரேக் அவுட் ஆகிறது.

கப் உருவாகும் போது கீழ் நிலையில் பங்கை குறைந்த விலையில் வாங்கலாம். அதே நேரத்தில், மெழுகுவர்த்தி அமைப்பு உருவாகும் நேரத்தில் முதலீட்டாளர்கள், அவர்களால் எவ்வளவு இடர்பாட்டை (ரிஸ்க்) தாங்கிக் கொள்ள முடியும் என்பதை அறிந்து அதற்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

மிகவும் குறைந்தபட்ச விலைக்கு வரும் என்பதை உறுதியாக கணிக்க முடியாது. மேலும், இந்த அமைப்பு உருவாகாமல் போகவும் வாய்ப்பு இருக்கிறது.





சார்ட்டில் மெழுகுவர்த்தி உருவம் உருவாகி பங்கின் விலை மேலேறத் தொடங்கும் போது வாங்குவதுதான் சிறந்த முறையாக இருக்கும். இதை முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தங்களின் அனுபவத்தின் அடிப்படையில் அறிந்துக் கொள்ள முடியும்.

கப் வித் கேண்டில் அமைப்பை பயன்படுத்தி ஒரு பங்கை மிகக் குறைந்த விலையில் வாங்க முடியும். இந்த மெழுகுவர்த்தி அமைப்பு ஆரம்பத்தில் சாய்வாக உருவாகி இருக்கும். அப்போது கப் அமைப்பின் இடது பக்க விலை அளவை மெழுகுவர்த்தி அமைப்பு தாண்டி அதிகமாக செல்கிறதா என்பதை கவனித்து முடிவு எடுக்கவும். பல நேரங்களில் கோப்பை அமைப்பின் போது பங்கின் விலை 10 விழுக்காடு முதல் 15 விழுக்காடு அதிகரித்துவிட்டு, குறைந்து விடும். இது போன்ற நேரங்களில் இழப்பைத் தடுக்க ஸ்டாப் லாஸ் ஆர்டர் அவசியம் போட்டுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் குறைவான நட்டம், அதிக லாபத்தை அடைய முடியும்.

**டபுள் டாப் அமைப்பு**

இந்த அமைப்பில் ஒரு பங்கின் விலை அல்லது சந்தையின் புள்ளிகள், அதன் தற்போதைய நிலைக்கு எதிராக செயல்படத் தொடங்குவதைக் குறிக்கும். அதாவது புள்ளிகள் ஏறுமுகத்தில் இருந்தால் இறங்குமுகமாவும், இறங்குமுகத்தில் இருந்தால் ஏறுமுகமாகவும் செல்லப் போவதை குறிக்கும். இதை ஆங்கிலத்தில் 'ரிவர்ஸல் சார்ட்' (Reversal Chart) என்பார்கள்.

டபுள் டாப் பேட்டர்ன் என்பது ஒரு சார்ட்




பேட்டர்ன். இது உருவாக, பங்கின் இரு உயர்ந்த விலை கிட்டத்தட்ட சமமாக இருக்க வேண்டும். இந்த பேட்டர்னை அனைத்து கால வரம்பிலும் காணலாம்.

ஒரு சார்ட், டபுள் டாப் பேட்டர்ன் தானா? என்பதை வகைப்படுத்த மற்றும் உறுதிப்படுத்த சில தேவைகள் இருக்கின்றன.

**அவற்றில் முக்கியமானவை மூன்று.**


1. பங்கின் இரு உயர்ந்த விலைகள் சமமாக இருக்க வேண்டும்.

2. இந்த இரு உயர்ந்த விலைகள் உருவாவதற்காக காலமும் கிட்டத்தட்ட சமமாக இருக்க வேண்டும்.

3. இரண்டாவது உயர்ந்த நிலையில் வர்த்தகமாகும் போது வர்த்தக அளவு (வால்யூம்) குறைந்திருக்க வேண்டும்.

**கீழே உள்ள படத்தை பார்த்தால் எளிதில் விளங்கும்.**

டபுள் டாப் அமைப்பில் பல மாதங்களாக பங்கின் விலை மேலேறிய நிலையில் காணப்படும். முதல் உயர் விலையை, தற்போதைய டிரெண்டின் உயர்ந்தபட்ச புள்ளியாக குறித்துக் கொள்ள வேண்டும். முதல் உயர் விலையை அடைந்த பிறகு, ஒரு சிறிய சரிவு ஏற்படும். இது 10 முதல் 20 விழுக்காடு அளவுக்கு இருக்கும். இரண்டாவது உயர்ந்த நிலை உருவாகும் போது வர்த்தக அளவு குறைந்திருக்கும். இந்த நிலையில் முந்தைய அதிகபட்ச விலை, உயர்தடுப்பு (ரெசிஸ்டென்ஸ்) நிலையை சந்தித்து கீழ் இறங்கி இருக்கும். பல வாரங்கள் போராடியப் பிறகு அந்தப் பங்கு ஆதரவு (சப்போர்ட்) நிலைக்கும் கீழ் இறங்கி




இருக்கும். அதன் பிறகு ஆதரவு நிலையை உடைத்துக் கொண்டு மேலேறி டபுள் டாப் அமைப்பை நிறைவு செய்யும்.

டபுள் டாப் பேட்டர்ன் என்பது பங்குகளை விற்பனை செய்வதற்கான அறிகுறி. இந்த பேட்டர்னில் உருவாகும் நெக் லைன், இடத்தில் பங்கை விற்க வேண்டும். அதாவது, இந்த இடத்தில் பங்கின் விலை இறங்கும் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. அப்போது விற்று லாபம் பார்த்து விட வேண்டும். நன்றாக இறங்கும்பட்சத்தில் வாங்கி சேர்க்க வேண்டும். மீண்டும் ஏறும் போக்கு வரும் போது விற்று லாபம் பார்க்க வேண்டும். இப்படி மாறி மாறி செய்யும்பட்சத்தில் பங்குச் சந்தையில் நட்டப்படாமல் கணிசமான லாபம் பார்க்க முடியும்.

**டபுள் பாட்டம் அமைப்பு**

ஒரு பங்கின் விலை அல்லது சந்தையின் புள்ளிகள், அதன் தற்போதைய நிலைக்கு எதிராக செயல்படத் தொடங்குவதை (ரிவர்ஸல்) இந்த அமைப்பு (பேட்டர்ன்) சுட்டிக் காட்டுகிறது.

டபுள் பாட்டம் பேட்டர்ன் என்பது ஒரு சார்ட் பேட்டர்ன். இதில், பங்கின் இரு தாழ்ந்த (Bottom) விலை மிகவும் நெருக்கமாக இருக்க வேண்டும். இந்த சார்ட் அமைப்பு அனைத்து கால வரம்புகளிலும் உருவாகும்.

ஒரு சார்ட், டபுள் பாட்டம் பேட்டர்ன் தானா? என்பதை வகைப்படுத்த சில விஷயங்கள் நடக்க வேண்டும்.

**அவற்றில் முக்கியமான மூன்று வருமாறு:**

1. பங்கின் இரு தாழ்ந்த விலைகள் கிட்டதட்ட சமமாக இருக்க வேண்டும்.

2. இந்த இரு தாழ்ந்த விலைகள் உருவாவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட கால அளவும் கிட்டத்தட்ட சமமாக இருக்க வேண்டும்.

3. இரண்டாவது தாழ்ந்த நிலையில் வர்த்தகமாகும் பங்குகளின் வர்த்தக அளவு (வால்யூம்) குறைந்திருக்க வேண்டும்.

டபுள் பாட்டம் அமைப்பில் பல மாதங்களாக பங்கின் விலை கீழ் இறங்கிய நிலையில் காணப்படும். முதல் தாழ்ந்த விலையை, தற்போதைய டிரெண்டின் குறைந்தபட்ச புள்ளியாக குறித்துக் கொள்ள வேண்டும். முதல் உயர் விலையை அடைந்த பிறகு, ஒரு உயர்வு ஏற்படும். இது 10 முதல் 20 விழுக்காடு அளவுக்கு இருக்கும். இரண்டாவது தாழ்ந்த நிலை உருவாகும் போது வர்த்தக அளவு குறைந்திருக்கும். இந்த நிலையில் முந்தைய குறைந்தபட்ச விலை, ஆதரவு (சப்போர்ட்) நிலையை சந்தித்து கீழ் இறங்கி இருக்கும். பல வாரங்கள் போராடியப் பிறகு அந்தப் பங்கு உயர்தடுப்பு (ரெசிஸ்டென்ஸ்) நிலைக்கும் மேலே ஏறி இருக்கும். அதன் பிறகு ரெசிஸ்டென்ஸ் நிலையை உடைத்துக் கொண்டு மேலேறி டபுள் பாட்டம் பேட்டர்னை நிறைவு செய்யும்.

அப்போது பங்குகளை விற்பனை செய்வதற்கான வேகம் மற்றும் அழுத்தம் (பிரஷர்) குறைந்திருக்கும். அந்நிலையில் பங்கின் போக்கு, தற்போதைய நிலைக்கு எதிராக (ரிவர்ஸல்) மாறும்.

**எப்படி வர்த்தகம் செய்ய வேண்டும்?**

இந்த பேட்டர்னில் உருவாகும் நெக் லைனுக்கு மேலே பங்கை வாங்குவதற்கான ஆர்டரை போட வேண்டும். அதாவது, இந்த இடத்தில் பங்கின் விலை ஏறத் தொடங்கும் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. பங்கின் விலை நெக் லைனை உடைத்துக் கொண்டு, மேலே செல்லும்.

டபுள் டாப் பேட்டர்ன் போலவே, டபுள் பாட்டம் பேட்டரினிலும் பங்கின் விலை போக்கு ரிவர்ஸலாகவே இருக்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வலிமையான டவுண் டிரெண்ட் உருவான பிறகு இதை கவனிக்கத் தொடங்க வேண்டும்.

# வெற்றியும் தோல்வியும்



**- வெங்கட் பிரசாத்,** D.
*அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்*

***ஆசிய கைப்பந்து சாம்பியன்ஷிப் :***

*அகமதாபாத் நகரத்தில் நடைபெற்று வரும் ஆண்களுக்கான ஆசிய (ஓசியானா கண்டமும் சேர்த்து) வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டிகளின் லீக் சுற்றி இந்தியா 5 போட்டிகளிலும் வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது. சைனீஸ் டைப்பிங் நியூசிலாந்து ஆஸ்திரேலியா கசகஸ்தான் பெஹெரின் ஆகிய அனைத்து அணிகளையும் தோற்கடித்து இந்தியா குரூப் ஏவில் முதலிடத்தில் உள்ளது. இதில் சென்ற ஆண்டுக்கான கோப்பையை வென்ற பெஹெரினையும் 3-0 என்று தோற்கடித்தது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. சைனீஸ் தாய் பெ ஒன்றினைத் தவிர மற்ற அனைத்து அணிகளையும் 3-0 என்று தோற்கடித்த இந்தியா, சைனீஸ் தாய்பெயை 3-1 என்று தோற்கடித்தது.*

*அரை இறுதிக்குள் நுழைந்தது. அரையிறுதியில் தாய்லாந்தை எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்லோவேனியாவைச் சேர்ந்த பயிற்சியாளர் டிராகன் மிகைலோவிச் கொடுக்கும் உற்சாகமும் வேகமும் எங்களின் திறனை வெளிக்கொணர்ந்துள்ளது என்று இந்திய அணித் தலைவர் ஜெரோம் வினித் கூறியுள்ளார். இந்த முறை கோப்பையை இந்தியா வெல்ல நேர்ந்தால் இந்த அநஇ போட்டியில் இந்தியாவின் முதல் கோப்பை ஆகும். இதே வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்தி கொரியாவை வீழ்த்த முடிந்தால் நாம் வெற்றி பெறுவது உறுதி என்பது நமது நம்பிக்கை.*

***தடகள போட்டிகள் :***

*கிரிக்கெட்டில் பெரும் ஆதிக்கம் செலுத்திவரும் இந்தியா இப்போது பிற போட்டிகளிலும் முக்கியமாக தடகளத்திலும் தன் திறனைக் காட்டி வருகிறது, இந்தியாவின் சமீபத்திய வெற்றிகள் பின் வருமாறு,*

*1. சைனாவில் நடைபெற்ற ஆசிய ரிலே சேம்பியன்ஷிப் போட்டியில், 4*100ட் ரிலேவில் நமது இந்திய பெண்கள் பலம் வாய்ந்த சைனா அணியை தோற்கடித்து, 43.85 வினாடிகளில் முடித்து தங்கப்பதக்கம் வென்றது.*

*2. இந்திய ஜிம்னாஸ்டிக் வீரர் ஹர்ஷித் தாமோதரன், சீனாவில் நடைபெற்ற ஜூனியர் ஆசிய கலைநய ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப்* (Junior Asian Artistic Gymnastics Championships) *போட்டியில் ஜூனியர் வால்ட்* (Junior Men's Vault) *பிரிவில் தங்கப் பதக்கம் வென்று வரலாறு படைத்துள்ளார்.*

*2. தோஹா டைமண்ட் லீக் 2026 ஈட்டி எறிதல் போட்டிகளில், 4வது இடத்தை பிடித்திருக்கும் நிகில் சோப்ரா மீண்டும் ஒரு முறை காமன்வெல்த் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளார். வருகிற ஜூலை 23ஆம் தேதி தொடங்கவிருக்கும் காமன்வெல்த் போட்டிகளில் இவர் இந்தியாவிற்கு மேலும் ஒரு மெடல் கொண்டு வருவார் என்பதை உறுதியாக நம்புகிறோம்.*

*4. யூஎஸ் ஓப்பன் 300, பேட்மிண்டன் போட்டிகளில், இந்திய வீரர் ரவுணக் சவுகான் உலக தர வரிசையில் ஆறாவது இடத்தில் இருக்கும் தாய்வானின் நட்சத்திர விளையாட்டு வீரர் சவுத் டீன் சென்-ஐ 21-17 , 26-24 என்ற போராட்டம் மிகுந்த நேர் செட் கணக்குகளில் தோற்கடித்து சாதனை படைத்தார்.*

***பெண்களுக்கான டி20 உலகக்கோப்பை 2026 :***

*காயம் காரணமாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஷ்ரேயாங்கா பாட்டில் தொடரை விட்டு வெளியேறிய போதிலும், ஸ்ரீ சரணி, தீப்தி சர்மா ஷேபாலி ஆகிய சூழல் பந்துவீச்சாளர்களின் திறனாலும், நம்பகமிக்க பேட்டிங் வரிசையாலும், பாகிஸ்தான் பங்களாதேஷ் நெதர்லேண்ட் அணிகளை பெரும் ரன் வித்தியாசத்தில் தோற்கடித்த போதும், ஃபீல்டிங், கேட்சுகளை பிடிக்கும் திறன் மிகவும் தோய்வுற்று இருப்பதால் தென்னாப்பிரிக்கா அணியை வீழ்த்தும் அற்புதமான வாய்ப்பினை இந்திய பெண்கள் அணி தவற விட்டனர். குரூப் ஏ வில் இருக்கும் ஆறு அணிகளில் இரண்டு அணிகள் மட்டுமே அரை இறுதிக்கு தகுதி பெறும் என்ற நிலை இருப்பதால், ஞாயிற்றுக்கிழமை, ஒதண 28 அன்று ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெறும் லீக் போட்டியில் வெற்றி பெற்றால் எந்தத் தோய்வும் இன்றி இந்திய பெண்கள் அணி அரையிறுதிக்கு நுழைய முடியும். மிக பலம் வாய்ந்த ஆஸ்திரேலிய அணியை வீழ்த்துவது என்பது கடினமே அன்றி நடக்காத ஒன்று அல்ல. நமது சுழற்பந்து வீச்சாளர்களுக்கு பக்கபலமாக பீல்டிங் உதவி செய்தாலே போதும் நாம் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைய முடியும், கோப்பை வெல்லவும் முயற்சிக்க முடியும் என்பதே நமது பார்வை.*

*என்ன முடிவு வருகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.*

# சங்கத் தமிழில் சனாதனம்



பத்மன்

## அத்தியாயம் 14: பதிற்றுப்பத்தில் பாரத நாடு

பண்பாட்டு ரீதியில் பாரதம் என்ற ஒற்றை தேசம் பற்றிய கருத்தாக்கத்தை புறநானூற்றைப் போலவே பதிற்றுப்பத்தும் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. அரசியல் ரீதியில் இந்தப் பரந்துபட்ட பாரத நாடு பல்வேறு ராஜ்ஜியங்களாக அதாவது நிலப்பகுதிகளாக இருந்துள்ளன. அதேநேரத்தில் அவற்றைத் தாண்டி, இமயம் முதல் குமரி வரையான ஒற்றை நாடு என்ற உணர்வோட்டம் பழங்காலந்தொட்டே நீடித்துவருவதற்கு பதிற்றுப்பத்துப் பாடல்கள் மிகச் சிறந்த சான்றாதாரங்கள்.

அவற்றில், வடக்கே படையெடுத்துச் சென்று, ஆரிய மன்னர்கள் எனப்படும் கனக விசயர்கள் உள்ளிட்டோரைப் போரில் வென்று, இமயமலையில் இருந்து பத்தினித் தெய்வம் கண்ணகிக்குத் திருச்சிலை வடிப்பதற்கான கல்லை வெட்டியெடுத்து, கங்கையாற்று நீரில் புனிதநீராட்டிக் கொணர்ந்த மாவீரன் சேரன் செங்குட்டுவனைப் புகழ்ந்து புலவர் பரணர் பாடியிருக்கும் ஐந்தாம் பத்தின் மூன்றாவது பாடலில், பாரத நாட்டு எல்லைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன:

**கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை**
**வடதிசை எல்லை இமயம் ஆக,**
**தென்அம் குமரியொடு ஆயிடை அரசர்**
**முரசுடைப் பெருஞ்சமம் ததைய, ஆர்ப்புஎழ,**
**சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த**
**போர்அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!**

*(பதி. 5.3. 6-11)*

"கடவுள் நிலைத்திருக்கும் சிகரத்தோடு ஓங்கி உயர்ந்து, நீண்ட நெடியதாக இருக்கும் இமயமலையை வடக்கு எல்லையாகவும், குமரியைத் தெற்கு எல்லையாகவும் கொண்ட நிலப்பரப்பில் உள்ள பகை அரசர்களின் முரசுகளோடு அவர்கள் மேற்கொண்ட போரையும் சிதைத்து, வெற்றி ஆரவாரம் எழ, அந்த அரசர்களின் புகழ்பெற்ற பல்வேறு நாடுகளின் பழைய புகழை அழித்தவனே! தொடர்ந்து பல்வேறு பெரிய போர்களைப் புரிவதையே தொழிலாகக் கொண்ட படையையும், அணிந்திருக்கும் அழகிய பொன்மாலையையும் கொண்ட குட்டுவனே!" என்பது இதன் பொருள்.

"சொல் பலநாடு" என்றால் புகழ்பெற்ற பல நாடுகள் என்று பொருள். இங்கே நாடு என்பது ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல ராஜ்ஜியங்கள் எனப்படும் ஆட்சிப் பகுதிகளைக் குறிக்கின்றன. தற்காலத்தில் தமிழ்நாடு என்ற சொல் தனிப்பட்ட தேசத்தை அதாவது இறையாண்மை கொண்ட ஒரு நாட்டைக் குறிக்காமல், அத்தகைய நாட்டுக்கு உட்பட்ட ஓர் ஆளுமைப் பகுதியான மாநிலத்தைக் குறிப்பதைப்போல் அக்காலத்தில் பல ராஜ்ஜியங்கள் இருந்தன. ஆயினும் இவற்றையெல்லாம் ஒன்றிணைக்கும் பாரத நாடு என்ற கருதுகோள் அப்போதே இருந்ததால்தான், "வடதிசை எல்லை இமயம் ஆக தென்அம் குமரியொடு ஆயிடை" அதாவது வடக்கே இமயமலையையும், தெற்கே குமரியையும் எல்லையாகக் கொண்டு இடைப்பட்ட நிலப்பகுதி என்ற சொல்லாடல் பரணரின் நாவில் பிறந்துள்ளது. இது பாரத நாடு என்ற ஒற்றை தேசச் சிந்தனையை உணர்த்துகிறது.

அத்துடன், பரணரின் சொல்வீச்சை மேலும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இந்த தேசத்தின் வடக்கு எல்லை வெறும் கல்லும் மண்ணும் நிரம்பிய மலை அல்ல. "கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை". இமயமலையின் ஒரு பகுதியான கயிலாய மலைதான் சிவபெருமானின் உறைவிடம். ஆகையால் அது கடவுள் நிலைத்திருக்கும் நெடுவரை. அதுமட்டுமல்ல, பல வானவர்கள் (தேவர்கள்) குடியிருக்கும் மலையாகவும் இமயத்தைக் கருதுவது நம் பண்பாடு. அதன் அடிப்படையிலும் அது கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை. மேலும் முனிவர்களையும் கடவுளுக்கு ஒப்பாகக் கருதுவது நம் பண்பாடு. அத்தகைய முனிவர்கள் உறைகின்ற கற்குகைகள், இமயம் நெடுக அமைந்துள்ளன. ஆகையாலும் இமயமலை, கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை என்று பரணரால் அழைக்கப்பட்டுள்ளது.

இதே பதிற்றுப்பத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் புகழ்ந்து பெண்பாற் புலவர் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் பாடிய ஆறாம் பத்தின் முதல் பாட்டிலும் பாரத நாட்டின் எல்லைகள் பகரப்பட்டுள்ளன.

**இயலினள் ஒல்கினள் ஆடும் மடமகள்**
**வெறிஉறு நுடக்கம் போலத் தோன்றி,**
**பெருமலை, வயின்வயின் விலங்கும் அருமணி**
**அர வழங்கும், பெருந் தெய்வத்து,**
**வளை ஞரலும் பனிப் பௌவத்து,**
**குணகுட கடலோடு ஆயிடை மணந்த**
**பந்தர் அந்தரம் வேய்ந்து,**

*(பதி. 6.1. 10-16)*

"நடந்தும் அசைந்தும் ஆடுகின்ற தெய்வ ஆவேசம் ஏறிய பெண்ணொருத்தி, வெறியாடல் செய்கின்ற களத்திலே வந்து, மருள் ஏறி உடலைச் சிலிர்த்து அசைந்தாடுவதைப் போல, அரிய நாகமணிகளை உடைய பாம்புகள் ஆங்காங்கே நெளிந்து செல்கின்ற இடங்களைக் கொண்டதும், பெரும் தெய்வம் என்று போற்றத்தக்கதுமான (வடக்கே உள்ள) பெரிய மலையையும், சங்கு முழங்கும் குளிர்ச்சியான (தெற்கே உள்ள) பெருங்கடலையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களையும் எல்லைகளாகக் கொண்ட நிலப்பரப்பிலே வாழுகின்ற அரசர்களும், சான்றோர்களும் கூடியுள்ள பந்தலிலே அலங்காரம் வேயப்பட்டுள்ளது'' என்பது இதன் பொருள்.

பாரதத்தின் வட எல்லையான இமயமலை தெய்வீகமானது என்பதை பரணரைப் போலவே நச்செள்ளையாரும் விவரித்துள்ளார். பெருந்தெய்வமாகிய சிவபெருமான் வீற்றிருப்பதால் பெருமலையான இமயமும் பெருந்தெய்வம் என்று கொண்டாடப்படும் தகுதியைப் பெற்றிருக்கிறது. "தேவர்கட்குத் தேவனாகிய கண்ணுதல் அண்ணல் வீற்றிருக்கும் பெருமையும் தெய்வத்தன்மையும் உடைமையால், (இமயமலையை) மலையாகிய பெருந்தெய்வம் என்பாராயினர்'' என்று ஔவை. துரைசாமிப் பிள்ளை அவர்கள், இந்தப் பாடலுக்கான தமது விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமானின் உடலிலே அசைந்து நெளியும் பாம்புகள் விளங்கும். அதற்கொப்ப, இமயமலையிலும் அசைந்து செல்லும் அரவங்கள் நிறைந்திருப்பதாக நச்செள்ளையார் விவரித்துள்ளார். அத்துடன் இமயமலையின் தெய்வாம்சத்தை மேலும் வலியுறுத்தும் வகையில், தெய்வ ஆவேசம் வந்து நடுங்குகின்ற பெண் அசைந்தாடுவதைப்போல அசைந்து நெளிந்து செல்லும் பாம்புகள் என்றும் அவர் குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

சிவபெருமான் உறைவதாக மதிக்கப்படுவதால் தெய்வத்தன்மை வாய்ந்த இமயமலையில் பல முனிவர்களும், அறவோர்களும் தவம் செய்கின்றனர். அவர்களும் தெய்வாம்சம் பொருந்தியவர்களாகவே கருதப்படுகின்றனர். அதனை உணர்த்தும் வகையில் புலவர் குமட்டூர்க் கண்ணனார் பாடிய பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தின் முதல் பாடலிலும் இமயத்தின் பெருமையோடு நாட்டின் எல்லை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சேரன் செங்குட்டுவனின் தந்தையான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் புகழ்ந்து பாடப்பட்டுள்ள இந்தப் பாடலில், நாட்டு எல்லை பற்றிக் கூறும் வரிகளைக் காண்போம்:

**கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி**
**பரந்திலங்கு அருவியொடு நரந்தம் கனவும்**
**ஆரியர் துவன்றிய, பேரஇசை இமயம்**
**தென்அம் குமரியொடு ஆயிடை**
**மன்மீக் கூறுநர் மறம்தபக் கடந்தே.**

**(பதி. 2.1. 21-25)**

"முருக்க மரங்கள் செறிந்த மலையிடத்தே இரவில் உறங்கும் கவரிமான்கள், பகல் பொழுதில் தாம் மேய்ந்த நரந்தம் புற்களையும், அவை வளர்ந்திருக்கும் பரந்து விளங்கும் அருவிகளையும் கனவில் கண்டு மகிழும். ஆரியர்கள் நிறைந்து வாழும் (அத்தகைய) பெரும் புகழ் வாய்ந்த இமயத்துக்கும், தெற்கிலே குமரிக்கும் இடைப்பட்ட நாட்டில் உள்ள மன்னர்களுள், செருக்குற்று தங்களைத் தாங்களே உயர்த்திக் கூறும் மன்னர்களின் மறம் கெட்டழியுமாறு அவர்களைப் போரிலே வென்றவனே!'' என்று இதற்குப் பொருள்.

இமயமலையிலே ஆரியர்கள் நிறைந்திருக்கிறார்கள்! யார் அவர்கள்? இங்கே ஆரியர் என்பது தவமுனிவர்களைக் குறிக்கிறது. இதற்குரிய விளக்கத்தையும் துரைசாமிப் பிள்ளைதருகிறார். "ஆண்டுறையும் (அங்கே இமயமலையில் வசிக்கும்) ஆரியர் ஆணையாலே முருக்கு என்னும் முள்ளுடை மரமும் "மயிர்நீப்பின் வாழா கவரிமா'' (குறள் 969) என்று சிறப்பிக்கப்பட்ட தன் மயிர்க்கும் வருத்தம் செய்யாமையால், அக்கவிர் ததைந்த சிலம்பின் கண்ணே (முருங்கை மரங்கள் நிறைந்த மலையின் மீது) கவரிமான்கள் இனிதாக உறங்கும். அருவியொடு நரந்தம் கனவும் என்றது, அவ்வாரியர் ஆணையாலே பிற விலங்குகளாலும், மக்களாலும் வருத்தமின்றிப் பகற்காலத்துத் தான் நுகர்ந்த அருவியையும் நரந்தத்தையுமே கனவிலும் காணும் என்பதாகும்'' என்கிறார். ஆரியர் என்பதற்கு முனிவர் என்ற பொருள் இருப்பதை அவர் நேரடியாகக் கூறாமல், மறைமுகமாகத் தெரிவித்துள்ளார்.

முள்ளுடைய முருங்க மரங்களை, முடி உதிர்ந்தால் உயிரை நீத்துவிடும் மென்மை மிகுந்த கவரிமான்களுக்கு துன்பம் ஏற்படுத்தாமல் இருக்கும்படியாக யாரால் ஆணையிட முடியும்? அதேபோல் கவரிமான்களைப் பிற விலங்குகளும் மனிதர்களும் வேட்டையாடிவிட முடியாத வகையிலும் யார் ஆணையிட முடியும்? அத்தகைய ஆற்றல் யாரிடம் உள்ளது? முனிவர்களுக்கும் தெய்வங்களுக்கும்தான் இவ்விதம் வரமோ, சாபமோ அளிக்கின்ற ஆற்றல் இருப்பதாகக் கருதுவது நமது பண்பாட்டின் அடிப்படையிலான நம்பிக்கை. ஆகையால் கவரிமானைக் காப்பாற்றுகின்ற வரத்தை அருளியுள்ள தெய்வாம்சம் நிரம்பிய ஆரியர்கள் என, முனிவர்களையே இந்த இடத்தில் உரையாசிரியர் ஔவை. துரைசாமிப் பிள்ளை குறிப்பிடுகிறார்.

இதே உரையாசிரியர், மேற்குறிப்பிட்ட ஐந்தாம்பத்தின் மூன்றாம் பாடலில் வந்துள்ள "கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை'' என்ற பதத்துக்கு, "கடவுள் நிலை, முனிவர்கள் இருந்து தவம் செய்யும் இடங்கள்'' என்று விளக்கம் அளித்திருப்பதையும் இங்கே ஒப்புநோக்க வேண்டும். ஆகையால் ஐந்தாம்பத்தில் பரணர், முனிவர்களைக் குறிக்கக் கடவுள் என்று கூறிய சொல்லின் பொருளில்தான், இரண்டாம்பத்தில் ஆரியர் என்ற சொல்லைக் குமட்டூர்க் கண்ணனார் பயன்படுத்தியுள்ளார் என்று தெளியலாம். ஆரிய என்ற சொல்லுக்கு உயர்ந்த, சிறந்த, மேலான ஆகிய பொருள்கள் உண்டு.


# நமக்கான USER MANUAL



இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

## பிராணவுடலின் இயக்கங்கள்

காற்று எவ்வாறு எல்லா திசைகளிலும் தங்குதடையின்றி வீசுமோ, அவ்வாறே பிராணனும் நமது உடலில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் தடையின்றி பரவி இயங்குகின்றது. உயிர்களாகிய நாம் உடலுக்குள் இருந்துகொண்டு வாழ்க்கையை வாழ இந்த பிராணசக்திதான் ஆதாரமாக இருக்கின்றது. நாம் இழுத்துவிடுகின்ற மூச்சுக்காற்றின் மூலமாக பிராணசக்தி நுரையீரலுக்குள் வந்து இரத்தத்திற்கு உயிர்சக்தியை பாய்ச்சி நம்மை வாழவைக்கிறது. மூச்சு நின்றுபோனால் பிராணசக்தி உடலுக்குள் வராது. உயிர் உடலை விட்டு பிரிந்துவிடும். நமது உடலில் மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்தில் நாம் காண்கின்ற உயிருள்ள, உயிரற்ற அனைத்து படைப்புகளுக்கு உள்ளேயும் இந்த பிராணசக்தி ஊடுருவி இயங்குகின்றது.



இந்த இடத்தில் நமது கற்பனையை சற்று விரித்து சுயமாக யோசித்து புரிந்துகொள்ளவேண்டும். இந்த சக்தியானது நம்மைச் சுற்றியுள்ள வெட்டவெளியிலும், பூமிக்குள்ளும், ஆகாயத்திலும், பூமியின் வளிமண்டலத்தைக் கடந்து பால்வெளியிலும் இருக்கின்றது. இடையிலுள்ள சந்திரன், சூரியன், கிரகங்கள், நக்ஷத்திரங்கள் என்று எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றது. நமது கற்பனைக்கு எட்டாத படைப்புகளான சுவர்க்கம், நரகம், இந்திரலோகம், யமலோகம், பாதாளம் போன்ற மற்றும் பல இயக்கங்களுக்குள்ளும் இருந்துகொண்டு இயங்குகின்றது. அதே நேரம் நமக்குள்ளும் வந்து நம் உயிருக்கு உயிர்கொடுத்து நம்மை வாழவைத்துக்கொண்டிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், நம்மைக் “கட”ந்தும் நமக்கு “உள்”ளும், “கட+உள்” - அதாவது,“கடவுள்” ஆக இயங்கி நம்மையும் நாம் வாழும் இந்த படைப்பையும் காத்துக்கொண்டிருக்கின்றது. நமது முன்னோர்கள் இந்த பிராணசக்தியை பிரபஞ்ச சக்தி, உயிர்சக்தி, பரம்பொருள், பராசக்தி, கடவுள் என்று இன்னும் பல பெயர்களால் போற்றியுள்ளார்கள். நமது கண்களிலும் அதேநேரம் நக்ஷத்திரங்களிலும் இருப்பதால்தான் நம்மால் பலகோடி ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கின்ற நக்ஷத்திரங்களை உடனே பார்க்கமுடிகிறது.

இவ்வாறு எல்லையற்று நிறைந்திருக்கின்ற சக்திதான் நம்மையும் இந்த படைப்பையும் இயக்குகிறது என்றால் அதற்கு சுயமாக ஒரு பேரறிவு இருக்கவேண்டும் அல்லவா? ஆம். இந்த பிராணசக்தியின் அறிவானது மனித அறிவுக்கெல்லாம் அப்பாற்பட்டது. இந்த சக்தியானது தனது எல்லையற்ற கருணையாலும் பேரறிவாலும் தன்னைத்தானே பலவிதமாக பகுத்துக்கொண்டு இயங்குகின்றது. நமது உடல்வாழ்க்கையை சீராக இயக்குவதற்காக, தலை, இதயம், நாபிக்கமலம் அல்லது தொப்புள், ஆசனவாய்க்கு அருகில், முதுகுத்தண்டு ஆகிய ஐந்து இடங்களில் ஐந்து விதமான வேறுவேறான சக்திகளாக தன்னைத்தானே பிரித்துக்கொண்டு இயங்குகிறது.

முதலாவதாக பிராணன் என்ற பெயரில், மூச்சுக்காற்றை சுவாசத்தின் மூலம் உள்ளே இழுப்பதற்காக உச்சந்தலையில் தன்னைத்தானே பொருத்திக்கொண்டு இயங்குகிறது. அங்கிருந்துகொண்டு நாசிகள் வழியாக நம்மை சுவாசிக்கச் செய்கிறது. அதாவது நமது தலைக்கு மேலிருந்து கீழாக உயிர்சக்தியை நமது உடலுக்குள்ளே இழுக்கும் வேலையை செய்கிறது. நாம் நினைத்து மூச்சு இழுப்பதில்லை, இந்தப் பிராணன்தான் தலையிலிருந்து கொண்டு நம்மை மூச்சை இழுத்து சுவாசிக்க வைக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அவ்வாறு இழுத்த உயிர்சக்தி ரத்தத்துடன் கலந்து உடல்முழுவதும் உயிரூட்டியபின் வெளியேற்றப்பட வேண்டிய நச்சுக்காற்றாக மாறுகிறது. அதற்கான வேலையை செய்வதற்காக இந்த பிராண சக்தியானது தன்னில் ஒரு பகுதியை பிரித்து அதை ஆசனவாய்க்கு அருகில் நிறுத்திக் கொள்கிறது. அதன் பெயர் அபானன். அபானனின் இயங்கங்களை அடுத்த தொடரில் பார்ப்போம்.

(தொடரும்)

# ஆகர்ஷண ஆளுமை

**வ ரங்கநாதன்,**
**ஆளுமைத் திறன் பயிற்றுநர்**




காந்தம் போல் பிறரை ஈர்க்கும் ஆளுமை வேண்டுமா? மிக எளிது. அன்றாடம் நீங்கள் செய்ய வேண்டிய சின்ன சின்ன விஷயங்களைக் கடைபிடித்தால் போதுமானது.

**1. மலர்ந்த முகமாக இருங்கள்** விடியா மூஞ்சியை யாருக்குதான் பிடிக்கும். கனிவு என்பது ஒரு புன்னகை போன்ற எளிமையான ஒன்றிலிருந்து தொடங்குகிறது. ஒருவரைப் பார்த்து புன்னகை செய்யும்போது அவர் பாதுகாப்பாகவும் மதிக்கப்பட்டதாகவும் உணர்கிறார் . புன்னகை செய்ய எந்த செலவும் இல்லை, அதே சமயம் அது அறையில் உள்ள சூழலை உடனடியாக மாற்றுகிறது. புது நபராக இருந்தாலும் சரி, சக ஊழியராக இருந்தாலும் சரி, அல்லது குடும்ப உறுப்பினராக இருந்தாலும் சரி, ஒரு அன்பான புன்னகை ஒருவரின் அன்றைய நாளை பிரகாசமாக்கும்.

**2. குறுக்கிடாமல் பேசுவதைக் கேளுங்கள்:** எவர் உங்களிடம் பேச வந்தாலும் குறுக்கிடாமல் கேட்பதே கனிவின் அடையாளம்.. பேசுபவர் மரியாதை செய்யப்பட்டதாக உணர்வார் உங்களை அவர் நம்பத் தொடங்குவார். உங்களை அவர் பெரிதும் மதிப்பார் ஆனால் பேச்சுவாக்கில் ஒருவர் பேசி முடிப்பதற்குள் மற்றவர் குறுக்கே வெட்டிப் பேசுவதும் அல்லது வேறு விஷயத்துக்கு தாவுவதும் நடக்கிறது.

**3. நேர்மையான பாராட்டுகளை மறக்காமல் தெரிவியுங்கள்:** எவரோடு பழகினாலும் அவரிடம் உள்ள நல்ல விஷயங்களை கவனிக்கத் தவறாதீர்கள். பாராட்டத் தவறாதீர்கள். அவரின் அன்றைய உடையாக இருக்கலாம், வார்த்தைகளாக இருக்கலாம், குணமாக இருக்கலாம், திறமையாக இருக்கலாம். தனித்தன்மை சிறப்பு இல்லாத மனிதர்களே இல்லை. எனவே வஞ்சகம் இல்லாமல் நேர்மையான பாராட்டுதலை தெரிவியுங்கள்

**4. நன்றி சொல்லும் பழக்கத்தைக் கூட்டுங்கள்:** ஏதேனும் ஒரு வகையில் தினம் தினம் நாம் பிறரின் சேவைகளைப் பெறுகிறோம். பிறரின் தேவையை உணர்கிறோம். அதற்கு நன்றி மகிழ்ச்சி என உடனடியாக சொல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். சில சமயம் மிகையாக இருந்தாலும் பரவாயில்லை இந்த மூன்று எழுத்து முசுடாக இருப்பவரையும் மலர வைக்கும். சூழலை இளகச் செய்து பழகுவதை எளிதாக்கும். உறவை பலப்படுத்தும்.

**5. கேட்பதற்கு முன்னமேயே உதவி செய்யுங்கள்:** சின்னச் சின்ன உதவிகள்- ஒரு பொருளை எடுத்துக் கொடுப்பது, பணியில் உடன் இணைந்து ஒத்தாசையாக இருப்பது, தகவல் சேகரித்துத் தருவது, வேண்டிய யோசனையை வழங்குவது - என்று அவர்கள் கேட்பதற்கு முன்னாலேயே யூகமாக முன்வந்து உதவி செய்வது உங்களின் மதிப்பை உயர்த்தும்.

**6. பொறுமை காத்தல் :** சில சமயம் இறுக்கமான சூழல் உருவாகலாம். ஏதோ ஒரு மனஸ்தாபமோ தப்பு அபிப்ராயமோ வரலாம். அப்போது வாதிட்டு சாதிக்க நினைக்காமல், தவறு உங்கள் பக்கம் இல்லையென்றாலும் வார்த்தையை உதிர்க்காமல் அமைதியாக நிதானமாக அணுகுவது உங்களை மதிப்பு மிக்கவராக ஆக்கும்.

**7. மன்னிக்கப் பழகுங்கள் :** நெருங்கிய உறவோ மற்றவரோ வேண்டுமென்றே தவறு செய்யவில்லை எனினும் ஏதோ வகையில் தீங்கிழைத்தால் மன்னிக்கப் பழகுங்கள். காலப்போக்கில் உறவு சீராகும்,. உங்கள் மதிப்பு உயரும் உங்களுக்கும் உள்ளத்தில் அமைதி நிலவும்

**8. பிரதிபலன் பாராமல் சேவை செய்யுங்கள் :** லாபக் கணக்கு இன்றி ஏதேனும் ஒரு பொதுத் தொண்டில் ஈடுபடுங்கள். அது உங்கள் ஆளுமையை செதுக்கும். பிறர் மனதில் நீங்கள் கம்பீரமாக தெரிவீர்கள்

இந்த சின்னச் சின்ன பழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டால் மக்கள் உங்களால் ஈர்க்கப்படுவார்கள். உங்கள் செல்வாக்கும் சொல்வாக்கும் உயரும்.

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 16)

இராம . வெங்கடாத்ரி

நூற்றாண்டு கொண்டாடும் ஆர்.எஸ்.எஸ்-இன் பிரார்த்தனை குறித்து இந்தக் கட்டுரையில் பார்ப்போம். "இந்த நாடு ஹிந்து நாடு" என்பது குறித்த முந்தைய கட்டுரைகளின் விளக்கங்களில் இந்த நாடு கலாச்சார ரீதியாக, ஆன்மீக ரீதியாக பன்னெடுங்காலமாக ஒன்றிணைந்துள்ளது என்பதைப் பார்த்தோம். ஆர்.எஸ்.எஸ்-இன் பிரார்த்தனை இந்த ஆன்மீக ரீதியான தேசியத்தையே முன்னிறுத்துகிறது.

**பாரதத்தின் ஆன்மீக மையம்**

பாரதம் என்பது வெறும் புவியியல் சார்ந்த ஒரு நிலப்பரப்பு மட்டுமல்ல; தர்மத்தை ஒரு உள்ளார்ந்த கடமையாகக் கருதிய தலைமுறைகளால் செதுக்கப்பட்ட, ஒரு நாகரிக ஆன்மாவின் உயிருள்ள வடிவமாகும். பல வகையான சவால்களை எதிர்கொண்ட போதிலும், இந்நாட்டின் நிலையான ஒற்றுமைக்கு அதன் பாரம்பரியமே அடிப்படையாக அமைகிறது. அந்த உணர்வினை ஏற்படுத்துவதே ஆர்.எஸ்.எஸ்-இன் 'பிரார்த்தனை'. ஆர்.எஸ்.எஸ்-இன் தினசரி கிளைகளில் (ஷாகாக்களில்), பொது விழாக்கள், கூடுதல்கள் என்று எதுவாக இருந்தாலும், "நமஸ்தே சதா வத்சலே மாத்ருபூமே" என்று பாடப்படும் பிரார்த்தனை அந்த நிகழ்வின் ஒரு பகுதியாக இருக்கும். காயத்ரி மற்றும் சாந்தி மந்திரங்களைப் போலவே, இது தனிமனிதனை தர்மம் மற்றும் தாய்நாட்டின் மீதான கடமையில் வேரூன்றிய ஒரு கூட்டு உணர்வுக்கு உயர்த்துகிறது. மரியாதை மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், வலது உள்ளங்கையை கீழ்நோக்கி வைத்தவாறு மார்பின் மீது வைத்துக்கொண்டு நேராக நின்ற நிலையில் பிரார்த்தனை பாட வேண்டும். ஆர்.எஸ்.எஸ்-ன் பிரார்த்தனை எல்லைகளைக் கடந்து, நாட்டு மக்களின் தேசபக்தி உணர்வுடன் ஒன்றிப்போகும் ஒரு கலாச்சார அடையாளமாகத் திகழ்கிறது.

**ஹிந்து தர்மத்தில் பிரார்த்தனையின் பங்கு**

இந்து தர்மத்தில், பிரார்த்தனை என்பது வெறும் சடங்கு மட்டுமல்ல; அது இறைத்தன்மையுடன் இணைவதற்கான ஒரு வழி முறையாகும். ஒவ்வொரு மங்களகரமான நிகழ்வும் வலிமை, நல்வாழ்வு மற்றும் ஆசீர்வாதங்களுக்கான பிரார்த்தனையுடனேயே தொடங்குகிறது. மந்திரங்கள் தனிமனிதனையும் சமூகத்தையும் உயர்த்தக்கூடிய ஆன்மீக ஆற்றலைக் கொண்டுள்ளன. மிகவும் போற்றப்படும் மந்திரங்களில் ஒன்று 'சாந்தி மந்திரம்' (அமைதி வேண்டி ஓதப்படும் துதி) ஆகும்; இது அனைவருக்குமான அமைதி, ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியை வேண்டுகிறது:

**ஓம் சர்வே பவந்து சுகினஹ, சர்வே சந்து நிராமயாஹ |**

**சர்வே பத்ராணி பச்யந்து, மா கஸ்சித் துக்கபாக் பவேத் ||**

**ஓம் சாந்திஹி சாந்திஹி சாந்திஹி ||**

**கூட்டுப் பிரார்த்தனை**

"சம் கச்சத்வம் சம் வதத்வம் சம் வோ மனாம்ஸி ஜானதாம்" (Sam gachatam sam vadatam) என்பது ரிக் வேதத்தில் (10.191.2) இடம்பெற்றுள்ள ஒரு புகழ்பெற்ற மந்திரமாகும். இதன் பொருள் "நாம் அனைவரும் இணைந்து நடப்போம், ஒற்றுமையுடன் பயணிப்போம். ஒரே குரலில் சொல்லுவோம். இதன் மூலம் நம் மனங்களும் எண்ணங்களும் முழுமையான உடன்பாட்டுடன் இருக்கட்டும்." என்பதாகும். இது இணைந்து செயல்படவும், சிந்திக்கவும் வலியுறுத்தும் ஒரு ஆழமான ஒற்றுமைக்கான பிரார்த்தனையாகும். ஆர்.எஸ்.எஸ்-இன் பிரார்த்தனையும் இதோ போல ஒருமையை வலியுறுத்தும் ஒரு பிரார்த்தனையாகும். ஆர்.எஸ்.எஸ்-இன் பிரார்த்தனை முழுவதும் பன்மையில் வரும். பிரார்த்தனையின் எல்லா இடங்களிலும் நாங்கள் என்ற சொல்லே கையாளப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட பிரார்த்தனை ஒருவரின் உள்ளத்தில் மாற்றத்தையும் மன உறுதியையும் வளர்க்கும் அதே வேளையில், கூட்டுப் பிரார்த்தனை ஒரு கூட்டு ஆன்மீக ஆற்றலை உருவாக்கி, சமூகங்களிடையே ஒருமைப்பாட்டு உணர்வை ஏற்படுத்துகிறது.

**வந்தே மாதரம்**

பங்கிம் சந்திர சட்டோபாத்யாயரால் இயற்றப்பட்ட 'வந்தே மாதரம்' விடுதலைப் போராட்டத்தில் தன்னலமற்ற தியாக மனப்பான்மையைத் தூண்டிய ஒரு தேசிய பிரார்த்தனை. வந்தே மாதரம் தேசத்தை வளமும் புனிதமும் கொண்ட ஒரு தெய்வீகத் தாயாக உருவகப்படுத்தியது; இதன் மூலம் தேசபக்தியின் கொள்கைகளை பக்தி உணர்வுடன் இணைத்தது. 'பாரத மாதா' எனும் பொதுவான ஆன்மீக அடையாளத்தின் கீழ் கொண்ட மக்களை ஒன்றிணைத்தது. ஆர்.எஸ்.எஸ்-இன் பிரார்த்தனையின் முதல் வரியும், வந்தே மாதரம் பாடல் சொல்லும் வழியில் தாய்நாட்டிற்கு வணக்கம் (நமஸ்தேம மாத்ரு பூமே) சொல்லி

ஆரம்பிக்கிறது.

**தாய்த்திருநாட்டின் மீதான பக்தி**

இந்தப் பிரார்த்தனை வெறும் தனிப்பட்ட வேண்டுதல் மட்டுமல்ல; இது பாரதிய கலாச்சார விழுமியங்களில் (பாரதிய சம்ஸ்காரம்) ஆழமாக வேரூன்றிய ஒரு கூட்டு ஆன்மீக உறுதிப்பாடாகும். இது தெய்வீக வலிமை, நோக்கத் தெளிவு மற்றும் மன உறுதி ஆகியவற்றை வேண்டி நிற்கிறது. இது “ஜக-ஜனனி”(மக்களின் அன்னை), பத்து கரங்களைக் கொண்ட தேவி மற்றும் சக்தியின் வடிவம் எனப் போற்றப்படும் பாரத மாதாவை வணங்குவதன் மூலம் தொடங்குகிறது. பகவான் ஸ்ரீ ராமரின் பொன்மொழியை இந்தப் பிரார்த்தனை நமக்கு நினைவூட்டுகிறது: “ஜனனி ஜன்மபூமிச்ச ஸ்வர்காதபி கரியஸீ”

**(“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே”)**

மேற்கத்திய நாடுகளிலிருந்து இந்தியா திரும்பிய சுவாமி விவேகானந்தர், பாரத மண்ணில் தன் நெற்றியை வைத்து வணங்கி, அந்த மண்ணில் புரண்டு, “அன்னையே, அந்நிய தேசங்களில் நான் அறியாமல் பெற்றிருக்கக்கூடிய அசுத்தங்களுக்காக என்னை மன்னித்துவிடு,” என்று கண்ணீர் மல்கக் கூறிய அந்த உணர்வுப்பூர்வமான தருணத்தை நாம் நினைவுகூரலாம். ‘பாரத மாதா’ என்பது சங்கத்தின் ஸ்வயம்சேவகர்களுக்கு (சங்கத்தின் தன்னார்வலர்களுக்கு) வெறும் நிலப்பரப்பு மட்டுமல்ல, மாறாக ஒரு புனிதமான தெய்வீகச் சந்நிதி. அதாவது ஒரு தாய், ஒரு தெய்வம் மற்றும் கர்மபூமி என்பதைப் பற்றிய புரிதலை ஆழமாக்க உதவுகின்றன. : இந்தப் பிரார்த்தனை ‘பாரத மாதா’வை வணங்கும் விதமாகத் தொடங்குகிறது; இது நாட்டின் மீதான அசைக்க முடியாத பக்தி மற்றும் சேவையை வலியுறுத்துகிறது.

**சங்கப் பிரார்த்தனையின் பரிணாம வளர்ச்சி**

சங்கப் பிரார்த்தனை முதலில் மராத்தி மொழியில் அறிமுகப்படுத்தப்பட்டது. அக்காலத்தில் மகாராஷ்டிராவில் நிலவிய வழக்கப்படி, ஒவ்வொரு ‘அகாரா’விலும் (உடல் பயிற்சி மையம்) மராத்தி மொழியிலான பிரார்த்தனை இடம்பெற்றிருந்தது. அதேபோல, வட இந்தியாவில் இந்தி மொழியில் ‘வந்தனா’ (பிரார்த்தனை) செய்யும் மரபு வழக்கத்தில் இருந்தது. எனவே, மராத்தி மற்றும் இந்தி ஆகிய இரு மொழிகளிலும் பிரார்த்தனைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பிரார்த்தனையின் இறுதியில், “ராஷ்ட்ர குரு ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் சுவாமி கி ஜய்” (தேசத்தின் குருவான ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் சுவாமிக்கு வெற்றி உண்டாகட்டும்) என்ற முழக்கம் எழுப்பப்பட்டது. சத்ரபதி சிவாஜி மகாராஜால் ‘ஹிந்தவி ஸ்வராஜ்’ (சுயராஜ்யம்) நிறுவப்பட்டதற்குப் பின்னால் சமர்த் குரு ராமதாஸ் ஒரு பெரும்




உந்துசக்தியாகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆர்.எஸ்.எஸ். (RSS) அமைப்பு இந்தியா முழுவதும் விரிவடைந்தபோது, அதில் ஒரு மாற்றம் தேவை என்பது உணரப்பட்டது. இயல்பாகவே, பாடல்களும் பிரார்த்தனைகளும் காலப்போக்கில் விரிவான சூழல்களையும் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையில் பரிணாம வளர்ச்சி அடைகின்றன. இதனைச் செயல்படுத்தும் விதமாக, 1939-ஆம் ஆண்டில் மகாராஷ்டிராவின் வார்தா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு முக்கியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் டாக்டர் கேசவ் பலிராம் ஹெட்கேவார், ஸ்ரீ குருஜி (எம்.எஸ். கோல்வல்கர்), அப்பாஜி ஜோஷி, பாபாசாகேப் ஆப்தே, பாலாசாகேப் தேவ்ரஸ், டான்ட்யா ராவ் தெலாங், விட்டல் ராவ் பட்கி, பாபாஜி சலோத்கர், கிருஷ்ண ராவ் மொஹரிரர் மற்றும் டாக்டர் ஹெட்கேவாரின் நண்பரான நானா சாகப் தலதுலே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பத்து நாட்கள் நீடித்த ஆழ்ந்த விவாதங்களுக்குப் பிறகு, சங்கப் பிரார்த்தனையின் ‘கத்யாபாவ்’ (உரைநடை வடிவிலான பொருள் விளக்கம்) உருவாக்கப்பட்டது. கடைசி வரியாக “பாரத் மாதா கி ஜய்” (பாரத அன்னைக்கு வெற்றி உண்டாகட்டும்) என்ற முழக்கம் சேர்க்கப்பட்டது. பிறகு இந்த உரைநடை வடிவம் சமஸ்கிருத மொழியில் டாக்டர் ஹெட்கேவரின் நெருங்கிய நண்பரான பேராசிரியர் நரஹரி நாராயண் பிடே (Narahari Narayan Bhide) என்பவரால் எழுதப்பட்டது. சமஸ்கிருதத்தில் புலமை பெற்ற ஆங்கிலப் பேராசிரியரான பிடே, தாய்நாட்டின் மீதான பக்தி, கலாச்சாரப் பெருமிதம் மற்றும் அமைப்பு ரீதியான ஒழுக்கம் ஆகிய RSS-இன் முக்கிய விழுமியங்களை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் பிரார்த்தனையை உருவாக்கினார். பிராந்திய மற்றும் மொழி எல்லைகளைக் கடந்து, கலாச்சார ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தவே சமஸ்கிருத மொழி தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு ஸ்வயம்சேவகரும் (தன்னார்வலரும்) பிரார்த்தனையைத் துல்லியமாக உச்சரிப்பது மட்டுமல்லாமல், மிக முக்கியமாக அதன் ஆழமான பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(தொடரும்)

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் – பகுதி 16



- ஏழுமலை

**இரண்டாவது பாரதியார்**

“மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, சுதந்திர பாரதத்திலே தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்.

**வில்லினை எடு வீரா**

அவர் எழுதிய பாடல்களிலே நரபலி கொடுத்த வீரவங்கமும் என்ற பாடல் வரிகளைப் பற்றி சென்ற தொடரில் கண்டோம். இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ள “பந்தா பைராகி”யின் வீர வரலாற்றை இங்கு காண்போம்.

சுற்றிலும் பரந்து விரிந்திருந்த முகலாயப் பேரரசுக்கு மத்தியில், பஞ்சாபில் முதல் சுதந்திர சீக்கிய ஆட்சியை நிறுவியவர் பந்தா பைராகி. பாரதத்தை ஒரு இஸ்லாமிய நாடாக மாற்றும் ஔரங்கசீப்பின் முயற்சியை முறியடித்து வரலாற்றின் போக்கையே அவர் மாற்றியமைத்தார். முகலாயப் பேரரசின் அடித்தளத்தையே பந்தா பைராகி ஆட்டங்காணச் செய்ததாலேயே பிற்காலத்தில் மொகலாய வம்சத்தை சுக்கு நூறாகச் சிதறவிட்டு இன்றைக்குள்ள காஷ்மீர், ஜம்மு, கில்கிட், ஹரியானா, பஞ்சாப் (இந்தியா), பஞ்சாப்(பாக்கிஸ்தான்), கைபர் உள்ளிட்ட ஒரு பரந்த சீக்கியப் பேரரசை ரஞ்சித் சிங் ஏற்படுத்தினார். அந்த காலகட்டத்தில் நடந்த சமகால நிகழ்வுகளை சிறு முன்னோட்டமாகப் பார்த்த பின் பந்தா பைராகியின் வீர வரலாற்றில் நுழைவோம்.

**நிகழ்வுகளின் காலவரிசை**

சீக்கியர்களின் ஒன்பதாவது குருவான தேக் பகதூர், ஔரங்கசீப்பின் மதமாற்றத்தை எதிர்த்ததற்காக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். 1674 ல் சிவாஜி மராட்டியப் பேரரசின் சத்ரபதியாகப் பொறுப்பேற்ற அடுத்த ஆண்டு இந்தச் சம்பவம் நடந்தது. 1680ல் சிவாஜி காலமானார்; அதனைத் தொடர்ந்து அரியணை ஏறிய சாம்பாஜி, 1689 ல் முகலாயப் படைகளால் சிறைபிடிக்கப்பட்டு, கொடூரமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

அதே ஆண்டு சீக்கியர்களின் பத்தாவது குருவான குரு கோவிந்த் சிங் ஹிந்துக்களைக் காக்க, முகலாயர் படையை அழிக்க, ‘தூயவர்களின் படை’ என்ற பொருள் தரும் கால்சா படையை உருவாக்கினார். 1704ல் குரு கோவிந்த் சிங் ஐ பிடிக்க ஔரங்கசீப்பின் படைகள் ஆனந்த்பூர் சாஹிபை முற்றுகையிட்டனர்.

பல மாதங்களாகியும் முற்றுகை வெற்றிபெறாத நிலையில், முகலாய படைகள் இறுதியாக குரு கோவிந்த் சிங்கின் பாதுகாப்பான வெளியேற்றத்திற்கு உறுதியளித்து முற்றுகையை முடித்துக் கொள்வதாக அறிவித்தது. குரு கோவிந்த சிங் தனது குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்களுடன் வெளியே வந்தவுடன் அவரைத் தாக்கிய முகலாயர் படை குருகோவிந்த சிங்கின் மூத்த இரு மகன்கள் மற்றும் தாயாரைக் கொன்று, இரு இளைய மகன்கள் ஜோராவர் சிங் (9 வயது) மற்றும் ஃபதே சிங் (7 வயது) ஆகியோரை கடத்திச் சென்றனர். மதம் மாற மறுத்த அந்த பிஞ்சுகள் இருவரையும் உயிருடன் வைத்து சுவர் எழுப்பிக் கொல்லப்பட்டனர். அடுத்த ஆண்டே (1705 ல்) மீண்டும் லட்சக்கணக்கான வீரர்களுடன் படை எடுத்து வந்த முகலாயர்களால் குரு கோவிந்த சிங்கை தோற்கடிக்க முடியவில்லை. தோல்வியை ஒப்புக்கொண்டு முகலாயப் படைகள் பின்வாங்கின. குரு கோவிந்த் சிங் ‘ஜஃபர்நாமா’ (வெற்றிக்கான மடல்) என்ற கடிதத்தை எழுதி வெளியிட்டார். தனது தலைநகரை தக்காணப் பகுதிக்கு மாற்றிய ஔரங்கசீப், சமாதானப் பேச்சுக்காக குரு கோவிந்த சிங்கை தக்காணம் அழைத்தார். 1706 ல் ஔரங்கசீப்பின் அழைப்பை ஏற்று அவரைச் சந்திக்க குரு கோவிந்த் சிங் புறப்பட்டபோது ஔரங்கசீப் தக்காணத்தில் காலமாகிவிட்டார். இந்நிலையில் மகாராஷ்ட்ரத்தின் நாந்தேத் பகுதியில் முகலாயர்களுக்கு எதிரான போராட்டத்தைத் தொடரும் பொறுப்பை பந்தா பைராகியிடம் ஒப்படைத்த குரு கோவிந்த சிங் 1707-1708 கால கட்டத்தில் பந்தா பைராகியை அங்கேயே பயிற்றுவித்தார்.

**யார் இந்த பந்தா பைராகி?**

பந்தா பைராகி 1670-ஆம் ஆண்டு அக்டோபர் 27-அன்று, தற்போதைய ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் ரஜௌரி பகுதியில் ஒரு விவசாய ராஜபுத்திரக் குடும்பத்தில் பிறந்தார். அவரது இயர்பெயர் ‘லட்சுமண் தேவ்’. ஒருமுறை வேட்டைக்குச் சென்றபோது பெண் மானோடு அதனது இரண்டு குட்டிகளும் துடித்து இறந்த சம்பவம் அவருக்குள்

மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியது. உலக வாழ்க்கையைத் துறந்த அவர், காட்டில் சுவாமி ஜானகி பிரசாத்திடம் தீட்சை பெற்று, 'மாதவ் தாஸ்' என்ற பெயரில் ஒரு வைஷ்ணவ 'பைராகி' (துறவி) ஆனார். துறவி ஆன மாதவ்தாஸ் ஹரித்வார் போன்ற தலங்களுக்கு தீர்த்த யாத்திரை மேற்கொண்டு, நிறைவாக இன்றைய மகாராஷ்டிராவில் உள்ள கோதாவரி நதிக்கரையில் நாந்தேட் நகரில் ஒரு ஆசிரமத்தை அமைத்தார்.

மாதவ்தாஸ் பைராகியை தனக்கு அடுத்ததாக சீக்கியப் படைகளின் தலைமைப் பொறுப்பேற்க்க வைக்க வேண்டும் என்று முடிவு செய்த குரு கோவிந்த சிங், அவரை 1708-ஆம் சந்தித்தார். குரு கோவிந்த சிம்மன் வெளிப்படுத்திய தேசத்தின் மீதான அந்தத் துயரத்தைக் கண்டு பைராகி நெகிழ்ந்து போனார். "சுஹிந்து தர்மத்தைக் காப்பதற்காக தொடங்கியுள்ள கால்சா இயக்கத்தில் இணைகிறேன். எனது உயிரைத் தங்களிடம் அர்ப்பணிக்கிறேன். இன்றிலிருந்து நான் தங்களின் 'பந்தா' (அடிமை/சேவகன்) ஆகிறேன்." என்று குரு கோவிந்த சிம்மனின் காலில் விழுந்து பைராகி கூறினார். அதன் பிறகு குரு மாதவ் தாஸை சீக்கியர்களின் தலைவராக நியமித்து, அவருக்கு 'பாபா பந்தா சிங் பகதூர்' என்று குரு பெயரிடுகிறார். அவர் பைராகி (கடும் விரதம் இருக்கும் துறவி) ஆதலால் அன்று முதல் பந்தா பைராகி என்றும் அழைக்கப்படலானார். அடக்குமுறை மற்றும் அநீதிக்கு எதிராகப் போராட வேண்டும் என்பதன் அடையாளமாக, பந்தா பைராகிக்கு ஒரு வாள், ஐந்து அம்புகள், ஒரு 'நகாரா' (போர் முரசு) மற்றும் தனது போர்க் கொடி, சங்கத் (சீக்கியச் சமூகம்) மக்களுக்கான கையெழுத்துச் செய்தி, 25 அர்ப்பணிப்புள்ள சீக்கிய படை வீரர்கள் ஆகியவற்றை வழங்கி கால்சா பந்த்தின் (Khalsa Panth) பொறுப்பை அவரிடம் ஒப்படைத்து பின்வருமாறு குரு கோவிந்த சிங் கூறினார்: **'தரம் சலவன் சந்த் உபாரன், துஸ்ட் சபான் கோ மூல் உபரோன்' (அறத்தை நிலைநாட்டவும், சான்றோர்களைக் காக்கவும், தீய சக்திகள் அனைத்தையும் வேரறுக்கவும்)**

ஒரு காலத்தில் பெண் மானைக் கொன்றதால் ஏற்பட்ட துயரத்தால் துறவு கொண்ட அதே நபர், போர்க்களங்களில் எதிரிகளை ஈவு இரக்கமின்றி அழித்தொழித்தார். ஒரு அப்பாவிப் பெண் மானைக் கொல்வது 'அதர்மம்'. அதே சமயம் கொடுங்கோல் ஜிஹாதிப் படைகளைக் கொல்வது 'தர்மம்' என்பதையும் அவர் தெளிவாக உணர்த்துகிறார்.

### வெற்றிப் பயணம்

குரு கோவிந்த சிங்கின் மூலம் சீக்கியப் படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற பந்தா பைராகி, நாந்தேடில் இருந்து ஹிஸ்ஸார் நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்தார். நாந்தேடிலிருந்து ஹிஸ்ஸார் சுமார் 1,600 கி.மீ தொலைவில் உள்ளது. இத்தொலைவைக் கடக்க 2 மாதங்கள் ஆனது. முகலாயப் படைகளை ஏமாற்ற அவர் பல இடங்களில் தலைமறைவாக இருக்க வேண்டியிருந்தது. இறுதியில் ஹிஸ்ஸாரை அடைந்த அவர், சீக்கியர்களை ஒன்றிணைக்கும் பணியைத் தொடங்கினார். அவர் வழியிலிருந்த விவசாயப் பெருமக்கள் அனைவருக்கும் தீட்சை தந்து அவர்களை கால்சாக்களாக மாற்றினார். முகலாயர்களின் மத அடக்குமுறைக்கு ஆளாகித் துயருற்றிருந்த மக்களுக்கு இது ஒரு புதிய நம்பிக்கைக் கீற்றாக அமைந்தது. பிப்ரவரி 21, 1709 அன்று, சோனிபட் அருகே உள்ள செஹ்ரி கண்டா (Sehri Khanda) கிராமத்தில் அவர் தனது முதல் இராணுவத் தலைமையகத்தை அமைத்தார். இங்கிருந்து அவர் சீக்கியர்களைப் பஞ்சாபிற்கு அனுப்பி, வெறும் எட்டு மாதங்களுக்குள் தனது படையை உருவாக்கினார்.

சமூகத்தின் பல்வேறு தரப்பு மக்களும் அவருடன் இணையத் தொடங்கினர். விரைவில், ஹிஸ்ஸார் பகுதியில் (தற்போதைய ஹரியானா மாநிலம்) பந்தா பைராகி ஒரு வலிமையான சக்தியாக உருவெடுத்தார். இந்தியா முழுவதும் எழுந்த பல கிளர்ச்சிகளால் பலவீனமடையத் தொடங்கியிருந்த முகலாய ஆட்சியை வேரறுக்க, தேசப்பற்று கொண்ட மக்களைக் கொண்ட ஒரு படை பந்தா பைராகியின் பின் அணி திரண்டது. அப்படைக்குத் தேவையான ஆயுதங்களை வாங்க அவருக்குப் பணம் தேவைப்பட்டது. எனவே, 1709-ஆம் ஆண்டு நவம்பர் 2-ஆம் தேதி, சோனிபட்டில் உள்ள முகலாயக் கருவூலத்தின் மீது தாக்குதல் நடத்தி, தனது படையின் செலவுகளுக்கான நிதி ஆதாரங்களை அவர் திரட்டினார்.

அட்டூழியம் செய்து வந்த முகலாயச் சர்தார்களைத் தண்டித்தார். 1709-ல், பந்தா பைராகி சமனா (Samana), சதாவுரா (Sadhaura) வைத் தாக்கி வெற்றிகளைப் பெற்றார். அடுத்ததாக முக்லிஸ்பூர் (Mukhlispur) நகரத்தைக் கைப்பற்றி, அதை அரண் அமைத்து பலப்படுத்தி, அதற்கு 'லோஹ்கட்' (Lohgadh) என்று பெயரிட்டார். அவர் முஸ்லிம் ஜமீன்தார்களிடமிருந்து நிலவுரிமைகளைப் பறித்து, அந்த நிலங்களை விவசாயிகளுக்குப் பிரித்து வழங்கினார். இந்நாட்டின் மண்ணிலிருந்து முகலாய ஆட்சியை வேரறுக்க உறுதிபூண்டிருந்த தேசியவாத சக்திகளின் மையமாக 'லோஹ்கட்' (Lohgadh) மாறியது. டில்லி அரசர் பகதூர் ஷா தக்காணப் பகுதியில் கிளர்ச்சி களை ஒடுக்கச் சென்ற தருணத்தில் பந்தா பைராகி, பஞ்சாபின் வட பகுதிகளைக் கைப்பற்றினார்.

### சப்பர் சிரி போர்

இவரது போர் வரலாற்றில் 1710-ஆம் ஆண்டு மே 12-ஆம் தேதி நடைபெற்ற 'சப்பர் சிரி போர்' (Battle of Chappar Chiri) முக்கியமானது. பஞ்சாபில் லாகூருக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய கோட்டை சிர்ஹிந்த் (Sirhind) குரு கோவிந்த் சிங்கின் இரு இளைய புதல்வர்கள் இஸ்லாத்தை

ஏற்க மறுத்தபோது, அவர்களை உயிருடன் செங்கல் சுவருக்குள் வைத்துப் புதைத்தவன் சிர்ஹிந்த் ஆட்சியாளர் வசீர் கான். சிர்ஹிந்த் நகரிலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் உள்ள 'சப்பர் சிரி' (Chappar Chiri) என்ற இடத்தில் பந்தா பைராகியின் படைகள் வசீர் கானின் படைகளை எதிர்கொண்டன.

எண்ணிக்கையில் பெரியதாக இருந்தபோதிலும் வசீர் கானின் படைகளால், வீரமிக்க சீக்கியப் படைக்கு எதிராக தாக்குப்பிடிக்க முடியவில்லை. இரண்டு நாள் போருக்குப் பிறகு, பந்தா பைராகியின் வாளால் வசீர் கான் வீழ்த்தப்பட்டார்; 1710 மே 14 அன்று பந்தா பைராகி சிர்ஹிந்த் பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்ற பிறகு, ஜீலம் மற்றும் யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட பரந்த நிலப்பரப்பிற்கு ஆட்சியாளரான பந்தா பைராகி, முக்லிஸ்பூரில் தனது தலைநகரை நிறுவினார்; அங்கு அவர் கட்டிய 'லோஹ்கர்' (Lohgarh) என்ற தகர்க்க முடியாத கோட்டை இன்றும் நிலைத்து நிற்கிறது. லோஹ்கரில் தனது தலைநகரை அமைத்து, வெற்றி பெற்றதன் அடையாளமாக ஸ்ரீ குரு நானக் தேவின் பெயரில் நாணயங்களை வெளியிட்டார்.

லாகூருக்குக் கிழக்கே உள்ள முழு பஞ்சாப் பகுதியிலும் பந்தா பைராகியின் சீக்கிய ஆட்சி அமைந்ததால், டெல்லிக்கும் லாகூருக்கும் இடையிலான தகவல் தொடர்பு பாதிக்கப்பட்டது. மொகலாயர்கள் ஆண்ட பஞ்சாபின் பல பகுதிகளை வென்று சீக்கிய அரசை அமைத்ததன் மூலம் சட்லஜ் முதல் யமுனை வரையிலான பகுதி முழுவதும் பந்தா பைராகியின் கட்டுப்பாட்டில் வந்தது. ஏழே ஆண்டுகளில் 20 இடங்களில் நடந்த போர்களில் பந்தா பைராகி வெற்றி பெற்று பஞ்சாபின் பல பகுதிகளை முஸ்லிகளிடமிருந்து கைப்பற்றினார்.

மொகலாய மன்னன் பகதூர் ஷா இறந்துவிட, அடுத்த முகலாய அரசனான ஃபரூக் சியார் அனுப்பிய பெரும் படைகளை எதிர்கொள்ள இயலாததால் 1713-ல், ஜம்முவின் தொலைதூர மலைப்பகுதிகளுக்குச் சென்று அங்கு தனது ராணுவத்தை மீண்டும் கட்டமைக்க பந்தா பைராகிக்கு சிறிது காலம் தேவைப்பட்டது. பந்தா பைராகி ஜம்மு சென்ற நிலையில், பஞ்சாபில் இருந்த சீக்கியர்கள் மீது முகலாயர்கள் கடுமையான அடக்குமுறையை ஏவினர். சீக்கியர்களின் தலைக்கு விலை நிர்ணயிக்கப்பட்டதால் அவர்கள் காடுகளில் ஒளிந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஜம்முவில் தனது படைகளை வலுப்படுத்திக் கொண்ட, பந்தா பைராகி, 1715-ல் பஞ்சாப் மீது படை எடுத்து, முகலாயர்களிடம் இருந்து இழந்த பஞ்சாப் பகுதிகளைக் கைப்பற்றினார்.

**குர்தாஸ் நங்கல் போர் (Battle of Gurdas Nangal)**

இந்நிலையில் குஜராத், அமனாபாத், ஔரங்காபாத், படாலா, ஹைபத்பூர், கலனூர், காங்க்ரா ஆகிய இடங்களில் நிலை பெற்று இருந்த முகலாயப் படைகளின் தளபதிகள் லாகூரில் ஒன்றுகூடி மிகப் பெரிய படை திரட்டி பந்தா சிங்கை வீழ்த்த திட்டமிட்டனர். ஒரு லட்சத்துக்கும் அதிகமான வீரர்கள் கொண்ட படை பந்தா பைராகி தங்கியிருந்த குர்தாஸ் நங்கல் கோட்டையை அடைந்தது. வீரமிக்க சீக்கியப் போராளிகள் கோட்டையிலிருந்து குழுக்களாக வெளியே வந்து எதிரிகளுக்குக் கடும் இழப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். குரு கோவிந்த் சிங் ஜியின், **"சவா லாக் சே ஏக் லடாவூன், தபாய் கோவிந்த் சிங் நாம் தராவுன்" (ஒருவன் ஒன்றரை லட்சம் பேருடன் போரிட்டால் மட்டுமே நான் கோவிந்த் சிங் என்று அழைக்கப்படுவேன்)** என்ற வாக்கு, குர்தாஸ் நங்கல் கோட்டைக்கு வெளியே மெய்யாகியது. எட்டு மாத கால நீண்ட முற்றுகைக்குப் பிறகு, 1715 டிசம்பர் 17 அன்று, பந்தா பைராகி தனது வீரர்களுடன் கைது செய்யப்பட்டு டெல்லிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

முகலாய அரியணையில் அமர்ந்திருந்த ஃபரூக்ஷியார், பிடிக்கப்பட்ட சீக்கிய வீரர்கள் மதம் மாறாவிட்டால் கொல்லப் போவதாக எச்சரித்தார். சீக்கிய வீரர்கள் மதம் மாற மறுத்ததால், தினமும் பலர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட சீக்கியர்களின் தலைகள் ஈட்டி முனைகளில் குத்தப்பட்டன. மூன்று மாத காலத்திற்கு டெல்லியின் வீதிகளில் கைது செய்யப்பட்ட சீக்கிய வீரர்கள் இரும்பு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டனர். அந்த ஊர்வலத்தில் கூண்டில் அடைக்கப்பட்டு பந்தா பைராகியும் அழைத்துச் செல்லப்பட்டார். தினசரி ஈட்டி முனைகளில் குத்தப்பட்ட சீக்கியத் தலைகளும் அந்த ஊர்வலங்களில் காட்சிப்படுத்தப்பட்டன.

இறுதியாக, 1716-ஆம் ஆண்டு ஜூன் 9 அன்று, மரண தண்டனையிலிருந்து தப்பிக்க இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுமாறு பந்தா பைராகிக்கு டெல்லியில் மெஹ்ராலி என்ற இடத்தில், இறுதி எச்சரிக்கை விடப்பட்டது. அன்றைய தினம் எஞ்சியிருந்த 2,000-க்கும் மேற்பட்ட சீக்கியர்களின் தலைகள் ஈட்டிகளில் குத்தி வைக்கப்பட்டன; கொல்லப்பட்டவர்களின் தலைகள் நிரப்பப்பட்ட 700 வண்டிகள் மூலம் மக்கள் மத்தியில் அச்சம் பரப்பப்பட்டது.

'சந்த் சிபாஹி' (துறவி-வீரர்) ஆன பந்தா பைராகி கண் முன்னே உயிரோடு இருந்த அவரது மகனது இதயத்தைப் பிளந்து துடிதுடிக்கும் இதயத்தை அவரது வாயில் திணித்தனர். அவரது தோல் உரித்து எடுக்கப்பட்டது. அவரது நாக்கு பிடுங்கப்பட்டது. அவரது கைகளும் கால்களும் வெட்டப்பட்டன.

அவரது கண்கள் தோண்டி எடுக்கப்பட்டன; அவரது உடல் உறுப்புகள் ஒவ்வொன்றாகத்

துண்டிக்கப்பட்டன; ஆனால் இறுதி மூச்சு வரை அவர் அமைதியாகவும் மன உறுதியுடனும் சற்றும் தளராமல் ‘அகால் புருக்’ (இறைவன்) மீதான தியானத்தில் நிலைத்திருந்தார்.

பந்தா பைராகி தனது உயிரைத் தியாகம் செய்ததன் மூலம் மக்களிடையே ஒரு புதிய ஆற்றலைப் பாய்ச்சினார். ஒரு நூற்றாண்டுக்குள், முகலாயர்களையும் ஆப்கானியர்களையும் தோற்கடித்து, பிரம்மாண்டமான சீக்கியப் பேரரசு அமைவதற்கு உத்வேகம் தந்தது பந்தா பைராகியின் தியாகம் ஏழே ஆண்டுகளில் அவர் பெற்ற வெற்றிகள் மிகுந்த பிரமிப்பையும் வியப்பையும் ஏற்படுத்தியதோடல்லாமல் ஹிந்து சமுதாயத்திற்கு நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. “ஒரு சாதாரண குடிசையில் தொடங்கி சிறந்த போர்வீரனாகவும் மன்னனாகவும் அவர் உயர்ந்த பயணம் மிகவும் அற்புதமானதும் தனித்துவமானதும் ஆகும்” என்று வீர் சாவர்க்கர் பாண்டா பைராகிக்கு “அமர் அம்ரித்” (அழியாத மாவீரர்) என்ற மராத்திக் கவிதை எழுதி அவரது வீரத்திற்கு கவிதை வடிவில் அஞ்சலி செலுத்தியுள்ளர்.

(தொடரும்)

**நரபலி கொடுத்த வீரவங்கமும் பாஞ்சாலமும் இன்று**
**நானிலமசைக்க வினவிடும் கேள்வி நெஞ்சை**
**உருக்கிடுதே!**

**பிளந்த இந்நாடு மீண்டும் பிணைந்தெழுவ**
**தெப்போ?**
**வெற்றி முழங்கிடவே பகவா வானில்**
**பறப்பதெப்போ?**
**மதவெறியோரை, விஷநெஞ்சோரை,**
**கொடுமையாளரை**
**அடக்கிடுவாருண்டோ? வில்லினை எடு வீரா**
**(நரபலி)**

**சித்தூர் கோட்டையில் தீக்குளித்த நல்மாதரின்**
**ஆவிகளும்**
**ஹல்திகாட்டிலே போரில் மடிந்த வீரரின்**
**ஆவிகளும்**
**பந்தா பைராகி, சம்பூ சத்ரபதி நவகாளியும் நம்மைக்**
**கூவியழைத்திடுதே**
**அமைதியிழந்தே, தாகம் கொண்டே ஆவிதுடிக்குது**
**எங்கே உன் வீரம்? வில்லினை எடு வீரா (நரபலி)**

**எவரோ வென்றிடுவார் உன்னை எவரோ**
**கொன்றிடுவார்?**
**நஞ்சையுண்டபின்னும் சங்கரன் உலகினைத்**
**தாங்கினனே!**
**ஆர்த்திடும் கடலினையே அணையால் தடுத்**
**திடுவாருண்டோ?**
**ஆதவன் எழுந்திட்டால் கொடும் அந்தகாரம்**
**எங்கோ?**
**ஹிந்து எழுந்தால் தன்னையுணர்ந்தால்**
**பகைவரெல்லாம்**
**நடுங்கியே ஓடிடுவார்! வில்லினை எடு வீரா**
**(நரபலி)**

**உலகத்தரசே பலப்பல முறைகள் நீ**
**விழித்தெழுந்தாயே!**
**மனித குலத்தின் வைரிகள் அன்று தலைவணங்கி**
**நின்றார்**
**சகரர் ஹூணர்களை ஜீரணம் செய்தாயே**
**கிரேக்கப் படையினரை விரட்டி அடித்தாயே**
**மமதை கொண்டோரின் வெறி கொண்டோரின்**
**சிங்காதனத்தை**
**சிதற உடைத்தாயே!வில்லினை எடு வீரா! (நரபலி)**

**உலக சகோதர மனித சமத்துவ தத்துவம் பேசு**
**கிறாய்!**
**பலவீனர்களின் சொற்களுக்கெவரும் செவிசாய்த்**
**திடுவாரோ?**
**போதும் போதுமினி வெற்றுரைகள் போதும்**
**வீண்பறை அடிப்பெதெல்லாம் போதும் நிறுத்**
**திடுவாய்**
**பாரதீயமே உலகதத்துவம் தாரகமிதனை**
**பாரில் முழக்கிடுவாய்! வில்லினை எடு வீரா**
**(நரபலி)**

**வகுப்பு வெறியர் வெற்றி கொண்டதால் வங்கம்**
**பிளந்திடினும்**
**பஞ்ச நதமுமே உதிரம் தோய்ந்து துண்டாய்**
**ஆகிடினும்**
**கிரகணகால மிதுவும் இனி என்றும் நிலைத்**
**திடுமோ?**
**அமர நம் ஆன்மா இனி பிரிந்து நின்றிடுமோ?**
**இளங்கதிராதவன் எழுந்து விட்டான், இருட்க**
**ணமொழியும்**
**சந்திரப்பிறை மறையும்! வில்லினை எடு வீரா**
**(நரபலி)**

**இசை வடிவம்**
**பாடலின் இசை வடிவத்திற்கு கீழே உள்ள QRCODE ஐ SCAN செய்யவும்.**

# வெளிச்சம் படாத வேர்கள்

யா.சு. கண்ணன்

கார்னல் ஜேம்ஸ் வெல்ஷ் தனது "மிலிட்டரி ரெமினிசென்சஸ்" (Military Reminiscences) நூலில் பதிவு செய்துள்ள மூன்று முக்கிய தமிழ் புரட்சித் தலைவர்களான வேங்கை பெரிய உடையண தேவர், பொம்ம நாயக்கர் மற்றும் தளவாய் குமாரசாமி நாயக்கர் ஆகியோரின் விரிவான வரலாற்றைப் பார்ப்போம்.

**1. வேங்கை பெரிய உடையண தேவர் (சிவகங்கையின் கடைசி மன்னர்)**

வேங்கை பெரிய உடையண தேவர் சிவகங்கைச் சீமையின் அதிகாரப்பூர்வமான கடைசி மன்னர் ஆவார். பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தால் இந்திய மண்ணில் இருந்து முதன்முதலில் கடல் கடந்து நாடு கடத்தப்பட்ட அரசர் என்ற வரலாற்று முக்கியத்துவத்தை இவர் பெறுகிறார்.

சிவகங்கைக்கு அருகில் உள்ள சக்கந்தி பகுதியைச் சேர்ந்த நிலப்பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்தவர். வீரமங்கை ராணி வேலு நாச்சியாரின் மகளான இளவரசி வெள்ளச்சி நாச்சியாரை மணந்ததன் மூலம் சிவகங்கையின் அரியணை ஏறும் தகுதியையும், அரச வம்ச அங்கீகாரத்தையும் பெற்றார். 1791 ஆம் ஆண்டில் இவர் சிவகங்கையின் மன்னராக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

1801-ஆம் ஆண்டு சிவகங்கையில் நடந்த காளையார்கோயில் போரில், ஆங்கிலேயர் படைகளை எதிர்த்துப் போராடினார். ஆனால்

காளையார் கோவில் காடுகள் பிரிட்டிஷாரின் வசம் வீழ்ந்தது அதன் பிறகு, தப்பியோடிய மன்னர் பெரிய உடையண தேவரை ஆங்கிலேயப் படைகள் அடர்ந்த காட்டுப் பகுதியில் தேடிக் கண்டுபிடித்துக் கைது செய்தன.

1802 பிப்ரவரியில் 'அட்மிரல் ரெய்னியர்' கப்பல் மூலம் பினாங்கிற்கு அனுப்பப்பட்ட இவர், அங்கு நிலவிய கடுமையான இட நெருக்கடி மற்றும் நோய் பரவல் காரணமாகப் பினாங்கில் இருந்து சுமத்ராவில் உள்ள பென்குலென் என்ற பகுதிக்கு மாற்றப்பட்டார். அங்கிருந்த கடுமையான வெப்பமண்டலக் காலநிலையும், கொசுக்களால் பரவிய தீவிர நோய்களும் இவரது ஆரோக்கியத்தை முற்றிலுமாக சீர்குலைத்தன. இறுதியில், 1802 செப்டம்பர் 19 அன்று, தனது 34 ஆவது இளம் வயதிலேயே சிறைக்காவலில் இவர் உயிர் துறந்தார்.

**2. பொம்ம நாயக்கர் (வீரப்பூர் பாளையக்காரர்)**

பொம்ம நாயக்கர் என்பவர் திண்டுக்கல் பிராந்தியத்தில் இருந்த 'வீரப்பூர்' என்ற பாளையத்தின் மிக முக்கிய பாளையக்காரர் மற்றும் மாவீரர் ஆவார்.

ஆங்கிலேயர்களின் அநியாயமான நிலவரி மற்றும் ஆதிக்கத்திற்கு எதிராக தென்னிந்திய பாளையக்காரர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட 'திண்டுக்கல் கூட்டமைப்பின்' முதன்மைச் சூத்திரதாரியாகவும், தூணாகவும் பொம்ம நாயக்கர் விளங்கினார்.

தனது வீரப்பூர் பாளையத்தின் அடர்ந்த காடுகளையும், பாறை நிறைந்த மலைகளையும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான வலுவான ராணுவத் தளமாக மாற்றினார். அண்டை மாவட்டங்களில் இருந்து ஆங்கிலேயர்களை எதிர்த்துத் தப்பி ஓடிவரும் புரட்சியாளர்களுக்குத் தனது பாளையத்தில் புகலிடம் தந்தார். மருது சகோதரர்களுடன் நெருங்கியத் தொடர்பில் இருந்த இவர், காடுகளின் வழியே அணிவகுத்துச் செல்லும் பிரிட்டிஷ் படைகளின் மீது திடீர்த் தாக்குதல் நடத்தும் கொரில்லா (மறைந்திருந்து தாக்கும்) போர் உத்திகளை மிகச் சிறப்பாகக் கையாண்டு ஆங்கிலேயர்களுக்குப் பெரும் இழப்புகளை ஏற்படுத்தினார்.

நீண்ட போராட்டத்திற்குப் பின் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்ட இவரது நில உரிமைகள் மற்றும் பாளையக்காரர் பதவிகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்ட இவரைப் பிரிட்டிஷ் அரசு ஒரு ஆபத்தான நிலப்பிரபுவாகவே பார்த்தது. பினாங்கில் கடுமையான கண்காணிப்பில் வைக்கப்பட்ட இவருக்கு, உயிர்வாழ்வதற்காக மிகக் குறைந்த தொகையான மாதத்திற்கு வெறும் 2 பவுண்டுகள் (£2) மட்டுமே ஓய்வூதியமாக வழங்கப்பட்டது.

**தளவாய் குமாரசாமி நாயக்கர் (பாஞ்சாலங்குறிச்சி தளபதி / ஊமைத்துரை)**

தென்னிந்தியப் புரட்சி வரலாற்றிலும் பிரிட்டிஷ் கப்பல் பதிவேடுகளிலும் 'தளவாய் குமாரசாமி நாயக்கர்' என்ற பெயர் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், இது பாஞ்சாலங்குறிச்சியின் புகழ்பெற்ற மாவீரன் 'ஊமைத்துரையின்' (வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி) அசல் இயற்பெயர் ஆகும்.

பாளையக்காரர்களின் ராணுவக் கட்டமைப்பில்

**தமிழ் புரட்சித் தலைவர்கள் எதிர்கொண்ட சிறைச்சாலை மற்றும் வாழ்விட நிலைமைகள் மிகவும் கொடூரமானவையாகவும், அப்பட்டமான மனித உரிமை மீறலாகவும் இருந்தன.**

'தளவாய்' என்பது ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி அல்லது பிரதம அமைச்சர் என்ற மிக உயர்ந்த பதவியைக் குறிக்கும். 1799 இல் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பிறகு, பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை மீண்டும் கட்டி ஆங்கிலேயரை எதிர்த்த ஊமைத்துரை, இந்தப் பதவியின் கீழேயே படைகளை வழிநடத்தினார்.

கார்னல் வெல்ஷ் தனது குறிப்புகளில், 1801 அக்டோபரில் திருப்பத்தூர் கோட்டைச் சுவரில் மருது சகோதரர்களுடன் ஊமைத்துரையும் தூக்கிலிடப்பட்டார் என்று பதிவு செய்துள்ளார். இருப்பினும், 'அட்மிரல் ரெய்னியர்' கப்பலின் அதிகாரப்பூர்வ பிரிட்டிஷ் கடல்சார் ஆவணங்கள் மற்றும் கைதிகள் பட்டியலில் 'தளவாய் குமாரசாமி நாயக்கர்' என்ற பெயருடைய உயர் ராணுவத் தளபதி ஒருவர் பினாங்கிற்குச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டதாக மிகத் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தூக்கு மேடையில் இருந்து தப்பிப்பதற்காக ஊமைத்துரை தனது அசல் பெயரில் (குமாரசாமி நாயக்கர்) பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டாரா, அல்லது அவரது அதே பெயரைப் பெற்று அவரது தளவாய் பதவியை ஏற்றுக்கொண்ட அவரது முதன்மை ராணுவத் தளபதி நாடு கடத்தப்பட்டாரா என்பது இன்றும் ஆய்வுக்குரியது. எதுவாக இருப்பினும், பினாங்கிற்குச் சென்ற இந்தத் தளவாய் குமாரசாமி நாயக்கரை பிரிட்டிஷ் சிறைக்காவலர்கள் மிகவும் ஆபத்தான ராணுவப் போர்த் தந்திரவாதியாகக் கருதினர். கடலில் கப்பலுக்குள் எந்தவொரு புரட்சியும் வெடிக்காமல் இருக்க, பயணம் முழுவதும் இவர் மிகக் கடுமையான பாதுகாப்பில் வைக்கப்பட்டார்.

**பினாங்கில் இந்தத் தலைவர்கள் எதிர்கொண்ட சிறைச்சாலை நிலைமைகள் பற்றி**

1802 ஆம் ஆண்டு பினாங்கிற்கு (Prince of Wales Island) நாடு கடத்தப்பட்ட 73 தமிழ் புரட்சித் தலைவர்கள் எதிர்கொண்ட சிறைச்சாலை மற்றும் வாழ்விட நிலைமைகள் மிகவும் கொடூரமானவையாகவும், அப்பட்டமான மனித உரிமை மீறலாகவும் இருந்தன. வரலாற்று ஆய்வாளர் பேராசிரியர் கே. ராஜய்யனின் (K. Rajayyan) 'தென்னிந்தியப் புரட்சி' (South Indian Rebellion) வரலாற்று நூலின் வழியாகவும், பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தின் காலனித்துவ ஆவணங்கள் வழியாகவும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து கிளம்பியது முதலே தலைவர்கள் அனைவரும் கப்பலின் அடித்தளத்தில் மிகக் குறுகிய இடத்தில் இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தனர். பல வாரங்கள் நீடித்த இப்பயணத்தில் போதிய காற்றோட்டமோ, சுத்தமான குடிநீரோ, முறையான உணவோ வழங்கப்படவில்லை. இதன் காரணமாக, பினாங்கு தீவைச் சென்றடைவதற்கு முன்பாகவே மூன்று முக்கிய வீரர்கள் கப்பலிலேயே உயிரிழந்தனர்.

பினாங்கில் இவர்களை அடைக்க வழக்கமான கல்லால் ஆன மூடிய சிறைச்சாலைகள் அப்போது இல்லை. மாறாக, சதுப்பு நிலங்கள் நிறைந்த கடற்கரை ஓரத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட மரக் கூண்டுகள் மற்றும் திறந்தவெளி முகாம்களிலேயே (Open-air Stockades) இவர்கள் அடைக்கப்பட்டனர்.

பினாங்கு தீவைச் சுற்றி ஆழ்கடலும், உள்ளே அடர்ந்த மலேரியாக் காடுகளும் இருந்ததால், தலைவர்கள் தப்பியோட முடியாத இயற்கையான சிறைச்சாலையாக அது பயன்படுத்தப்பட்டது.

நாட்டை ஆண்ட மன்னர்களும் பாளையக்காரர்களும் அங்கு சாதாரணக் கைதிகளைப் போல நடத்தப்பட்டனர். பினாங்கு தீவை ஒரு புதிய காலனித்துவ வர்த்தக மையமாக மாற்ற ஆங்கிலேயர்கள் திட்டமிட்டிருந்தனர். இதற்காக இந்தத் தமிழ் கைதிகள் அனைவரும் அடர்ந்த காடுகளை அழித்தல், சாலைகள் அமைத்தல், சதுப்பு நிலங்களைச் சீரமைத்தல் மற்றும் புதிய கோட்டைகளைக் கட்டுதல் போன்ற மிகக் கடுமையான உடல் உழைப்புத் தொழில்களில் கொத்தடிமைகளாக ஈடுபடுத்தப்பட்டனர்.

பினாங்கின் அதிகப்படியான ஈரப்பதம் கொண்ட வெப்பமண்டலக் காலநிலையும், கொசுக்கள் நிறைந்த சதுப்பு நிலங்களும் தமிழ்நாட்டு வீரர்களுக்கு ஒத்துப் போகவில்லை. அவர்களுக்குத் தீவிர மலேரியா மற்றும் வயிற்றுப்போக்கு நோய்கள் தாக்கியபோது எவ்வித மருத்துவ உதவியும் பிரிட்டிஷ் அரசால் வழங்கப்படவில்லை. முறையான தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதி இல்லாததால், அங்கு சென்ற சில வருடங்களிலேயே கணிசமான எண்ணிக்கையிலான தமிழ் மாவீரர்கள் அடுத்தடுத்து சிறையிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்தனர்.

பினாங்கில் இருந்த போதிலும், இந்தத் தமிழ் தலைவர்கள் தங்களுக்குள் ஒருங்கிணைந்து மீண்டும் ஒரு கிளர்ச்சிக்குத் திட்டமிடுவதாக ஆங்கிலேயர்கள் சந்தேகித்தனர். இதனால், எஞ்சியிருந்த முக்கிய தலைவர்களை மேலும் பாதுகாப்பான, மனித நடமாட்டமற்ற இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள பென்குலென் (Bengkulu) என்ற மிகக் கொடிய சிறை முகாமுக்கு ஆங்கிலேயர்கள் மாற்றினர். இந்த இரண்டாம் கட்ட நாடு கடத்தல், எஞ்சியிருந்த தலைவர்களின் மன உறுதியையும் உடல்நலத்தையும் முற்றிலுமாக சிதைத்து, அவர்களை அழிவின் விளிம்பிற்குத் தள்ளியது.

மஹான்களின் தரிசனம்

# ஸ்ரீமத்குழந்தையானந்த ஸ்வாமிகள்

- நிதீஸ்வரன்

ஒரு முறை அல்ல பல முறை சமாதியிலிருந்து வெளிப்பட்டு பாரதத்தின் பல இடங்களில் தோன்றி அருள் புரிந்த மகான்களில் ஒருவர் குழந்தையானந்த ஸ்வாமிகள்.

1627ல் மதுரையை அடுத்த சமயநல்லூரில் அண்ணாஸ்வாமி சர்மா, திரிபுரசுந்தரி தம்பதியினர் வசித்து வந்தனர். செல்வச் செழிப்பான குடும்பம். அதீத தெய்விக நம்பிக்கை. ஏழை எளிய மக்களுக்கு வாரிவழங்கும் சுபாவம் கொண்ட இந்த தம்பதிக்கு குழந்தை பாக்கியம் இல்லை. இருவரும் மதுரை மீனாட்சி கோயிலுக்கு வந்து குழந்தை வரம் வேண்டிப் பிரார்த்தனை செய்தனர். இவர்களின் பிரார்த்தனையின் பலனாக அத் தம்பதியருக்கு 2 குழந்தைகள் பிறந்தன. மூத்த குழந்தை உடலில் தெய்வீகக் குறியீடுகளைக் கொண்டு பிறந்தது. அந்தக் குழந்தையைத் தனது கோவிலில் அர்ப்பணிக்க வேண்டும் என்று அன்னை மீனாட்சி, அண்ணாஸ்வாமி கனவில் தோன்றி கட்டளையிட்டாள். அம்மனின் விருப்பப்படி, அந்தக் குழந்தையை கோவிலில் விட்டனர்.

மறுநாள், குழந்தைக்கு யார் பால் புகட்டுவார்கள் என்று கவலைப்பட்ட பெற்றோர் கோவிலுக்குச் சென்றனர். அங்கு அருகில் யாரும் இல்லாதபோதும் குழந்தை பால் குடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தனர். அன்னை மீனாட்சியே அந்த குழந்தையை முழுமையாகக் கவனித்துக் கொள்வதை அப்படி உணர்த்தினாள் எனலாம். அன்று முதல், அந்தப் பிள்ளை கோவிலிலேயே தங்கி, அம்மனுக்குப் படைக்கப்படும் பிரசாதத்தை உண்டு வளர்ந்தது. குழந்தைக்கு 16 வயது இருக்கும் போது பெற்ற அன்னை இறந்து போனார். அச்சமயத்தில், அன்னை மீனாட்சியைத் தரிசிக்கக் காசியிலிருந்து கணபதி பாபா என்ற மகான் வந்திருந்தார். அப்போது கோவில் இருந்த சிறுவன் இராஜகோபாலனைக் கண்டதும், இவனே தமக்கு சரியான சீடன் என்றெண்ணி தன்னுடன் காசிக்கு அழைத்துச் சென்றார். அவருடன் சென்ற ஸ்வாமிகள் கணபதி பாபாவிடமிருந்து பல சாஸ்திரங்களை கற்றார். பின் குருவின் அனுமதியுடன் புனித்தலங்களை தரிசிப்பதற்காகத் ஸ்தல யாத்திரை மேற்கொண்டார்.

கைலாசம், பத்ரிநாத், கேதார்நாத் போன்ற இமய மலைப் பகுதிகளுக்கு யாத்திரை மேற்கொண்ட இராஜகோபாலன் நேபாளம் வந்தடைந்தார். நேபாள மன்னன் அவரை வரவேற்று பூஜித்தான். தன் சீடனை ராஜாக்களும் பூஜிப்பதைக் கண்ட குரு கணபதி பாபா, இராஜகோபாலனுக்கு இராஜ பூஜிதா என்று பட்டம் சூட்டினார். இந்த இராஜகோபாலனே குழந்தையானந்த ஸ்வாமிகள் என்று அறியப்பட்டார். நேபாளத்தை அவர் வந்தடைந்த போது அப்போதைய நேபாள மன்னரின் மகன் மரணமடைந்த துக்கத்தில் இருந்தார். தன் மகனை உயிர்ப்பித்து தரக் கோரி கதற, ஸ்வாமிகள் ராஜகுமாரனின் பிணம் வைக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்று கதவை தாளிட்டுக் கொண்டு விட்டார். மூன்று நாள் கழித்து ஸ்வாமி வெளியே வந்தார், அப்போது இளவரசனும் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தவன் போல் உயிர்தெழுந்து வந்தான்.

பின்னர் காசிக்கு வந்த ஸ்வாமிகள் பல ஆண்டுகள் நிர்விகல்ப சமாதியில் இருந்தார். அவர் முதுகில் லிங்கம் போன்ற மூன்று குழிகள் இருந்ததால் த்ரைலிங்க ஸ்வாமிகள் என்றும் அழைக்கப்பட்டார். ஸ்வாமிகள் காசியில் இருந்தபோது கங்கையில் மிதப்பதைப் பலர் பார்த்துள்ளனர். பல நாட்கள் கங்கை நதி நீரில் சமாதியில் அமர்ந்திருப்பதையும் அங்கு வாழ்ந்த மக்கள் பார்த்துள்ளனர். காசியிலுள்ள காசி விஸ்வநாதர் மற்றும் பைரவர் கோயில்களைப் புனரமைப்பதில் முக்கியப் பங்காற்றியுள்ளார். அதன் பின் காசியிலேயே சமாதியானார். இது தான் இவரின் முதல் சமாதியாகும். காசியில் இவரின் சமாதி பஞ்சகங்கா காட் அருகே அமைந்துள்ளது.

ஸ்வாமிகள் காசியில் இருந்தபோது, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரை தரிசத்து உரையாற்றியுள்ளார். அதன் பின் இவர் தான் உண்மையான பரமஹம்சம் என போற்றி புகழ்ந்துள்ளார். பின்னாளில் விவேகானந்தரும் ஸ்வாமிகளை தரிசித்து ஆசி பெற்றுள்ளார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், தன் சிஷ்யர்களிடம் காசிக்குச் சென்று ஸ்வாமிகளை தரிசித்து ஆசி பெறுமாறு அறிவுறுத்துவாராம்.

காசியில் ஸ்வாமிகள் சமாதியான பிறகு மீண்டும் மதுரைக்கு அருகில் உள்ள சித்தாலங்குடி என்ற ஊரில் தோன்றினார். இங்கு மீண்டும் சமாதியாகி மறு உருவம் எடுத்து கதிர் வேலப்பர் என்ற பெயரில் தென்காசி மாவட்டத்தில் தோன்றியுள்ளார். சில காலம் இங்கு வசித்த ஸ்வாமிகள் இங்கேயே சமாதி ஆகிறார். இந்த சமாதி குழந்தை வேலப்பர் சமாதி என்று

அழைக்கப்படுகிறது. பின்னர் மறுபடியும் அவதரித்துத் திருவண்ணாமலைக்குச் சென்று நிஷ்டையில் ஆழ்ந்து அங்கேயே சமாதியடைந்துள்ளார்.

அதற்கடுத்து மீண்டும் மதுரையில் தோன்றினார் ஸ்வாமிகள். அவர் மதுரையில் தோன்றிய போது குள்ளமான உருவம், பருத்த தொந்தி, வட்டமுகம், மழலைப் பேச்சு என்று ஸ்வாமிகளின் தோற்றம் பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியது. இதனாலேயே அவருக்கு குழந்தையானந்தர் என்ற பெயர் நிலைத்து விட்டது. பல ஆண்டுகாலம் மதுரையில் வசித்த ஸ்வாமிகள் அங்கு அவரை வணங்கிய பல பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இவருக்கு என்று தனி ஆஸ்ரமம் எதுவும் இல்லாமல் தனக்கு இஷ்டபட்ட இடத்திற்குச் சென்று அடுத்த இடம் செல்லும் வரை அங்கே வசித்திருப்பதை வழக்கமாக கொண்டிருந்தார். இக்காலகட்டத்தில் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.

ஒரு முறை அவர் ஒரு பக்தர் வீட்டுக்குச் சென்ற போது அவர் த்ரைலிங்க ஸ்வாமிகள் படத்தை வைத்து வழிபட்டு வந்துள்ளார். அதைக் கண்ட ஸ்வாமிகள், என்னோட அந்த வேஷத்தையும் வைத்திருக்கிறாயா? பேஷ் பேஷ் என்று கூறியுள்ளார். இதன் வாயிலாக குழந்தையானந்தா ஸ்வாமிகளின் பூர்வஜென்மே ஸ்ரீத்ரைலிங்க ஸ்வாமிகள் என்று உணர முடிகிறது. தினந்தோறும் மீனாட்சி அம்மன் ஆலயத்திற்குச் செல்வதை வழக்கமாக வைத்திருந்த ஸ்வாமிகள் அன்னை மீது பல்வேறு பாடல்களை புனைந்திருக்கிறார்.

ஸ்வாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள் பலப்பல. அவற்றுள் ஒன்று, 1920ஆம் ஆண்டு வாக்கில் மதுரை ஸ்டேஷனில் கல்யாணராமய்யர் என்பவர் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தார். ஒரு நாள் ஸ்வாமிகள் சென்னைக்குப் புறப்படவிருந்த மெயிலில் முதல் வகுப்பில் ஏறி உட்கார்ந்தார். அது ஒரு வெள்ளைக்கார துரைக்காக ரிசர்வ் செய்யப்பட்டிருந்தது. துரை வந்து தனது இடத்தை விட்டே ஆகவேண்டும் என்று கோபமாகப் பேச, ஸ்டேஷன் மாஸ்டர் வந்து ஸ்வாமிகளைக் கீழே இறக்கி விட்டார். ரயில் கிளம்பும் நேரம் வந்தது. டிரைவர் எஞ்ஜினை இயக்கினார். அது நகரவில்லை. எவ்வளவோ முயன்றும் அது நகரவில்லை என்பதால் காரணம் என்ன என்று ஆலோசிக்கத் துவங்கவே உடனடியாக அனைவரும் ஸ்வாமிகள் கீழே அமர்ந்திருப்பதால் தான் ரயில் நகரவில்லை என்று கூறினர். ஸ்டேஷன் மாஸ்டர் ஓடோடி வந்து ஸ்வாமிகளிடம் மன்னிப்புக் கேட்டு அவரை துரை இருந்த இடத்தில் அமர்த்தி அவருக்கு வேறு சீட் கொடுத்தார். ரயில் நகர்ந்தது. அதிலிருந்து ஸ்டேஷன் மாஸ்டர் அவரது பரமபக்தராகி விட்டார் என்பதைச் சொல்லத் தேவையில்லை

தேவி உபசானையில் இவரது ஞானம் அளப்பரியது. ஒருமுறை திண்டுக்கல்லில் மிகப்பெரியளவில் ஸ்ரீசக்ர பூஜை மற்றும் சண்டி ஹோமம் போன்றவற்றை ஸ்வாமிகள் நடத்தியுள்ளார். அச்சமயம் பல அதிசயங்கள் நடந்துள்ளன. பல ஆண்டுகாலம் மதுரையில் அனுக்கிரஹம் புரிந்த ஸ்வாமிகள் 1932ம் ஆண்டு நவராத்திரியின் இறுதி நாளான விஜயதசமியன்று மதுரையில் சமாதி அடைந்தார். மதுரை அரசரடியில் அவர் சமாதியை அமைத்தனர். அவரின் சமாதியில் அவர் உருவாக்கிய ஸ்ரீசக்ரமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.



இன்றும் ஸ்வாமிகளின் அரசரடி அதிஷ்டானத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சென்று அருள் பெற்று வருகின்றனர். இது தான் அவரின் இறுதி சமாதி என்று கூறப்பட்டாலும், அடுத்து வெளியே கிளம்பி எங்கேனும் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறாரா? எந்த பெயரில் இப்போது உலவுகிறார் என்று யாரால் சொல்ல முடியும்?

***ஸ்ரீமத்குழந்தையானந்தர் பாதகமலம் போற்றி!***

# அபிஷேகம்

-செல்வம்



ஆனி மாதம் அபிஷேகத்திற்கு சிறப்பு. புகழ்பெற்ற நடராஜர் அபிஷேகம், பெருமாள் கோயில் திருமஞ்சனம் என்று எல்லா கோயில்களிலும், அபிஷேகத்திற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. வெயிலின் தாக்கம் இருக்கும் இந்தக் காலத்தை சம்ஸ்க்ருதத்தில் க்ரீஷ்ம ருது என்றும், தமிழில் முதுவேனில் காலம் என்றும் அழைப்பர். கதிரவனின் வெப்பம் அதிகம் இருக்கும் இந்தக் காலத்தில், வழிபாட்டு முறைகளிலும் குளிர்ச்சியைக் கொடுக்கும் பழக்க வழக்கங்களை நாம் கடை பிடிக்கிறோம். ஆடி மாதம் கூழ் ஊற்றுவது, ஆனித் திருமஞ்சனம் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டு.

பூஜா விதிகள், பொதுவாக வைதீக முறை, ஆகம முறை என்று இரண்டு பிரதான முறைகளில் வகுக்கப்பட்டுள்ளன. ஆகம முறைகளில், சைவத்தில் 28 ஆகம முறைகளும், வைணவத்தில் 2 ஆகம முறைகளும் பின்பற்றப்படுகின்றன. பூஜை முறைகளும் ஆகமத்திற்கேற்ப மாறுபடுகின்றன. ஆனி மாதம், அபிஷேகக் காலமென்பதால் அபிஷேகத்தைப் பற்றிய செய்திகள் சிலவற்றைப் பார்ப்போம்.

வீடுகளில் நடத்தப்படும் ருத்ராபிஷேகத்தில் பயன்படுத்த வேண்டிய திரவியங்கள் என்னென்ன என்பதை இந்த ஸ்லோகம் விவரிக்கிறது.**ப்ரதமம்**
**கந்ததைலஞ்ச த்விதீயம் பஞ்சகவ்யகம் |**
**பஞ்சாம்ருதம் த்ருதீயம் ஸ்யாத் க்ருதஸ்நானம்**
**சதுர்த்தகம் ||**
**பஞ்சமம் பயஸாஸ்நானம் ததிஸ்நானம் து**
**ஷஷ்டகம் |**
**ஸப்தமம் மதுனா ஸ்நானம்**
**இக்ஷுஸாரமதாஷ்டமம் ||**
**நவமம் பலஸாரம் ஸ்யாத் தசமம் நாளிகேரகம் |**
**ஏகாதசம் கந்ததோயம் த்வாதசம் ஜலமுச்யதே ||**

சந்தனாதித் தைலம், பஞ்ச கவ்யம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கரும்புச்சாறு, பழரசம், இளநீர், சந்தனம், தண்ணீர் என்ற வரிசையில் அபிஷேகத்துக்குப் பயன்படுத்த வேண்டும் என்று இந்த ஸ்லோகம் விதித்துள்ளது. வைதீக முறையில் நடத்தப்படும் பூஜைகளில் இந்த முறை பின்பற்றப்படுகிறது.

ஆகம விதிகளின் அடிப்படையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோவில்களில் சில திரவியங்கள் கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றன.

எண்ணெய், பஞ்சகவ்யம், மாவு, நெல்லிமுள்ளி, மஞ்சள்பொடி, பஞ்சாமிருதம், பால், தயிர், நெய், தேன், கரும்பின் சாறு, (பழங்கள்), பழ ரசங்கள், இளநீர், அன்னாபிஷேகம், சந்தனம், நன்நீர் என்று வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

**இதில் பஞ்சாமிர்தம் இரு வகை :**

***(1) ரஸ பஞ்சாமிர்தம்*** - ஏலக்காய் முதலிய வாசனைப் பொருட்கள் சேர்த்த நீருடன் பால், தயிர், நெய், சர்க்கரை, தேன் இவைகளைச் சேர்த்துச் செய்யப்படுவது.

***(2) பல (பழ) பஞ்சாமிருதம்*** - மேற்குறிப்பிட்ட பொருட்களுடன், முக்கனியும் (வாழை, பலா, மா) மற்றுமுள்ள பழங்களையும் கூட்டிச் செய்வது

**பஞ்சகவ்யம் :** கோமயம் (பசுஞ்சாணம்), கோஜலம், நெய், தயிர், பால், இவைகளைக் கலந்து, அதைக் கூட்டுவதற்கான மந்திரத்தைச் சொல்லி, அவற்றைக் கலந்து, பின் பூஜித்து, பிறகு அபிஷேகத்துக்கு உபயோகிக்க வேண்டும். இந்தப் பொருட்கள் ஒரு மாட்டிலிருந்து, அதுவும் நம் பாரம்பரிய இன மாடுகளிலிருந்து எடுத்தால் சிறப்பு. இதில் ஒவ்வொரு பொருளைச் சேர்க்கும்போது, ஒவ்வொரு மந்திரத்தைச் சொல்ல வேண்டும். கோ ஜலத்தை சேர்க்கும்போது காயத்ரி மந்திரம் சொல்ல வேண்டும். கோமியத்தைச் சேர்க்கும்போது கந்தத் த்வாராம் என்று தொடங்கும் ஸ்ரீ சூக்த மந்திரம் சொல்ல வேண்டும். ஆப்யாஸ்வ என்ற மந்திரத்தைச் சொல்லி பாலைச் சேர்க்க வேண்டும். ஆப்யாஸ்வ என்று தொடங்கும் மந்திரம் சாம வேதத்தில் உள்ள ஒரு புனிதமான மற்றும் பிரசித்திப் பெற்ற மந்திரத்தின் தொடக்க வார்த்தையாகும், இது "வளர்ச்சி அடைவாயாக" அல்லது "நிறைவடைவாயாக" என்று பொருள்படுகிறது. "சூக்ரமஸி ஜ்யோதிரஸி தேஜோஸீ என்ற மந்திரத்தால் நெய்யைச் சேர்க்க வேண்டும். இது ஒரு சக்திவாய்ந்த வேத மந்திரம் ஆகும். இதன் பொருள் "நீங்கள் சுத்தமாக, ஒளிமயமாக தேஜஸுடன்

இருக்கிறீர்கள்" என்பதாகும். இந்த சொல் யஜுர்வேத மந்திரங்களில் (குறிப்பாக "தேஜோஸி தேஜோ மயி தேஹி" - எனக்குள் ஒளியையும் சக்தியையும் தாருங்கள்) மற்றும் உதகசாந்தி போன்ற சடங்குகளில் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. தயிரைச் சேர்க்கும்போது "ததிக்-காவண்ண" என்ற ருக் வேத மந்திரம் அல்லது "தத் விஷ்ணோ" போன்ற விஷ்ணு மந்திரங்கள் உச்சரிக்கப்படுகின்றன. தயிரில் வாயு பகவான் எழுந்தருளுவதாக ஐதீகம். இது சுக்கில விருத்தி மற்றும் புத்திர பாக்கியம் தரும் மருத்துவக் குணம் கொண்டது.

ஐந்து பொருட்களையும் ஒன்றாகக் கலக்கும் போது, "பஞ்சகவ்யே அபிஷேகம், மஹா பாதக நாசனம், பஞ்சகவ்ய அபிஷேகந்து தேவ சான்னித்தயமேவே ச!"

அபிஷேகத்தில் பயன்படுத்தப்படும் பொருட்களின் பலன்கள் மூல ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. சிலவற்றை நம் முன்னோர்கள் பல கிரந்தங்களிலிருந்து எடுத்து, தொகுத்துத் தந்துள்ளனர்.

சுத்தமான நீரால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தால் மனம் சாந்தி அடையும். நல்லெண்ணெய் கொண்டு அபிஷேகம் செய்தால் விஷசுரம் நிவர்த்தியாகும், பக்தி ஏற்படும். சந்தனாதித் தைலம் சுகம் தரும், பால் தீர்க்காயுள் தரும், தயிர் நன்மக்கட்பேறு கிடைக்கச் செய்யும், தேன் இனிய குரல்வளம் தரும், நெய் வீடுபேறு அடைய உதவும், சர்க்கரை எதிரிகள் தொல்லையை நீக்கும், பஞ்சாமிர்தம் உடல் வலிமையைக் கொடுக்கும், மாம்பழம் வெற்றியைத் தரும், கரும்புசாறு நல்ல உடல் நலம் கொடுக்கும், இளநீர் போகம் அளிக்கும், எலுமிச்சம் பழம் சகல பகையை அழிக்கும், அன்னம் சகல பாக்கியங்களும் தரும், பன்னீர் புகழ் சேர்க்கும்.

ஆண் தெய்வமூர்த்திக்கு நறுமணப் பொடியும், பெண் தெய்வமூர்த்திக்கு நறுமணப் பொடியும், மஞ்சள்தூளும் அபிஷேகம் செய்ய வேண்டும்.

இந்தப் பொருட்கள் விருப்பப்படி பயன்படுத்தப்படுவதில்லை. காமிக ஆகமம், காரண ஆகமம், அஜித ஆகமம் போன்ற ஆகம நூல்கள் எந்த நாளில் எந்தத் தெய்வத்திற்கு எந்தப் பொருளை, எந்தக் கலசத்தில், எந்த மந்திரத்துடன், எந்த முத்திரையுடன் பயன்படுத்த வேண்டும் என்பதைத் துல்லியமாகக் கூறுகின்றன. மூத்த அர்ச்சகர் ஆகம விதிகளின்படியே அபிஷேகத்தை நடத்துவார்; தன்னிச்சையாக மாற்றமாட்டார்.

ஆகம விதிமுறைகளின்படி எந்த ஒரு அபிஷேகமாக இருந்தாலும் குறைந்தபட்சம் அது ஒரு நாழிகை அளவு அதாவது இருபத்து நான்கு நிமிடங்கள் இருக்க வேண்டும். சில கோவில்களில் இந்த நேரம் சில ஆகமவிதிகளுக்கு உட்பட்டு மாற்றப்படும்.

**வேதங்களிலும் ஆகமங்களிலும் அபிஷேகம்**

புனிதப் பொருள்களுக்கு நீராட்டு செய்யும் மரபு வேத காலத்திலிருந்தே உள்ளது. ரிக் வேதத்தின் புருஷ சூக்தம் மற்றும் ஆப்ரிஹோத்ர சூக்தம் ஆகியவற்றில் சோமரசமும் நெய்யும் யாக நெருப்பில் அர்ப்பணிக்கப்படுவது குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் யஜுர்வேதத்தின் ஸ்ரீ ருத்ரம் (ருத்ர சூக்தங்கள்) சிவலிங்கத்திற்கு செய்யப்படும் ருத்ராபிஷேகத்தின் முக்கிய மந்திரங்களாக அமைந்தன.

**ருத்ராபிஷேகம்**



ருத்ராபிஷேகம் என்பது சிவபெருமானுக்கே உரிய அபிஷேகமாகும். இதன் போது ஸ்ரீ ருத்ரம் (நமகம் மற்றும் சமகம் - யஜுர்வேதத்தின் தைத்திரீய சம்ஹிதை) முழுமையாக ஓதப்படுகிறது.

- மகா ருத்ராபிஷேகம்: நமகத்தின் 11 அனுவாகங்களும், சமகத்தின் 11 அனுவாகங்களும் முழுமையாக ஓதப்படும்.
- ஏக ருத்ரம் மற்றும் லகு ருத்ரம்: சுருக்கமான வடிவங்கள்; பல கோயில்களில் வழக்கமாக நடைபெறுகின்றன.

மகா ருத்ராபிஷேகத்தில் 11 அர்ச்சகர்கள் தனித்தனி இடங்களில் அமர்ந்து ஒரே நேரத்தில் முழு ஸ்ரீ ருத்ரத்தையும் பாராயணம் செய்வார்கள்.

திருமஞ்சனம் (வைணவ அபிஷேகம்)

வைணவக் கோயில்களான திருப்பதி, ஸ்ரீரங்கம், திருவனந்தபுரம், திருமலை ஆகிய தலங்களில் இதே வழிபாடு திருமஞ்சனம் என அழைக்கப்படுகிறது.

அபிஷேகத்தின் முறை ஒத்திருந்தாலும், பயன்படுத்தப்படும் பொருட்களும் மந்திரங்களும் மாறுபடும். திருமஞ்சனத்தின் போது பொதுவாக விஷ்ணு சூக்தம், புருஷ சூக்தம், ஸ்ரீ சூக்தம், நாராயண சூக்தம் ஆகியவை பாராயணம் செய்யப்படுகின்றன.

# சினிமா சாரல்

- சேஷு


## Dridam - த்ரிதம்

***ஜியோ ஹாட்ஸ்டார் ( மலையாளம்)***

மார்டின் ஜோசப் இயக்கத்தில் ஷேன் நிகாம், சானியா ஃபாத்திமா, ஷோபி திலகன், தினேஷ் பிரபாகர் உள்ளிட்டோர் நடித்து கடந்த மே மாதம் திரைக்கு வந்த இந்த திரைப்படம் கடந்த வாரம் ஓடிடி தளமான ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளியாகியுள்ளது.

கேரளாவில் உள்ள இடுக்கி மாவட்டத்தில் உள்ள குழிநிலம் எனும் ஒரு சின்ன கிராமத்தில் உள்ள காவல் நிலையத்துக்கு புதிதாக எஸ்ஐ அதிகாரியாக பதவியேற்க படித்து டிரைனிங் எல்லாம் முடித்த ஹீரோ விஜய் (ஷேன் நிகாம்) வருகிறார். அந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும் அவரை சக போலீஸ்காரர்கள் ரொம்பவே அன்புடன் வரவேற்கின்றனர். மேலும், இந்த ஸ்டேஷனுக்கு உட்பட்ட பகுதிகளில் பெரிதாக குற்றச் சம்பவங்களே நடந்ததில்லை என சொல்கின்றனர்.

ஆனால், ட்ரைனிங் SI விஜய் வந்ததிலிருந்தே அதிர்ச்சிகரமாக சில கொலைகளும் ஒரு ஆனைமலை ஃபைனான்ஸ் கம்பெனியில் பெரிய கொள்ளை சம்பவமும் அரங்கேறி அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. அதனை பார்த்து அப்செட்டாகும் விஜய் அந்த ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் இல்லாததால் அந்த பொறுப்பையும் சேர்த்து பார்க்க வேண்டிய சூழலில் யார் கொலை பண்றாங்க, பல சவரன் நகைகள் இருந்த லாக்கரை திருடிச் சென்ற கும்பல் யார் என்பதை கண்டுபிடிக்கப் போராடும் கதை தான் இந்த த்ரிதம்.




மலையாளத்தில் நயாட்டு, ரோந்த், ஆபீஸர் ஆன் ட்யூட்டி என காவல்துறையை மையமாக வைத்து பல படங்கள் வெளியாகி, சில ரசிகர்களின் வரவேற்பையும் பெற்றது. அந்தவகையில் த்ரிதம் திரையில் சுமாரான வெற்றியும், ஓடிடியில் நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது. விசாரணை அனுபவம் இல்லாத ஒரு அப்பாவி போலீஸ் அதிகாரியாக ஷேன் நிகாமின் நடிப்பு அசத்தல். படத்தின் கடைசி சீன் வரை கொஞ்சம் அச்சமும், தான் எடுத்த வழக்கு அடுத்தடுத்த சிக்கலில் தான் சிக்கிக் கொள்ளும் பாத்திரத்தை மிக இயல்பான தனது நடிப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் ஷேன் நிகாம்.

வித்யா கதாபாத்திரத்தில் நடிகை சானியா ஃபாத்திமா நடிப்பு நேர்த்தி. ஸ்டேஷனுக்கு புதிதாக விஜய் பதவியேற்க வரும் போதே அவரை சைட் அடிக்கத் தொடங்குகிறார். காலையில் கராத்தே பயிற்சி செய்யும் போது வித்யாவை பார்த்து ஹீரோ ஜொள்ளு விடுகிறார். மற்ற காலவர்களுடன் இணைந்து சரக்கு அடிக்கும் போது கராத்தேவையும் சரக்கையும் மிக்ஸ் பண்ணக் கூடாது என மறைமுகமாக ஹீரோயினுக்கு அட்வைஸ் சொல்லும் காட்சி ரசிக்கத்தக்கது.

ஸ்டேஷனில் விஜயுடன் ஜாலியாக பழகும் சக போலீஸ்காரர்கள் அவருக்கு எதிராக க்ளைமாக்ஸில் ஏன் திரும்புகிறார்கள் என்பது தான் படத்தின் ட்விஸ்ட். ஹீரோ, ஹீரோயின் ரொமான்ஸ், பாடல் என எதுவுமே இல்லாமல் கதையை போரடிக்காமல் நகர்த்தும் இயக்குநர் மார்டின் ஜோசப்பை பாராட்டலாம். இயக்குநரின் இந்த த்ரில்லர் முயற்சி ஏன் என ஆராயும் போது தான் தெரிகிறது த்ரிஷ்யம் இயக்குநர் ஜீத்து ஜோசப்பின் உதவி இயக்குநராக இருந்ததால் ஏற்பட்ட தாக்கம் என புரிகிறது.

பி.எம்.உன்னிகிருஷ்ணனின் கேமரா, வி.எஸ். விநாயக்கின் எடிட்டிங் அருமை. லிண்டோ தேவஸியா, ஜோமோன் ஜான் ஆகியோரின் திரைக்கதை நன்றாக உள்ளது என்றாலும், சில தேவையில்லாத காட்சிகள், இன்னும் கதையை வேகமாக நகர்த்தும் வகையில் எடுத்திருக்கலாம் என்று தோன்றுகிறது. அதே போல ஸ்டன்ட் காட்சிகளும், நிஜமாகவே அடித்துக் கொள்வது போல இயல்பாக எடுக்கப்பட்டுள்ளது. த்ரில்லிங் ஜொனரில் ஆஹோ ஓஹோ என சொல்லும் அளவுக்கு இல்லை என்றாலும் குடும்பத்துடன் தாராளமாகப் பார்க்கலாம்.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.